

லஷ்ம
கூண்டுக்கு வெளியே

# கூண்டுக்கு வெளியே

## 1

இரண்டாண்டு காலம் வேலை நிமித்தமாக அங்கேயே தங்க வேண்டியிருந்ததால் நிரஞ்சனுக்குப் பெங்களூர் மிகவும் பிடித்துப் போய்விட்டது.

சித்திரை வைகாசி மாதங்களில் சென்னை நகரம் கோடை வெப்பத்திலே வெந்து கொண்டிருந்தபோது, எங்கே திரும்பினாலும் குளுமையாகச் செக்கச் செவேல் என்று பச்சை இலைகள் நடுவே பூத்துக் குலுங்கிய செங்கொன்றை மரங்கள் அணி செய்த சாலையிலே, சுத்தமான நடைபாதையிலே, பங்களாக்களின் தோட்டங்களிலிருந்து மிதந்து வரும் செண்பகப்பூ வாசத்தை இழுத்துக் கொண்டு நடக்கும்போது அவனுக்கு உற்சாகமாகத்தான் இருந்தது.

கடந்த ஓராண்டு காலமாக அந்த உற்சாகம் பன் மடங்காகப் பெருகிவிட்டிருந்தது.

அதற்கு சுமித்திராதான் காரணம்.

அல்சூர் சாலையில் இருந்த அவனுடைய அலுவலக நண்பன் கேசவன் வீட்டின் மாடிப்பகுதியில் தனியறை ஒன்றை அவன் வாடகைக்கு எடுத்திருந்தான், சாப்பாடு ஓட்டலில்.

கேசவனின் தாய் ஜகதாவுக்கு அவனிடம் வாடகை வாங்கிக் கொள்ள மனமே இருக்கவில்லை.



"நீயும் எனக்கு ஒரு பிள்ளைபோல, கல்யாணமாகி வசதியா ஒரு குடியிருப்பைத் தேடிக்கொள்ளும் வரை சும்மா இருந்திட்டுப் போயேன். நான் என்ன இந்த வீட்டைத் தலையிலா தூக்கிட்டுப் போகப் போறேன்" என்று பல தடவை சொல்லிப் பார்த்தாள். அவன் கேட்கவில்லை. ஏதோ வாடகை என்று ஒருசிறு தொகையை அவன் கொடுத்துக் கொண்டிருந்தான்.

கேசவனின் தந்தை உயிருடன் இருந்த காலத்தில் வாங்கிக் கட்டிய பெரிய மாடி வீடு அது. ஜகதாவால் வயதுக் காலத்தில் நோயுடன் போராடிக்கொண்டு அதை நிர்வகிக்க முடியவில்லை... கீழ்ப்பகுதியைப் பழுதுபார்த்து ஒழுங்கு செய்து ஒரு தொழில் நிறுவனத்தின் அலுவலகத்துக்கு வாடகைக்கு விட்டிருந்தாள். தன் ஒரே மகனுடன் மாடியில் வசித்துக் கொண்டிருந்தாள். வேண்டாத சாமான்களைக் குவித்திருந்த அறைக்குப் பக்கத்தில் இருந்த ஒருசிறு அறையைத்தான் நிரஞ்சனுக்கு வசிக்கக் கொடுத்திருந்தாள். அவனுக்கு இடைஞ்சல் இல்லாதிருக்க வேலையாட்கள் உபயோகித்த பின்புற மாடிப்படிகள் வழியையே அவன் உபயோகித்தான்.

கூடியவரை அதிகமாக வற்புறுத்தி அழைத்தால் ஒழிய அவன் அவர்கள் வசிக்கும் பகுதிக்குள் மறந்தும் தலைகாட்டுவதில்லை. தன்மானம் நிறைந்தவன். அவனுக்கு என்று சில கொள்கைகள் வைத்துக் கொண்டிருந்தான்.

அன்று காலையில் அவன் அந்த அம்மாளிடம் சொல்ல வந்தான்.

"தீபாவளிப் பண்டிகைக்காக நான் சென்னைக்குப் போக இருக்கிறேன், நாளை பகல் பிருந்தாவன் எக்ஸ்பிரஸில் பயணம்."

"இந்தா! இதை இப்பவே எடுத்து வச்சுக்க, எனக்கு ஞாபக மறதி அதிகம். நானே பின்னினேன். உன் அண்ணன் குழந்தைக்கு என் பரிசு."

சொல்லிக்கொண்டே அவள் மெல்ல நடந்தபடி உள்ளேயிருந்து ஒரு சிறு பிளாஸ்டிக் பையை எடுத்து வந்தான்.

"நல்லா இருக்கான்னு பார்" அவன் கையில் கொடுத்தாள்.

ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைக்கு அணிவிக்கும் நீல வண்ணக் கம்பளியால் பின்னிய சட்டை, கழுத்து முடிப்பிலே தொங்கிய குஞ்சலங்களை மெல்ல ஆடவிட்டு வேடிக்கை பார்த்தான்.

"ஆண் பிள்ளைக்கு நீலம் பொருத்தமான கலர், உனக்குப் பிடிச்சிருக்கா?" புன்முறுவலித்தாள்.

"நன்றி. ரொம்ப அழகா இருக்கு. உங்களுக்கு ஏன் சிரமம். கண்ணால் பார்த்திராத ஒரு குடும்பத்து மேலே இத்தனை பரிவு ஏன்?" என்று வியப்புடன் கேட்டான்.

"உன்னைப் பார்க்கிறேனே தம்பி? ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோற்றைத்தானே தொட்டுப் பதம் பார்க்கிறோம்? நல்ல கௌரவமான குடும்பத்திலே பிறந்தபிள்ளை. என் மகனுக்கு இப்படி ஒரு நல்ல தோழன் கிடைச்சிருக்கானேன்னு சந்தோஷப் படறேன். தம்பி, உனக்கும் ஒண்ணு வச்சிருக்கேன்! இந்தா! தீபாவளிக்கு என் பரிசு!" பின்புறமாகக் கையில் மறைத்து வைத்திருந்த ஒரு பெரிய பொட்டலத்தைக் கொடுத்தாள்.

"என்னங்க இதெல்லாம்?" திகைத்துப் போய்விட்டான் நிரஞ்சன்.

"போன வருடம் என் கொழுந்தன் போயிட்டான் இல்லையா? தீபாவளிப் பண்டிகை இல்லாமப் போயிடுச்சு. இந்த வருடம் கொஞ்சம் சிறப்பாகவே கொண்டாடுவோம்; அடுத்த வருடத்தை யார் கண்டாங்கிற நினைப்பு. கேசவனுக்குச் சட்டை எடுக்கப்போ, உன்னையும் நினைச்சிட்டு அவன் அளவிலேயே எடுத்திருக்கேன். பிடிச்சிருக்கான்னு பார்."

நூறு ரூபாய் பெறுமானமுள்ள உயர்ந்த வகைச் சட்டை அது. பிரமித்துப் போய்விட்டான் நிரஞ்சன்.

இரண்டு ஆண்டு பழக்கம். யாரோ பெற்ற பிள்ளை மீது இந்த அம்மாளுக்கு இத்தனை பரிவா?



'அதே சமயம் பத்து மாதம் சுமந்து பெற்ற அவன் அன்னைக்கு அவன் மீது எத்தனை வெறுப்பு?' என்ற நினைவும் நெஞ்சை உறுத்தியது. கண்கள் பனிக்க, நெஞ்சு விம்மிப் புன்னகை செய்தபடி வாங்கிக் கொண்டான்.

"நன்றியம்மா. இதுக்கெல்லாம் நான் தகுதியானவனா?"

"ரொம்பத் தகுதியானவன், அப்பா. உன்னை நான் எப்படி மறக்க முடியும்? உட்கார். காபி கொண்டு வர்றேன்" என்று உபசரித்தாள்.

இப்படிப்பட்ட தாயன்புக்குத்தானே அவன் தவியாய்த் தவித்து ஏங்கிக் கொண்டிருக்கிறான்.

முன் அறையில் கிடந்த சுகமான இருக்கையில் அமர்ந்து கண்களை ஓடவிட்டபோது, பார்வை அந்த மூலையில் இருந்த பூச்சாடி மீது விழுந்தது.

உடனேயே அந்த நிகழ்ச்சியின் நினைவு!

அவனும் மறக்க முடியாதே!

அப்படித்தானே அவனுக்கு அந்த அன்னையின் அறிமுகமும் அன்பும் கிடைத்தன.

வேலைக்கு அமர்ந்த புதிதில் அவன் ஓர் ஓட்டல் அறையில் தங்கியிருந்தான். சம்பளத்தில் கணிசமான பகுதி தங்கும் இடத்துக்கே கரைந்துவிடுமே என்ற கவலையில் தங்க வேறு இடம் தேடினான். அதே அலுவலகத்தில் பணி புரிந்த கேசவன் விரைவில் நண்பன் ஆனான். அவன்தான் சொன்னான், "எங்கள் வீட்டு மாடியில் ஒரு தனி அறை இருக்கிறது. என் தாயை வந்து பாரேன், உதவுவாங்க" என்று.

முகவரியைத் தேடிக்கொண்டு வந்துவிட்டான். கீழ்ப்பகுதி வீடு பூட்டப்பட்டிருந்தது. அதைப் பழுது பார்க்கிறார்கள் என்பதற்கு அறிகுறியாகத் தோட்டத்திலே இங்குமங்கும் கற்களும் மணலும் குவியலாகக் கிடந்தன.

நண்பன் சொன்னபடி பின்புறத்து மாடிப்படிகள் வழியே மேலே வந்தான். அழைப்பு மணியை அழுத்தினான். பதில்

இல்லை. பலமுறை அழுத்திப் பயன் இல்லாமல் போகவே, கதவை ஓங்கித் தட்டினான். அது தானாகவே திறந்து கொண்டது.

தயங்கியபடி உள்ளே வந்தான். முன் அறை மூலையில் கையில் ஒரு கொத்து மலர்களைப் பிடித்துக்கொண்டு பூச்சாடி வைத்திருந்த பெரிய முக்காலி அருகே கம்பளத்தின் மீது சுருண்டு கிடந்தாள், அந்த அம்மாள்.

நிரஞ்சன் நடுநடுங்கிப் போய் விட்டான். நெஞ்சு படபடக்க மெல்ல அருகே வந்து பார்த்தான். மயக்கமாகத்தான் கிடந்தாள், அவள்.

அவனுடைய தாயை ஒத்த வயதுதான் அவளுக்கும். தன் நினைவின்றிக் கிடந்த அந்தக் கோலத்தைக் காண அவன் மனம் பதறியது.

கேசவன் சொல்லியிருந்த விஷயம் புத்தியில் பளிச்சிட்டபோதுதான் அவன் துணிவாகச் செயல்பட்டான்.

கேசவனின் தாயாருக்குச் சர்க்கரை நோய் முற்றியிருந்தது. அவன் மருத்துவன் அல்ல. ஆனாலும் கேள்விப்பட்டிருந்தான். சர்க்கரை நோயாளிகள் சில சமயம் அதிகப் படியான மருந்தை அளவுக்கு மீறி உள்ளே ஊசியால் செலுத்திக் கொண்டு விட்டால், சர்க்கரைச் சத்து உடலில் குறைந்து மயக்கம் போட்டு விடுவார்கள். அது ஆபத்தான சங்கதி. சட்டென்று அந்த வீட்டின் சமையல் அறைக்குள் ஓடி அலமாரியைத் தேடினான். நல்ல வேளையாக சர்க்கரை முதல் வரிசையில் இருந்த ஒரு கண்ணாடி பாட்டிலில் இருந்தது. ஒரு தம்ளரில் நிறையச் சர்க்கரையை அள்ளிப்போட்டு, குடத்து நீரைச் சாய்த்துக் கலக்கிக் கொண்டு ஓடி வந்தான்.

"அம்மா சாப்பிடுங்கள்! இதோ பாருங்கள்" என்று மயங்கிக் கிடந்த அவள் வாயில் சிறிது சிறிதாக ஊற்றினான்.

மந்திரம் போட்டது போல் கண்களை மெல்லத் திறந்து அவனைக் குழப்பத்துடன் பார்த்தாள்.



"யாரப்பா நீ?" என்று கேட்டுக் கொண்டே மெல்ல எழுந்து உட்கார்ந்தாள்.

"கேசவனின் நண்பன், நிரஞ்சன்."

"நீ வருவேன்னு சொன்னான். மைசூருக்கு முந்தா நாள் போனவன், இன்னும் வரலே, வேலைக்காரியை அனுப்பிட்டுக் கதவைத் தாழ்போட மறந்து... பூக்களை அடுக்கி ஜாடியில் வைக்க வந்தேன். பிறகு சாப்பிடலாம்னு இன்சுலின் ஊசி போட்டுக்கிட்டு... மறந்தே போயிட்டேன். அதன் விளைவு மயக்கம் வந்துவிட்டது. நல்லவேளை நீ வந்தே! இல்லாவிட்டா என் மகன் என்னை பிணமாகத்தான் பார்த்திருப்பான்" என்று தழுதழுத்தாள் அவள்.

அப்படி ஏற்பட்டது அறிமுகம். அந்த அம்மாளுக்கு அவன் ஆபத்துக்கு உதவிய தெய்வமாகி விட்டிருந்தான். "அருகே அவனை அந்த அறையில் தங்க வைத்துக் கொண்டால் சில சமயங்களுக்கு உதவுவான், ஒரு துணையாயிற்று என்ற நம்பிக்கை அவளுக்கு. அதனால்தான் வாடகை வேண்டாம் என்று மறுத்துப் பார்த்தாள். செய்த உதவிக்கு கூலி வாங்கியது போலாகும் என்று மறுத்து விட்டான் அவன்.

"காபியைச் சாப்பிடு அப்பா! இன்னிக்கு ஆபீஸ் போகலையா?" அன்போடு விசாரித்தாள் ஜகதா.

"ஒருவாரம் ஓய்வு எடுத்திருக்கிறேன். ஊருக்குப் போய் ஆறு மாசத்துக்கு மேலாகிறது. அம்மாவைப் பார்க்கணும்னு ஆசை."

"நீ இந்தக் காலத்துப் பிள்ளைகளில் தவறிப் பிறந்தவன். பெரியவங்ககிட்ட மதிப்பு மரியாதை வச்சு நடந்துக்கிறே. படிச்சிட்டும் அடக்கமா இருக்கே. நீ நல்லா இருக்கணும்பா. இந்தத் தாய் உன்னை வாழ்த்தறேன்."

காபியைப் பருகிய அவன் தொண்டையை என்னவோ பிடித்து அழுத்தியது போல ஒருகணம் திணறிப் போய் விட்டான்.

"வேலை கிடைச்சிருக்கு அம்மா. நாளைக்குக் காலையி லேயே வேலையில் சேர்ந்துடணும்னு உத்திரவு வந்திருக்கு. நல்லவேளை மெயிலில் டிக்கெட்டு கிடைச்சுட்டது வாழ்த்துங்கோ!, என்று காலில் விழுந்து அவன் தன் தாயைக் கும்பிட்டபோது, "எழுந்திரு! இன்னிக்கு என் விரத நாள்னு தெரியும் இல்லையா? தலை முழுகி நான் பூஜைக்குத் தயாராக இருக்கிறேன், நீ தீட்டும் எச்சிலுமா வந்து என் காலைத் தொட்டுத் தொலைச்சுட்டே. நான் மறுபடியும் தலை முழுகி யாகணும்." சுள்ளென்று எரிந்து விழுந்தாள். அதுதான் அவனுக்கு பெற்ற தாயிடம் கிடைத்த ஆசி மொழிகள்.

அந்த நினைவு இப்போது அவன் நெஞ்சை அடைத்தது. வேதனையை விழுங்கிக் கொண்டு தம்ளரை முக்காலி மீது வைத்துவிட்டு எழுந்தான்.

"வர்றேன் அம்மா!" ஜகதாவிடம் விடை பெற்றுக் கொண்டான்.

பரிசுப் பொருள்களைப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிவிட்டு, கதவையும் பூட்டிக்கொண்டு கடைத் தெருவுக்குக் கிளம்பினான்.

பண்டிகை சமயம் வீட்டுக்குப் போகிறான். எல்லோருக்கும் ஏதாவது பரிசுப் பொருள் வாங்கிக்கொண்டு போக வேண் டாமா?

மகாத்மா காந்தி சாலைக்குள் புகுந்தான். சிலுசிலு வென்று கம்பளிச் சட்டையை ஊடுருவிய குளிர் காற்று வீசிய காலை வேளை. வெப்பமே தெரியாமல் பச்சைக் குழந்தையின் பட்டு விரல்கள் போல் உடலை வருடிய வெயிலில் குளித்தபடி அவன் மெல்ல நடந்து கொண்டிருந்தான்.

"ஹாய்!"

அந்தக் குரல் தேனாக அவன் காதுகளைத் தழுவி உடம்பைச் சிலிர்க்கச் செய்தது.

திகைப்புடன் திரும்பினான்.



ரோஜா வண்ணக் கம்பளிச் சால்வையை அழகாக மேலே போர்த்திக் கொண்டு, கையில் ஒரு பிளாஸ்டிக் கூடையுடன் நடைபாதையில் நின்று கொண்டிருந்தாள் சுமித்திரா.

அவனைக் கண்டதும் ஏற்பட்ட மகிழ்ச்சியில் அவள் கண்கள் பளபளத்தன. கன்னம் இரண்டும் சிவந்திருந்தன.

"எங்கே இப்படி? உரிமையுடன் கேட்டான் அவன்.

"அதையே நானும் கேட்கிறேன்." அவள் மோகனமாக முறுவலித்தாள்.

சற்று முன் அவன் மனத்தைப் பிழிந்த துயர உணர்வு போன இடம் தெரியவில்லை. அப்படி அவள் மீது அவனுக்கு ஒரு கிறக்கம்.

அவளுக்கும் அப்படியேதான்.

பேசத் தோன்றாமல், நடைபாதையில் நின்றபடி சில விநாடி இருவரும் பார்வையிலேயே எண்ணங்களைப் பரிமாறிக் கொண்டனர்.

## 2

அவர்கள் இருவரும் அமைதியாக நடந்தனர்.

எதிர்ப்புறத்து நடையை ஒட்டிய சுவரின் பின்னிருந்து எட்டிப் பார்த்த வண்ண வண்ண போகன் வில்லா மலர்கள். நீலவானம், பசுமையாகத் தலைவிரித்து நின்ற சாலை மரங்கள் எல்லாமே நிரஞ்சனுக்கு மிக மிக அழகாகத் தோன்றின.

சுமித்திராவின் அருகே நிற்கும் வாய்ப்பும், பேசும் சந்தர்ப்ப மும் கிடைத்தபோதெல்லாம் அவனுக்கு வாழ்க்கை சொர்க்க மாக, இனிமையான போதையைக் கொடுத்தது.

"சுமி! அந்தக் கூடையைக் கொடு, கனமா இருக்கும் போல் தோணுதே? நான் தூக்கிட்டு வர்றேன். காலை வேளை யிலே கடைக்குக் கிளம்பிட்டியே? அவன் கையில் இருந்த

கூடையை வாங்கிக் கொண்டான். உண்மையில் அது சிறிது கனமாகத்தான் இருந்தது.

நீலகிரி சூப்பர் மார்க்கெட் திறந்தவுடனேயே புகுந்து வீட்டுக்கு வேண்டியதை வாங்கிக்கொண்டு வந்திருந்தாள். ரொட்டி, வெண்ணெய், பிஸ்கெட்டுகள், மொச்சைக் கொட்டை, பயிறு-உளுந்து என்று பிளாஸ்டிக் பைகளில் சாமான்கள் தோள்பட்டையே இறுக்கும் கனம்.

"அப்பா வரலையா? நீ தனியே கடைக்கு வந்துட்டியே?"

"அவருக்கு முட்டி விக்கம். நடக்க முடியலே. நீ போய் வாங்கிக் கொண்டு வான்னு உத்தரவு கொடுத்தார். ஏன் நான் வந்தது உங்களுக்குப் பிடிக்கலையா?" கேலியாகக் கேட்டபடி முத்துப் பற்கள் தெரிய மெல்லச் சிரித்தாள்.

சாலை நடுவே நிற்பதைக் கூடப் பாராமல் அவளை அள்ளித் தான் நெஞ்சோடு அணைத்துக் கொள்ள வேண்டும் போன்ற ஆத்திரம் அவனுக்குள் ஏற்பட்டது.

"பிடிக்கலேன்னு சொல்ல முடியுமா? இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்கலையேன்னுதானே தவிக்கிறேன்?" அவனும் சிரித்தபடி மெல்ல நடந்தான்.

"நான் முழுவதும் ஏன், என் வாழ்க்கை முழுவதும் இப்படி உன்னோட மெல்லத் தோளில் உரசியபடி, குளுமையான காற்றில் கவலைகளை மறந்து நடந்து கொண்டே இருக்க வேண்டும் போன்ற ஆசை இருக்குன்னு சொன்னால் நீ நம்புவியா?"

"எனக்கும் அப்படித்தான் இருக்குன்னு சொன்னால் நீங்க நம்புவீங்களா?"

"நம்பமாட்டேன்னா நீ ஒத்துக்குவியா?" கேலியாகக் கேட்டுவிட்டு நிரஞ்சன் சிரித்தான். அவளும் சிரித்தாள்.

அப்பொழுதுதான் நினைவு வந்து விழித்துக் கொண்டான். "நல்லவேளை, நீ வந்திருக்கே, எனக்கோர் உதவி செய்யணும். பண்டிகைக்கு எல்லோருக்கும் பரிசு வாங்கிப் போகக் கடைக்கு



வந்திருக்கேன். யாருக்கு என்ன வாங்குறதுன்னு புரியலே, கொஞ்சம் உதவி செய்யேன்."

"அப்போ பண்டிகைக்கு எங்களையெல்லாம் விட்டு ஊருக்குப் போகப் போறீங்க? ஊரும் நான் மாட்டேன்!" போலியான கோபத்துடன் அவள் சிணுங்கினாள்.

"உன்னைவிட்டுப் பண்டிகைக்கு ஊருக்குப் போக விருப்பம் இல்லை. ஒப்புக் கொள்கிறேன். அம்மாவைப் பார்த்து ஆறு மாசமாகிறதே? அவங்க எப்படியிருக்காங்களோன்னு கவலை, குடும்பப் பாசம் ஒரு பக்கம். காதல் ஒரு பக்கம். நான் ரொம்பச் சங்கடப்படறேன்?"

"வேண்டாம், கதாரிக்கக்கோங்க. அடுத்த வருடமே நாம் ரெண்டு பேரும் சேர்ந்து தலை தீபாவளி கொண்டாடறாப்பல சம்மதத்தை வாங்கிட்டு வந்திடுங்க."

"முக்கியமாக அதுக்காகவுந்தான் போறேன். ஓட்டல் சாப்பாடு வெறுத்துப் போச்சே?" புன்முறுவலித்தான்.

"வாங்க, கடைக்குள்ளே. நேரமாகுது, நான் உங்களை இங்கே சந்துச்சதுபத்தி, மூச்சுவிடப் போறதில்லை. சீக்கிரம் போய்ச் சமைக்கப் போறேன். நீங்கள் கடையில் வாங்க வேண்டியதை வாங்கி முடிச்சுண்டு, அப்பாவைப் பார்க்க வராப்பல வழக்கம் போல வந்திடுங்க."

"சாப்பிட்டுட்டு உங்கப்பா, எதிரே குத்துக்கல்லாட்டமா உட்கார்ந்திருக்கும் போது, உன்கிட்ட உலக விஷயத்தைப் பேசிட்டு, அப்பா கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியாமல் முழிக்கட்டுப் போன்னு சொல்றே?"

"அப்பா, அப்படிக் கண்டிப்பா இருக்கிறது நல்லது இல்லையா?"

"ஒரு சினிமா, டிராமா, ஒரு சுற்றுலா ஒன்றுக்கும் உன்னைக் கூட்டிப் போக அனுமதி கொடுக்க மாட்டேங்கறாரே! ஆனால், கல்யாணம் பண்ணிக்க மட்டும் அனுமதி கொடுத்துட்டார். ஆமாம், இவ கூடக் காதலிச்சுத்தானே கல்யாணம் செய்து கொண்டவர்; கலப்புத் திருமணமாச்சே? அப்படியிருந்தும்..."

"அந்த அனுபவத்தினாலதான் அப்பா கண்டிப்பா இருக்கார். அம்மா கன்னடக்காரங்க.. அப்பா தமிழர், வேலைக்கு வந்த இடத்திலே உங்களை மாதிரி அவருக்கு இந்த ஊர் பெண் மேலே காதல் வந்துட்டுது. பெண் கேட்கப் போன போது அந்தக் கன்னடக்காரர் அப்பாவை அடிக்கவே வந்துட்டாராம். பின்னே எப்படியோ சமாளிக்க, காலிலே விழுந்து...' கன்னங் குழிய அவன் சிரித்தான்.

"உங்கப்பா காலில் நான் எப்பவோ விழுந்தாச்சு. இனியும் என்ன கண்டிப்பு வேண்டியிருக்கு?"

"இது சம்பந்தமா நானே கண்டிப்பா இருக்கப் பிரியப் படறேன். கல்யாணம் ஆன பிறகு இருக்கவே இருக்கு. இணைபிரியாம நாம் எப்பவும் கூட இருக்கப் போறோம். அந்தப் புதுமையின் இனிமையை ஏன் இப்பவே குலைக்கணும்? சரி, பொழுது ஓடுது. வாங்க" என்று கடைக்குள் புகுந்தான்.

அரசியவார் அங்காடிக்குள் அவனுக்கு தெரிந்தவர்கள் சிலரும் பொருள்கள் வாங்க வந்திருந்தனர். கன்னடமொழியில் அவர்களுடன் சரளமாக உரையாடிக்கொண்டு அவன் இங்கு மங்கும் கடைக்குள் சுழன்று வந்தான்.

"இந்தாங்க, இந்தச் சிவப்பு மரச்சிமிழ் பார்க்க அழகா இருக்கும். உங்கள் அண்ணிக்கு இதைப் பரிசா வாங்கிட்டுப் போங்க." சென்னப்பட்டினத்து மரவேலைப் பாட்டில் சிவப்புச் சாயத்தில் அழகாக மின்னிய ஒரு பெரிய மரச்சிமிழை எடுத்துக் கொடுத்தான்.

"இதை அவர்கள் படுக்கையறை மேசைமீது வைத்துக் கொள்ளலாம். அறைக்கும் அழகு கொடுக்கும். தூங்கப் போகும் முன் உறுத்துகிற கொண்டை ஊசிகள், மோதிரம் முதலியவற்றைக் கழற்றி மூடிவைக்கவும் உதவும்.

"எங்கள் அண்ணி சுபாவத்தில் கோபக்காரிதான். அதுக்காக நீ சிவப்பா பார்த்து எடுத்தியா?" பரிகாசமாகக் கேட்டான்.



அவன் தேர்ந்தெடுத்த அந்த மரச்சிமிழ் அவனுக்குப் பிடித்திருந்தது.

அண்ணி வித்யா பெரிய இடத்துப் பெண். அவளுடைய அண்ணன் இருவரும் நல்ல பதவிகளில் இருந்தனர். இரு தமக்கைகளும் பெரிய இடத்திலே வாழ்க்கைப்பட்டிருந்தனர். கார், பங்களா, கான்வெண்ட் படிப்பு என்ற சூழ்நிலையில் வளர்ந்தவள்.

பையன் படித்தவன்; நல்ல வேலையில் இருக்கிறான். பார்க்க நன்றாகவும் இருக்கிறான் என்ற காரணங்களைக் கொண்டுதான், மத்தியதரக் குடும்பத்தைச் சேர்ந்த அவர்கள் வீட்டில் தங்களின் கடைசிச் சகோதரியைக் கட்டிக் கொடுத்திருந்தனர்.

அண்ணி வித்யாவுக்குப் பிறந்த வீட்டுப் பெருமையிலே தலைக்கனம் அதிகம். திருமணமாகி அவள், அவர்களுடைய குடும்பத்தில் வந்து வாழ ஆரம்பித்து மூன்று ஆண்டுதான் கழிந்திருந்தது. அதற்குள் வீட்டில் அவள் கொடிதான் ஓங்கிப் பறந்து கொண்டிருந்தது.

அவளிடம் அவன் இரண்டொரு தடவை பேசிவிட்டு மரியாதை அழிந்து மனம் கலங்கிய அனுபவம் உண்டு.

வேலை கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில்- கமன்லால் கடை மிட்டாயை வாங்கி வந்து, "அண்ணி, மகிழ்ச்சியான சங்கதி எனக்கு வேலை கிடைச்சுடுத்து. உங்களுக்கு இனிப்புக் கொண்டு வந்திருக்கிறேன்' என்றபடி சாப்பாட்டு அறை மேசை மீது வைத்தான்.

வித்யா புருவத்தை உயர்த்திக்கொண்டு பெட்டியை நோட்டம் விட்டாள்.

"அந்தக் கடையிலா வாங்கினே? சுத்தமான நெய்யாக இருக்காது. கண்ட கண்ட கடை பலகாரங்களையெல்லாம் நான் சாப்பிடற வழக்கம் இல்லை."

முகத்தில் அடித்தாற் போல் கூறிவிட்டு நகர்ந்து விட்டாள் அண்ணி.

அத்தனை திமிர் பிடித்தவள். பிறர் மனம் நோகுமே என்று பார்த்துப் பேசத் தெரியாத வீம்புக்காரி.

ஆசையுடன் அவன் வாங்கிக் கொண்டு போகும் அந்த மரச்சிமிழை முகத்தில் வீசியெறிந்தால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. அப்படிப்பட்டவள் அவள்.

உம்! அதற்காக அவன் செய்ய வேண்டிய கடமைகளை உதறவா முடியும்?

"என்ன யோசனை; இந்தக் கிலுகிலுப்பை உங்கள் அண்ணன் குழந்தைக்கு. இப்பத்தானே முதல் முதலாகப் பார்க்கப் போறீங்க? ஓர் அழகான பட்டுச் சட்டையும் வாங்கிட்டுப் போய்க் கொடுங்கள்."

"அம்மாவுக்கு ஏதாச்சும்..." தயங்கியபடி நின்றான் அவன்.

"உங்கள் அம்மாவுக்கு ரெண்டு கத்தை சந்தன ஊதுவத்தி. அண்ணாவுக்கு ஒரு நல்ல பட்டு டை வாங்கினால் பரிசுகள் வாங்கும் வேலை முடிந்து விடும். நானும் கிளம்பணும் நேரமாச்சு" என்றாள் சுமித்திரா.

"உனக்கு?" என்றான் நிரஞ்சன்.

உங்கள் அன்பு! அதுவே பெரிய பரிசு, என்று கூறி விட்டுத் தேர்ந்தெடுத்த பொருள்களை விற்பனையாளரிடம் காட்டிவிட்டு அவள் கிளம்பி விட்டாள்.

சிறிது தூரம் சென்றவள், திரும்பி மூச்சு இறைக்க ஓடி வந்தாள்.

"அங்கே வந்து அப்பாகிட்ட நாம் கடையிலே சந்திச்சோம்கறதைப் பத்தி ஏதாவது உளறி வைக்காதீங்க, புரிஞ்சுதா?" எச்சரித்துவிட்டு மீண்டும் வேகமாக விரைந்தாள்.

பணத்தைக் கட்டிவிட்டு, பொருள்கள் நிறைந்த பொட்டலங்களுடன் அவன் வெளியே வந்தான்.

எல்லாருக்கும் வாங்கி ஆயிற்று. அவனுடைய தந்தைக்கும், கேசவனின் தாயாருக்கும், கடைசியில் அவளுக்கும் ஏதாவது வாங்க வேண்டுமே?



கடைகள் பல நிறைந்த அந்தப் புதிய கட்டடத்துக்குள் நுழைந்தான். மாடிப் பகுதியில் போலி நகைகள் விற்கும் கடையில் ஒரே கூட்டம்.

தங்கம் விற்கும் விலையில் அவனால் ஓர் அழகான தங்க நகை வாங்கிப் பரிசளிப்பது கட்டுபடியாகாத காரியம். எனவே, தங்கம் தோய்ந்த வெள்ளிக் குண்டு மணிகளும், கருமணிகளும் கோர்த்துக் கோத்திருந்த அழகான கழுத்தணியை அவளுக்காகத் தேர்ந்தெடுத்தான்.

அதுவே விலை ஐம்பது ரூபாய்க்கு மேல் ஓடிவிட்டது.

கேசவனின் அம்மாவுக்கு பூக்களைக் கிண்ணங்களில் செருகி வைத்து வீட்டை அலங்கரிப்பதில் மிகப் பிரியம். அவளுக்குத் தன் பரிசாக ஒரு வெண்கலப் பூச்சாடியை வாங்கி வர்ணத்தாளில் சுற்றச் செய்து பெற்றுக் கொண்டான்.

சுமித்திராவின் தந்தைக்குக் கொஞ்சம் ஆப்பிள் பழங்களை வாங்கிக் கொண்டான்.

இனி ஆட்டோவைப் பிடித்துச் செங்கப்பா தெருவுக்குப் போக வேண்டியதுதான் பாக்கி. அதற்குள் நேரம் நடுப்பகலாகி விட்டது.

"வாப்பா" என்று அன்போடு எப்பொழுதும் அவனை வரவேற்கும் சுமித்திராவின் தந்தை சதாசிவத்தின் அறிமுகமும் அவனுக்கு எதிர்பாராத விதத்தில்தான் கிட்டியது.

## 3

ஒரு சனிக்கிழமை மாலைவேலை முடிந்ததும் கடைத் தெருவில் இறங்கிய நிரஞ்சன், அங்கே இருந்த ஓட்டல் ஒன்றில் நுழைந்தான். இரண்டு பரோட்டா- குருமா, ஒரு கோப்பை காபி இத்துடன் இரவு சாப்பாட்டைச் சிக்கனமாக முடித்துக்கொண்டு வெளியே வந்தான்.

அதற்குள் இருட்டத் தொடங்கிவிட்டது. தெரு விளக்குகள் பளிச்சென்று எரியத் தொடங்கின. நடைபாதை மீது பற்பல எண்ணக் குவியல்களுடன் அழுந்தியவனாக நடந்து கொண்டிருந்தவன் திடுக்கிட்டு நின்றான்.

"அப்பா! அம்மாடி!" என்று தமிழில் யாரோ வேதனையுடன் அரற்றும் குரல் வந்த திசையில் திரும்பிப் பார்த்தான்.

ஒரு கடையின் வாயில் ஓரமாகச் சுவரின் மீது சாய்ந்தபடி நடைபாதையில் வயதான ஒரு மனிதர் உட்கார்ந்திருப்பதைக் கண்டான்.

அது சமயம் பாதை மீது எத்தனையோ பேர் இங்கு மங்குமாக நடந்து கொண்டிருந்தனர். யாரும் அந்த மனிதன் பக்கம் திரும்பிப் பார்த்ததாகத் தெரியவில்லை. ஒரு சமயம் குடித்துவிட்டுப் போதையுடன் தடுமாறிக் கொண்டிருப்பதாக எண்ணி அசட்டையாகச் சென்றனரோ என்னவோ தெரியாது. ஆனால், அவரைத் தாண்டிக் கொண்டு செல்ல அவனுக்கு மனம் வரவில்லை.

சட்டென்று அருகில் நெருங்கி வீதி விளக்கு ஒளியில் உற்றுப் பார்த்தான். உட்கார்ந்திருந்தவருக்கு ஐம்பது வயதுக்கு மேல் இருக்கும். பட்டையாக நரை ஓடிய கிராப்பு. முடி கலைந்து நெற்றி மீது புரண்டுகொண்டிருந்தது. வேதனை பொங்கிய கண்கள். நெற்றியில் துளிர்த்து முகமெல்லாம் வேர்வைக் கோடாக வழிய மூச்சுத் திணறியபடி இடக் கையால் நெஞ்சைப் பிடித்துக் கொண்டிருந்தார்.

நிரஞ்சன் அரண்டு போனான். "என்ன ஐயா, உங்கள் உடம்புக்கு என்ன?" என்று பரிவுடன் குனிந்தபடி மெல்ல விசாரித்தான்.

தடுமாறிக் கீழே சாய்ந்துவிட்டவர் சமாளித்து எழுந்து உட்கார்ந்திருக்கிறார் என்று அவன் ஊகித்துக் கொண்டான். சுத்தமான அவரது வேட்டியும் ஜிப்பாவும் இங்கும் அங்கும் அழுக்காயிருந்தன.



"சாமான் வாங்க வந்தேன்... திடீர்னு மார்பிலே வலி..." மேலே பேசமுடியாமல் அவர் தடுமாறினார். கீழுதட்டைக் கடித்துக்கொண்டு, "ஐயோ!... என்று மறுபடியும் முனகினார்.

அப்போது தான் கவனித்தான், வலக்கையில் அவர் கெட்டியாகத் தமது பர்சைப் பிடித்திருந்தார். காலடியில் ஒரு துணிப் பை கிடந்தது. அவரும் தன்னைப் போல் ஒரு தமிழர் என்ற அளவில் அவனையும் அறியாமல் ஒரு பரிவு.

"கவலைப்படாதீங்க நான் உங்களை ஆஸ்பத்திரிக்கு அழைச்சுட்டுப் போறேன். கனிவாகச் சொன்னான்.

அவர் பலமாக தலையை ஆட்டினார். "என் வீட்டுக்கு அழைச்சுட்டுப் போனீங்கன்னா புண்ணியமுண்டு." தடுமாற்றத்துடன் பர்சைத் திறந்து, தம் முகவரி கொண்ட ஒரு சீட்டை அவனிடம் நீட்டினார்.

ஆட்டோ ஒன்றைப் பிடித்து அவரைக் கைத்தாங்கலாகத் தூக்கி நிறுத்தி, மெல்ல அதில் ஏற்றித் தானும் உட்கார்ந்து கொண்டான்.

கன்டோன்மென்டுப் பகுதியில் செங்கப்பா தெருவில் அந்த எண் வீட்டு எதிரே ஆட்டோ நின்றதும், சவாரிக்கு உண்டான தொகையைக் கொடுத்துவிட்டு அவரைப் பிடித்து மெல்ல இறக்கினான் நிரஞ்சன். கேட்டைத் திறந்தபோது துருப்பிடித்த கீல்களில் எழுந்த க்ரீச் ஓசை கேட்டதும், பச்சை வண்ணம் பூசப்பட்ட வாயிற்கதவு சட்டென்று திறக்கப்பட்டது.

உள்ளேயிருந்து எட்டிப் பார்த்த ஒரு பெண்ணைக் கண்டு அவன் ஒரு கணம் அயர்ந்து போனான்.

அலங்காரத்துக்கு முன் தேய்த்துத் துடைத்து நிறுத்தப் பட்டிருக்கும் அம்பிகையின் உற்சவச்சிலை போல், பளபள என்று அப்படி ஓர் அதிசயமான அழகு. அவளிடம்.

ஒரே பார்வைதான். வயது இருபது இருக்கும் என்று அவன் மனம் கணக்கிட்டுக் கொண்டது.

"அப்பா! உங்களுக்கு என்னப்பா?" பதறியபடி அவள் ஓடிவந்தாள்.

அகன்று நீண்ட கருவிழிகளில் கண்ணீர் திரண்டு மின்னுவதைக் காண அவன் மனம் சங்கடப்பட்டது.

"ஒன்றுமில்லை." முனகினார், அவர்.

"ரொம்ப நன்றி சார்!" என்று கூறியபடி மறுபக்கம் வந்து தன் அப்பாவைத் தாங்கியபடி அவள் மெல்ல அவரை உள்ளே நடத்திச் சென்றாள். சிறியதாக இருந்த முன் அறையை ஒட்டிய படுக்கை அறைக்குள் அழைத்துச் சென்று, கட்டிலின் மீது மெதுவாக அவரைப் படுக்க வைத்தாள்.

"மூன்று வருடத்துக்கு முந்தி அப்பா, வேலையிலிருந்து ஓய்வு எடுத்துக் கொண்டபோது மாரடைப்பு வந்து ஆஸ்பத்திரியில் இருந்தார். பிழைச்சதே மறு பிறவின்னு சொல்லணும். இப்போ மறுபடி அவருக்கு அதே..." பேசமுடியாமல் அவள் தொண்டை அடைத்தது.

உள்ளே ஓடி அலமாரிக்குள் இருந்து கொஞ்சம் சில்லறையையும் ஒரு துண்டுக் கடிதத்தையும் எடுத்து வந்தாள்.

"மூணாவது வீட்டிலே தொலைபேசி இருக்கு. அவசரத்துக்கு உதவுவாங்க. ஐம்பது பைசா கொடுத்தால் போதும். இதிலே எங்கள் குடும்ப வைத்தியரின் தொலைபேசி எண் இருக்கு. தயவுசெய்து.." தடுமாறிக் கொண்டு சில்லறையையும் கடிதத் துண்டையும் அவனிடம் நீட்டினாள்.

அதைப் பிடித்திருந்த அவள் விரல்கள் நடுங்கின. புயலில் அகப்பட்ட கொடி போல் அவள் துயரத்தில் துடிப்பதைக் கண்டு அவன் மனம் கரைந்து போனது. "நான் கூப்பிடறேன், கவலைப்படாதீங்க" என்று கடிதத் துண்டை மட்டும் அவன் பெற்றுக் கொண்டான்.

"நான், சுமித்திரா கூப்பிடச் சொன்னதாகச் சொல்லுங்க, அவ அப்பா சதாசிவத்துக்கு ரொம்ப நெஞ்சு வலின்னு சொல்லுங்கள். அவர் வேகமாக வந்துடுவார்" என்று கூறிக் கண்களைத் துடைத்துக் கொண்டாள் அவள்.



மூன்றாவது வீட்டை நோக்கி அவன் வேகமாக ஓடினான். அதற்குப் பின் நேரம் யுகமாக நீண்டு பயமுறுத்தியது.

முடிவில் வைத்தியர் வந்தார். சதாசிவத்தைப் பரிசோதனை செய்தார்.

"லேசான மாரடைப்பு. இது இரண்டாவது தடவையாக வந்திருக்கிறது. ஆட்டோவில் ஏறி வந்தது பெரிய தவறு. இந்த நிலையில் மறுபடியும் நோயாளியை ஆஸ்பத்திரிக்கு அகற்றுவது நல்லது அல்ல. ஊசி போட்டிருக்கிறேன். நன்றாகத் தூங்குவார். அடிக்கடி வந்து பார்த்துக் கொள்கிறேன். படுக்கையை விட்டு அசையக்கூடாது. நல்ல கவனிப்புத் தேவை. இந்த மருந்துகளை வாங்கிவைக்கணும்" என்று ஒரே மூச்சில் பேசிவிட்டு, ஒரு கடிதத்தில் மருந்துகளை எழுதி அவளிடம் கொடுத்துவிட்டு நகர்ந்தார்.

சூடான தேநீரைக் கோப்பையில் நிறைத்துக் கொண்டு வந்து அவன் முன்னறையில் முக்காலி மீது வைத்தாள்.

"உட்காருங்கள், முதலில் இதைச் சாப்பிடுங்கள். உங்கள் உதவிக்கு மிக நன்றி. நீங்கள் யார்னுகூடத் தெரியாது" என்று பரபரப்பாகத் தமிழில் பேசினாள் சுமித்திரா.

அவளையும் மீறிக் கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டபோது தான் அவன் பார்த்தான், தேநீர் தயாரிக்க சமையல் அறைக்குள் புகுந்தவள் அங்கே ஒரு மூச்சு அழுதுவிட்டு வந்திருக்கிறாள். அவள் கண்கள் செக்கச் செவேல் என்று இருந்தன.

"என்னத்துக்கு இதெல்லாம் இப்போ?" என்றான் அவன்.

"பரவாயில்லை. சாப்பிடுங்க. நீங்கள் யார்னு கூட நான் கேட்கலே. என் கவலைதான் எனக்குப் பெரிசா தெரிஞ்சது" என்று லேசாக முறுவலித்தாள்.

"என் பெயர் நிரஞ்சன், சென்னையைச் சேர்ந்தவன். இங்கே வேலை பார்க்கிறேன். தற்சமயம் அல்சூரில் ஒரு வீட்டில் குடியிருப்பு." சுருக்கமாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, கோப்பையைக் கையில் எடுத்துக் கொண்டான்.

அளவாக சர்க்கரையும் மசால் பொடியும் போட்டுத் தயாரித்த தேநீர், குடிக்கச் சுவையாக இருந்தது. அவனுக்கு உண்மையில் அது சமயம் தாகம் நாக்கை வறட்டிக் கொண்டு தான் இருந்தது. கோப்பையைக் காலி செய்துவிட்டு முக்காலி மீது வைத்துத் தலையை நிமிர்ந்தவன் பார்வை எதிர்ப்பக்கத்துச் சுவரில் படிந்தது.

சுமித்திராவைப் போலவே தோற்றம். ஆனால் நடுத்தர வயது. சட்டத்துக்குள் அடங்கியபடி புன்னகை செய்து கொண்டிருந்தாள் ஒரு பெண்.

"அவங்க?" என்று கேட்டு விட்டு அவன் முகத்தைப் பார்த்தான்.

"அவங்க என் அம்மா. எனக்குப் பத்து வயதாக இருக்கும் போது இறந்து போயிட்டாங்க. அதுக்குப் பின்னால் அப்பாதான் எனக்கு அம்மா அப்பா இரண்டும். இப்போ அதுக்குக் கூட மோசம் வந்திடும் போல..." அவளால் தொடர்ந்து பேச முடியவில்லை. கண்ணிலிருந்து பொல பொலவென்று கண்ணீர்த் துளிகள் கன்னத்தில் உருண்டு சிதறின.

நெஞ்சுருகிப் போய் விட்டான் அவன்.

இதென்ன விந்தை? அவன் தந்தையை இழந்தவன், அவள் தாயை இழந்தவள், இது எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி தான் இருவர் வாழ்விலும் இள வயதிலேயே ஈடு செய்ய முடியாத மாபெரும் இழப்பு அல்லவா ஏற்பட்டிருக்கிறது?

அதற்குப் பின்னர் இன்னும் ஒரு முறை நிரஞ்சன் அவரைக் கண்டு போக வந்தான். அவளையுந்தான்! படிப்படியாகச் சதாசிவம் குணமாகி, எழுந்து உட்கார்ந்து விட்டார். சில நாளில் முன்போலவே வீட்டுக்குள்ளும் வெளியேயும் அலையவும் தொடங்கினார்.

ஆரம்பத்தில் பரிவா, பாசமா, இரக்கமா என்று இனம் விளங்காத கலவை உணர்விலே ஏற்பட்ட ஈர்ப்பில் நிரஞ்சன், அவர்களை அடிக்கடி சந்தித்துக் கொண்டிருந்தான். இப்போது



அவள் மீது மட்டற்ற காதல் என்று மனத்தை நிறைந்த உணர்வுடன் தொடர்பு கொண்டிருந்தான்.

பல ஆயிரம் ஆண்டாக சுமித்திராவிடம் பழகி விட்டவன் போன்ற உரிமை நிறைந்த உறவும் அவன் உள்ளத்திலே உருவாகியிருந்தது.

திருமணம் வரை அவன் வந்து விட்டான். சதாசிவத்திடம் வாக்கும் கொடுத்திருந்தான். ஆனால், அங்கே சில பிரச்னைகள் எழக்கூடும் என்பதும் அவன் அறிந்ததுதான். என்ன விதமான இடர்கள் ஏற்பட்டாலும் அவன் ஒரே உறுதியாக இருக்கப் போவதும் உண்மையே.

திடீரென்று விழித்துக் கொண்டான்.

இடக்கை மணிக்கட்டைப் பார்த்தான். நேரம் பிற்பகல் ஒரு மணியை நெருங்கிக் கொண்டிருந்தது.

"அடடா! சுமித்ரா அவனுக்காக சாப்பிடக் காத்திருப்பாளே?" ஆட்டோ ஒன்றைப் பிடித்து ஏறி உட்கார்ந்தான்.

வாங்கிய சாமான் பொட்டலங்களை மார்புடன் அணைத்தபடி "செங்கப்பா தெருவுக்கு..." என்றான் ஓட்டுநரிடம்.

## 4

சதாசிவம் சுபாவத்திலே மிகவும் சுறுசுறுப்பான மனிதர். நோயும் வயதும், ஓரளவு ஒடுக்கிவிட்டாலும் அவர் களைத்து விடவில்லை.

தோட்டக்கலை மீது அவருக்கு அபார ஈடுபாடு. சுற்றுச் சுவர் மீது தவழ்ந்தபடி வெளியே எட்டிப்பார்த்த ஆரஞ்சு வண்ண போகன்வில்லா, சீராக வெட்டப்பட்டு அடக்கமாக வளர்க்கப்பட்டிருந்தது. கேட்டைத் தாண்டி உள்ளே நுழையு முன் கம்மென்று முகத்திலே வாசம் மோத இடப்பக்கத்திலே பூத்துக் குலுங்கிய சம்பகச்செடி, வலப்பக்கத்திலே வரிசையாக

ஒட்டு ரோஜாக்கள், வராந்தாத் தொட்டிகளில் வளர்ந்து நின்ற பலவகைக் குரோட்டன்ஸ்கள் இத்தனையும் அவரது முயற்சி.

ஆட்டோவிலிருந்து நிரஞ்சன் அவசரமாக இறங்கிய போது சதாசிவம் ஒரு கையில் பூவாளியும், மற்றொரு கையில் மண் கரண்டும் முள்ளும் பிடியுடனும் வாயில் பக்கம் நின்று கொண்டிருந்தார். மகிழ்ச்சியில் மலர்ந்த முகத்துடன் அவனை வரவேற்றார். "உட்கார், இதோ வந்துவிட்டேன்." சொல்லிக் கொண்டே அவற்றை ஒரு பக்கமாக வைத்துவிட்டு, கைகளைத் தோட்டத்து மூலையில் இருந்த குழாயில் கழுவிக் கொண்டார்.

காலையில் இருந்து ஓய்வே இன்றி அவர் வீட்டுக்குள் ஏதாவது செய்த வண்ணம் வளைய வந்து கொண்டிருந்தார். அந்த அலுப்பை இப்போதுதான் உணர்ந்தார். வேகமாக நடந்து படிகள் ஏறி வராந்தாவுக்கு வந்து நாற்காலியில் சாய்வதற்குள் அவருக்கு மூச்சுத் திணறியது.

"உட்கார், அப்பா!" பேசக் கூட முடியாத திணறல். வரவர தம் வலு ஒடுங்கிக்கொண்டு வருவதை அவர் புரிந்து கொண்டார்.

"நான் நாளைப் பகல் வண்டியில் சென்னைக்குப் போகிறேன். திரும்ப ஒரு வாரத்துக்கு மேலாகும். உங்களுக்குத் தெரிவிச்சுட்டுப் போக வந்தேன்." பணிவோடு பேசிய நிரஞ்சன், தன் கையிலிருந்த ஆப்பிள் பழங்கள் கொண்ட காகிதப்பையை அவர் கையில் வைத்தான். மீதம் இருந்த பொட்டலங்களை ஒரு பக்கம் தரையில் வைத்து விட்டு, அவர் எதிரே கிடந்த பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

"இதெல்லாம் எதுக்குப்பா?" அன்புடன் அவனைக் கடிந்து கொண்டார் சதாசிவம்.

"நீங்கள் விரும்பிச் சாப்பிடும் பழங்கள், சுமித்திரா சொல்லியிருக்கிறாள். மேலும் பண்டிகை நெருக்கத்திலே பெரியவங்களை வெறுங்கையோடவா வந்து பார்க்கிறது?" பற்கள் பளிச்சிட நிரஞ்சன் மெல்லச் சிரித்தான்.



அவருக்குப் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. சுமித்திரா அதிர்ஷ்டக்காரி. சந்தேகமே இல்லை; கை நிறையச் சம்பாதிக்கிற படித்த வாலிபன். பார்க்கக் கவர்ச்சியான தோற்றம், பணிவும் அன்பும் நிறைந்தவன்; உலகெங்கும் சல்லடை கொண்டு சலித்துத் தேடினாலும் கிடைக்காத வரன். அவர்களது அந்தஸ்துக்கு மீறிய உயர்ந்த இடத்துப் பிள்ளை. அவருக்குத் "திடீரென்று ஏதாவது நேர்ந்து விட்டால்" என்று இனி அவர் கவலைப் படத்தேவையில்லை. சுமித்திராவை ஒரு நல்லவன் கையில் ஒப்படைத்து விட்டுத்தான் போகிறோம் என்ற திருப்தி.

பலவும் வினாடியில் சிந்தித்து விட்டார். "நன்றி நிரஞ்சன். உனக்கும் உன் குடும்பத்தாருக்கும் எங்கள் தீபாவளி வாழ்த்துக்கள். இந்த முறை..." அவர் முடிக்காமல் நிறுத்தினார்.

காதுகள் இரண்டிலும் ரத்தம் பாய்ந்து சூடாகி விட்டதை அவன் உணர்ந்தான். வெட்கத்திலே அவன் கண்கள் சிறிது தாழ்ந்தன.

"இந்தத் தடவை நான் ஊருக்குப் போவதின் முக்கிய நோக்கமே அதுதான். அம்மா, அண்ணா இருவரையும் கலந்து கொண்டு விரைவாக முகூர்த்தத்துக்கு ஏற்பாடு செய்ய விரும்புகிறேன்."

"செய்யுடு, அப்பா. சுப காரியங்களை வெகுநாள் தள்ளிப் போடுவது நல்லதில்லேன்னு பெரியவங்க சொல்வாங்க. சுமித்திராவையும் உன்னையும் மணப்பந்தலில் பார்த்துட்டாப் போதும், அதோட நிம்மதியா நான் போயிடுவேன்."

நெஞ்சம் நெகிழ்ந்து போனான் நிரஞ்சன்.

"இதய வியாதி பொல்லாததுப்பா. எப்போ, எந்த வேளைன்னு சொல்லாமல் கொள்ளாமல் வந்து ஆளை அடியில் வீழ்த்திடும். அப்படி நேர்ந்து விட்டால், சுமித்திரா அநாதையாகிடுவா. ஏன்னா எங்களுக்குன்னு நெருங்கின உறவுக்காரங்க யாருமே இந்த ஊரிலே கிடையாது." நிறுத்தி மூச்சு வாங்கிக் கொண்டார்.

நான் திருநெல்வேலியைச் சேர்ந்தவன். எங்கள் கலப்பு மணத்துக்குப் பிறகு என் பக்கத்து உறவினர் துண்டித்துக் கொண்டு விட்டாங்க. அதைப் பின்னால் நான் தொடர்ந்து கொள்ளவில்லை. என் மனைவி அவள் வீட்டுக்கு ஒரே பெண். அவளுடைய பெற்றோர்கள் போன பிறகு சொந்தம்னு ஒட்டிக்கொள்ள அவள் பக்கத்திலே நெருங்கின உறவினர்கள் யாரும் அதிகம் கிடையாது. அதனால் நான் அந்தப்பக்கத்தையும் மறந்து போனேன். அதனால் சொல்றேன், எனக்குப் பிறகு சுமித்ரா அநாதை" அவருக்கு மூச்சு வாங்கியது.

"நான் இருக்கும்போது நீங்கள் அப்படிச் சொல்லலாமா? பரபரப்புடன் கேட்டான், நிரஞ்சன்.

"அந்த ஒரு தெம்பில்தான் இந்த நெஞ்சிலே உசிர் ஊசலாடிக் கொண்டிருக்கு. எனக்கும் ஏதாச்சும் நேர்ந்துட்டா கூட, நீ வார்த்தை தவற மாட்டேங்கிற நம்பிக்கையிலேதான் இந்த மூச்சே அடங்கியிருக்கு." உணர்ச்சி வசப்பட்டுப் போனார் அவர்.

நாற்காலி மீது படிந்திருந்த அவருடைய கரத்தை மெல்லக் குனிந்து பற்றிக் கொண்டான், நிரஞ்சன்.

கொடுத்த வாக்கை எந்த நிலையிலும் நான் காப்பாத்துவேன். அதைப்பத்தி உங்களுக்குத் துளியளவும் சந்தேகம் வேண்டாம். ஊரிலிருந்து விரைவாக நல்ல செய்தியுடன் வருவேன். கவலைப்படாதீங்க" என்றான் உறுதியாக.

"அடடா! பேசிக் கொண்டே இருக்கோமே? அம்மா சுமித்திரா மேசையிலே இன்னொரு தட்டை எடுத்து வை. யார் வந்திருக்கான்னு பார்." உள்பக்கம் திரும்பி உரத்த குரல் கொடுத்தார்.

சமையல் அறையிலிருந்து ஈரக்கையைச் சிறு துண்டில் துடைத்தபடி வெளிப்பட்டாள், சுமித்திரா.

அப்பொழுதுதான் அவளைப் பார்ப்பதுபோல் நடிக்கத்தான் விரும்பினான். தந்தையின் முகத்தைப் பார்த்ததும் அவளுக்குப் பொய் சொல்லத் துணிவு ஏற்படவில்லை.



"சமைக்கிற அவசரத்திலே சொல்ல மறந்துட்டேன். அப்பா! கடைத் தெருவிலே இவர் சாமான் வாங்கிட்டிருந்தார், பார்த்தேன். நாளைக்கு ஊருக்குப் போவதாகச் சொன்னார். இங்கு வந்து உங்களைப் பார்க்காமல் போக மாட்டார்னு நான் அப்பவே நினைச்சேன்."

இப்படித் திடீரென்று உண்மையைப் போட்டு உடைப்பாள் என்று எதிர்பார்க்காத நிரஞ்சன் திடுக்கிட்டுப் போனான்.

"ஏதாவது எனக்காக அதிகப்படி சமைக்கத் தொடங்கி விடுவாளோன்னுதான் நான் பயந்திட்டுச் சொல்லலே, சமாளித்த படி அவன் தலை குனிந்தான்.

'பெரிய கட்டுப்பொட்டுன்னு என்னைப்பத்தி ரெண்டு பேரும் தீர்மானிச்சிட்டீங்க இல்லையா?' சதாசிவம் அவர்கள் இருவரை யும் பார்த்தார். "சுமித்திரா வீட்டுக்கு வந்ததும் வராததுமாக அவசரமாகச் சமையல் அறைக்குள் ஓடினதும் என் மனத்தில் சின்னச் சந்தேகம். யாருக்காகப் பூரியும் உருளைக்கிழங்கு மசாலாவும் தயாரிக்கிறாள்? இம்? இதெல்லாம் என் உடம்புக்கு ஆகாதவை ஆச்சேன்னு நினைச்சேன். ஆட்டோ அந்தனை சத்தத்தோட வாசலில் நின்னப்போ வெளியே வந்து அவள் எட்டிப்பார்க்கலே. என் சந்தேகம் உறுதியாச்சு. கடைக்குப் போன இடத்திலே சந்திப்பு ஏற்பட்டிருக்கணும். முன்கூட்டி அவன் சொல்லியிருப்பான். அதனால்தான் சமையலில் இந்தப் பரபரப்புன்னு நான் புரிஞ்சு கொண்டு விட்டேன்." கை கொட்டிச் சிரித்தார் சதாசிவம். இருவர் முகமும் செவேலென்று சிவந்து போயின.

"அப்பா...!" என்றாள் வெட்கத்துடன் சுமித்திரா.

"உங்கள் ரெண்டு பேரையும் நான் பூரணமாக நம்புகிறேன். இனி கட்டுக்காவல் தேவையில்லை. அளவோடு சந்திக்க, அத்துமீறாமல் பழகுங்க. பிறகு வாழ்க்கை உங்களுக்குப் பல இன்பமான எதிர்பார்ப்புகளுடன் இனித்திருக்கும். மனசுக்கு நீங்களே ஒரு வேலை போட்டுக் கொள்ள தெரிஞ்சுக்கோங்க."

"மன்னிச்சுக்கங்க, அப்பா இவர் வரேன்னு சொல்லியிருந்தார். நான்தான் பயந்திட்டுச் சொல்லலே" வெட்கத்துடன் உள்ளே போய்விட்டாள், சுமித்திரா.

"நிரஞ்சன், பார்த்தியா? பெண்கள் சில சமயம் இப்படிதான் சமயத்தில் தவிக்க விட்டுடுவாங்க. அதனால் ஆண் பிள்ளை ஜாக்கிரதையாக இருக்கணும்." என்று கூறிக் கேலியாகச் சிரித்தார்.

"என்னையும் மன்னிச்சுடுங்கோ. நான் வந்ததுமே சொல்லியிருக்கணும்!" குழைந்தான், நிரஞ்சன்.

உணவுக்குப் பின் சதாசிவம் பத்திரிகையுடன் வராந்தாவில் சென்று இருக்கையில் அமர்ந்து கொண்டார்.

தனியே முன் அறையில் இருந்த நிரஞ்சன், எழுந்து சென்று சமையல் அறைக்குள் வேலையாக இருந்த சுமித்திராவின் கரத்தைப் பற்றி வெளியே இழுத்து வந்தான்.

"சமயத்துலே காலைவாரி விட்டுட்டியே? பலே ஆளு நீ!" போலியான கோபத்துடன் அவள் கன்னத்தைப் பிடித்து மெல்லக் கிள்ளினான்.

அவளுக்காக வாங்கி வந்திருந்த கருமணி மாலையைக் கையில் எடுத்தான்.

"இதை நானே என் பரிசாக உன் கழுத்தில் போடப் போகிறேன். எங்கள் வீட்டுப் பெண்கள் கல்யாணமானதும் தாலிச் சரட்டோடு கூட ஒரு கொத்து கருமணியும் அணிந்து கொள்கிற பழக்கம். இப்போ உன்னை இந்த மாலையால் நான் கட்டிவிட்டேன். இனி தப்ப முடியாது" கேலியாகப் பேசிக் கொண்டே அதை அவள் கழுத்தில் அணிவித்தான்.

ஓடிச் சென்று கண்ணாடிமுன் நின்று அழகு பார்த்துக் கொண்டாள். அவள் சிவந்த கழுத்துக்கு அந்தக் கருப்பு மணிகள் மிக்க எடுப்பாக இருந்தன.



"நீங்களும் இனி தப்ப முடியாது. எனக்கு இந்த மாலை போட்டு, முன்கூட்டியே உங்கள் வீட்டுப் பொண்ணாக்கிக் கொண்டு விட்டீங்க மறக்க வேணாம்."

கொஞ்சிய அவள் அருகில் வந்து ஆசையுடன் தன் இரு கைகளாலும் அவன் கழுத்தை இறுக்கமாக அணைத்துக் கொண்டாள்.

## 5

தீபாவளிக்காக ஊருக்கு வந்திருந்த நிரஞ்சன் மனத்தில் ஒரு துளியளவும் அமைதி இருக்கவில்லை. ஏற்கெனவே கலகலப்பாக அவனிடம் கமலம் பேசமாட்டாள். பண்டிகைக்கு முதல்நாள் குளியலறையில் வழுக்கிக் காலைச் சுளுக்கிக் கொண்டு நடக்க முடியாது படுத்துக் கிடந்தாள் அந்த எரிச்சல் வேறு.

வாடகைக் காரில் இருந்து இறங்கியதும் வேலைகாரன் சொன்ன செய்தியைக் கேட்டுப் பெட்டியையும் சாமான்களையும் முன்னறையிலே வைத்துவிட்டு செருப்பை நடையில் விட்டு விட்டு தாயைக்காண அவன் விரைந்தான்.

"அம்மா, காலில் பலத்த அடியாமே கேட்டு பயந்துட்டேன். வலி இப்போ எப்படி இருக்கு?" பரபரப்பாக விசாரித்தபடி கட்டிலின் அருகே வந்து நின்றான் நிரஞ்சன்.

"என்னவோ இருக்கு" என்ற கசப்பாகத் தொண்டை வரை வந்த வார்த்தைகளை விழுங்கிக் கொண்டாள். எத்தனை நாள் லீவில் வந்திருக்கே?

வந்ததும் வராததுமாக, "எப்போ திரும்பிப் போகப் போகிறே?" என்று அல்லவா மகனைக் கேட்கிறாள், பெற்றவள்!

"வாடா கண்ணு எப்போ வருவேன்னு எதிர்பார்த்து ஏங்கிட்டு இருந்தேன்" என்று அவள் அன்போடு ஒரு தடவையாவது

சொல்ல மாட்டாளா? என்ற ஏக்கத்தில் எழுந்த துயரம் அவன் நெஞ்சைக் குலுக்கியது.

"அடுத்த வாரம் வித்யாவின் அண்ணன் மகளும், அவள் கணவனும், குழந்தைகளும் ஆஸ்திரேலியாவிலிருந்து வராங்க, மாடியில் இரண்டு அறைகளையும் அவங்களுக்காக ஒழிக்கக் கொடுத்துடப் போறா வித்யா. அதனால்..." அவள் முடிக்காது மகனைக் கடுமையாக வெறித்தாள்.

"ஒற்றுமையிருந்தால் உழக்கிலும்கூடக் குடும்பத்துடன் ஒடுங்கிக் கொள்ளலாமே!" சொல்ல வேண்டும் போல் அவன் உதடுகள் துடித்தன.

வீடு-வித்யா அண்ணியின் பிறந்தகத்துச் சீதனம். அவளுக்கு இல்லாத உரிமை மற்றவர்களுக்குக் கிடையாது. ஒரு சமயம் அம்மாவிடம் அண்ணி அப்படிச் சொல்லியிருப்பாங்களோ?

கதவு மெல்ல திறக்கப்பட்டது. வித்யா பட்டுப் புடவை சரசரக்க மரத்தட்டில் பால் தம்ளரைச் சுமந்து கொண்டு வெளியே வந்தாள். மல்லிகைப்பூவின் வாசமும் முகப்பவுடரின் மணமும் அறைக்குள் வட்டமிட்டன.

"வா, தம்பி! இப்பத்தான் வந்தியா? உன் கடுதாசி வந்தது. பெட்ரோல் விலையில் வண்டியை நாங்கள் அடிக்கடி வெளியே எடுக்கறதேயில்லை. அதனாலே தான் ஸ்டேஷனுக்கு வண்டியை அனுப்பலே. எல்லாரும் சாப்பிட்டுட்டாங்க. உன் அண்ணா ரொம்பக் களைப்பா இருந்தார். அதனாலே சீக்கிரம் படுக்கப் போயிட்டார். சந்தனம் சாப்பாட்டை வச்சிக்கிட்டு உனக்காக சமையல் அறையிலே காத்திருக்கான். குளிச்சிட்டு சீக்கிரம் போய்ச் சாப்பிடு. வெந்நீர் வேணுமுனா சந்தனத்தைக் கேள். ஓர் அடுக்குத் தண்ணி சுடவச்சுக் கொடுப்பான்." முத்துப் பற்களைக் காட்டிச் சிரித்தபடி உத்தர விட்டாள்.

வித்யா பார்க்க அழகி. ஒப்பனை வேறு. பணத்தின் களைகூட எப்பொழுதும் அலங்காரமாக இருக்கப் பழகியவள். படீர் என்று வெடிக்கவும் தெரியும். வெகுளி போல் பேசவும் தெரிந்தவள். ஒருவகையில் அவள் ஒரு பச்சோந்தி.



நிரஞ்சன் வாயைத் திறக்குமுன் அவள் பால் தம்ளரை மாமியார் அருகே முக்காலி மீது வைத்தாள்.

"அத்தை! நீங்கள் வெகுநேரம் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. வலி தெரியாமல் இருக்க ஏற்கெனவே மருந்து சாப்பிட்டிருக்கீங்க. சூடா பாலைக் குடிச்சுட்டுக் கம்முனு கொஞ்ச நேரம் தூங்க முயற்சி பண்ணுங்கோ" என்று கூறி, அறையிலிருந்து நிரஞ்சனை மறைமுகமாக விரட்டினாள்.

மிதிப்படியைத் தாண்டி அவன் ஓர் எட்டுக்கூட அப்பால் போகவில்லை. அதற்குள் அம்மா கணீரென்று பேசியது கேட்டது. "இந்தப் பிள்ளைக்கும் எனக்கும் என்னிக்குமே ஒத்துவராத ஒரு ராசி. குவான்னு இவன் வாயைத் திறந்து அழுவதற்கு முந்தியே அம்மாவை அலறி அழவச்ச அதிர்ஷ்டக் காரன். போனவாட்டி இவன் வந்த போது புளு காய்ச்சலில் படுத்துவிட்டேன். இந்த வாட்டி இவன் வருமுன்பே என் காலை ஒடிக்கக் கழுத்திலே கட்டியிருக்கு. அப்பப்பா, துரதிர்ஷ்டம் பிடிச்ச பயல். எனக்குன்னு வந்து பிறந்தான்" என்று பொங்கினாள் தாய் கோபம் மிகுந்த குரலில்.

அதிர்ந்து போய் நின்று விட்டான், நிரஞ்சன். பெற்றவள் பேசும் பேச்சா, இது? அட கடவுளே! அம்மாவின் மனசிலே நிறைந்து வழியும் கசப்பு உணர்வு, என்றுதான் மறையப் போகிறதோ? துன்பப் பெருமூச்சுடன் குளியலறைக்குள் புகுந்தான்.

ஒருவார காலம் அவன் அங்கே தங்கியிருக்க வேண்டியது அவசியமா? பச்சைத் தண்ணீரில் குளித்துவிட்டு சந்தனம் சேறாகக் குழைந்து வைத்திருந்த சோற்றைச் சாப்பிடாமல் அவன் படுக்கப் புறப்பட்டான்.

"சாமான் அறைக்குப் பக்கத்திலே உள்ள சின்ன அறையிலே உங்கள் பெட்டியைக் கொண்டு சந்தன் வச்சிருக்கான். படுக்கையைக் கூடப் போட்டு வச்சிருக்கான்" எஜமானி சொன்னதைச் சந்தனம் மெல்ல ஒப்புவித்தான்.

நிரஞ்சனுக்கு இப்போது வெளிப்படையாக எல்லாமே புரிந்துவிட்டது. அண்ணி, அண்ணன், அம்மா மூவருக்கும் அவன் இப்போது ஒரு வேண்டாத விருந்தாளி. அதனால்தான் வேண்டாத சாமான்கள் போட்டு வைக்கப் பயன்படுத்தும் அறையில் அவனுக்குப் படுக்கை போட்டிருக்கிறார்கள். அத்தனை கேவலமாகி விட்டான். அவர்கள் நினைவில் அவன்!

ஆத்திரமும், அவமானமும் உடலை உலுக்க, கண் இமைகளைக் கண்ணீர் சுட, நெஞ்சைத் துக்கம் பாறாங்கல்லாக அமுக்க, அவன் வேகமாக அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டான்.

வேண்டாத வீட்டில் ஒருவாரம் இருக்கப் பிடிக்காமல் நிரஞ்சன் தீபாவளி முடிந்த அன்று காலை புகைவண்டி நிலையத்துக்குச் சென்று தன் பயணச் சீட்டை மாற்றிக் கொண்டான்.

அதிர்ஷ்டம் இல்லாதவன் என்று அம்மாவால் அசட்டை செய்யப்படும் அவனுக்கு, அடுத்த நாள் காலை பிருந்தாவனத்தில் ஓர் இடம் கிடைத்தது. மீதியான இரண்டு நாளை அவன் பெங்களூரில் சுமித்திராவின் அருகாமையில் ஆனந்த மன நிறைவுடன் கழிக்க விரும்பினான்.

அன்று இரவு சாப்பாட்டுக்குப் பின் எல்லாரும் முன்னறையில் உட்கார்ந்திருந்தனர்.

வயிறு நிறைந்த பின்னர் மனதிலும் நிறைவு ஏற்பட்டிருக்கும் என்று கணக்கிட்டுக்கொண்டு நிரஞ்சன் பேச்சைத் தொடங்கினான்.

வீட்டுக்குப் பெரியவன் என்று அண்ணனுக்கு மதிப்புக் கொடுக்க விரும்பி, "அண்ணா! உங்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும், என்றான்.

எல்லாரும் அவன் பக்கம் ஆவலுடன் திரும்பினார்கள்.

தனக்கும், சுமித்திராவுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் காதலை மிகைப்படுத்தாமல் சொல்லி, அவளை மணக்க



விரும்புவதாகவும், அவர்கள் அனைவரும் ஒப்புதல் தர வேண்டும் என்றும் சுருக்கமாகக் கூறிமுடித்தான்.

அண்ணன் ஆத்திரத்துடன் இருக்கையைவிட்டு எழுந்து நின்றான், "இவ்வளவையும் நீயே முடிச்சுண்டு சாவகாசமா இதைப்பத்திச் சொல்றதுக்கு வந்தியா?" கூச்சலிட்டான். உரத்த குரலில்.

"உங்கள் சம்மதத்தைக் கேட்டு வாங்கத்தான் வந்தேன். நீங்களும் சரின்னு ஒத்துக்கொள்ளணும், இல்லையா?" நிரஞ்சன் அமைதியாகப் பேசினான்.

"பேஷ்! எவளையோ நீ காதலிப்பே, மருமகள்னு அவளை அம்மா வீட்டுக்குள்ளே சேத்துக்கணுமா? முடியாது. இந்தக் கல்யாணத்துக்கு நான் சம்மதிக்க மாட்டேன்.

அவங்களும் நம்மைப் போல ஒரு கவுரவமான குடும்பத்தைச் சேர்ந்தவங்க தான் அண்ணா நிரஞ்சன் கோபத்துடன் பேசியபோது அம்மா குறுக்கிட்டாள்.

போதும்! நீ அவங்களுக்குப் பட்டுப்போட்டுப் போர்த்த வேண்டாம். அதிர்ஷ்டத்தைத்தான் நீ கொண்டு வரலே. அவமானத்தையாவது கொண்டு வராதே. கலப்புத் திருமணத்திலே பிறந்த சாதி கெட்ட ஒரு பெண் எனக்கு மருமகளா? முடியாது. இதற்கு நான் ஒப்புக்கமாட்டேன் என்று வீறிட்டுக் கத்தினாள் அம்மா கமலம்.

வித்யா எழுந்து மாமியாரின் தோளை ஆதரவாகப் பற்றிக் கொண்டாள். அத்தை நீங்க மனசை அலட்டிக்காதீங்க, தம்பி நினைச்சபடியெல்லாம் ஆட இங்கே யாரும் இடம் கொடுக்கப் போறதில்லை. கவலைப்படாதீங்க" என்று கூறிவிட்டுக் கொழுந்தனை உறுத்துப் பார்த்தாள்.

"எங்கள் வீட்டுக்குத் தகுந்த அந்தஸ்து இல்லாத பெண்ணைப் பத்திப் பேச வேணாம். இங்கே யாரும் அவளை ஏத்துக்கத் தயார் இல்லே. அதனால அவளை நீங்கள் மறந்துட்டுப் புத்திசாலியா நடந்துக்கிறதுதான் நல்லது."

'அவளை மறக்க முடியாதுன்னா?' கோபத்துடன் கேட்டான், நிரஞ்சன்.

"அப்போ எங்களையெல்லாம் மறந்துடு" தாயார் ஆத்திரத்துடன் ஆணையிட்டாள்.

## 6

சுமித்திராவை உடனடியாகச் சென்று காண வேண்டும் என்று தான் நிரஞ்சன் துடித்தான்.

ஆனால், சதாசிவத்தின் முகத்தில் விழிக்க அவனுக்குத் துணிவு இருக்கவில்லை.

'என் குடும்பம் இந்தத் திருமணத்துக்கு ஒப்புதல் கொடுக்கவில்லை' என்று அவன் எப்படி அவரிடம் சொல்ல முடியும்?

அவன் மனத்தில் குடிகொண்டிருந்த அந்த உறுதி குலைந்து, ஏன் இப்படி அவன் தடுமாறிக்கொண்டு இருக்கிறான்? காதலியைக் கைவிட்டு ஓடும் கணக்கற்ற கோழையர்களுடன் அவனும் ஒருவனா? சுமித்திரா அவனை உயிருக்கு உயிராக நேசிக்கிறாளே? உலகு எங்கும் தேடினாலும் அவனுக்குக் கிடைக்க முடியாத அன்பான, பண்பான பெண் ஆயிற்றே?

இவ்வளவு காலம் அவளை நேசித்து திருமணத்துக்கு ஒப்புக்கொண்டு, உறுதியாக இருப்பதாக வாக்கு அளித்து இப்போது குடும்பத்தின் பெயரால் அவளைக் கைவிடுதல் மாபெரும் துரோகம் இல்லையா? அந்த அதிர்ச்சியை அவளால் தாங்கிக்கொள்ள முடியுமா? இவன் சொல்லப் போகும் முடிவு சதாசிவத்தின் உயிருக்கே முடிவாக அமைந்து விட்டால்?

அண்ணாவையும் அம்மாவையும் எதிர்த்துக் கொண்டு அந்தத் திருமணத்தில் இறங்க, அத்தனை தீவிரமான மன உறுதி அவனிடம் இனி இருக்குமா?



வேண்டாம் என்று உதறித் தள்ளும் அம்மாவிடம் கெஞ்சிக் கொண்டு குழைகிறதே அவனது பாழாய்ப் போன மனம், ஏன் குடும்பப் பாசம் என்னும் வேருக்கு அத்தனை ஆழமா?

காதலியா? குடும்பமா? இப்போது அவனுக்கு எது தேவை?

எண்ணி எண்ணி மூளை குழம்பிப் போயிருந்தான். அவன் பயணக் களைப்புத் தீர பச்சைத் தண்ணீரைத் தலையில் ஊற்றிக் கொண்டு வெகு நேரம் குளித்தான். பின்னர் வேறு ஆடை உடுத்திக் கொண்டான். வழக்கமாகச் செல்லும் ஓட்டலுக்குச் சாப்பிடச் சென்றான்.

தீபாவளிக்குப் பொழிய மறந்த மழை நினைத்துக் கொண்டு போல் வேகமாக ஆரம்பித்துப் பலமாகக் கொட்டத் தொடங்கியது. மழைக்கு ஒதுக்குப்புறமாக ஒரு கடையின் முகப்பில் மறைந்து கொண்டு நின்றான்.

தொடர்ந்து வீட்டில் நிகழப் போகும் அனைத்தையும் நினைத்துப் பார்த்தான். அவை நிழல் படங்கள்போல் அவன் நினைவில் ஊர்வலமாக வந்தன.

காலில் விழுந்து வணங்கும் தம்பதிகளைக் கண்டு அம்மா, 'எழுந்திருங்கோ, காலைத் தொடாதீங்க. தீட்டுப் பட்டுவிடும், நமஸ்காரம் பண்ணிட்டாச் செய்த தப்பு மறைஞ்சுடுமா? ஏன்டா பாவி மகனே? உனக்குத் தமிழ்ப் பெண் தான் கிடைக்கலே. போகட்டும் அதுக்காக ஜாதியில் மட்டமான வளையா மருமகளா எனக்குக் கொண்டு வந்து நிறுத்தறே? படுபாவி! பிள்ளையினு நீ பிறந்ததில் இருந்து.

படபடவென்று தாயார் வசைபாடுவது போன்று காதில் கேட்டதும், மிரண்டு போய்ச் சுற்றுமுற்றும் பார்த்தான். மழை இன்னமும் பெய்து கொண்டிருந்தது.

மாலையும் கழுத்துமாக, குத்து விளக்குப்போல அருகே நிற்கும் சுமித்திரா, அதைக் கேட்டுத் துயரத்துடன் அவனைப் பார்ப்பது போன்ற ஒரு பிரமை.

'என்ன துணிச்சல்! இவளை அழைத்துக் கொண்டு எங்கள் வீட்டுக்குள் வந்து நிக்கிறியே? போடா வெளியே?'

அழுத்தமாகச் சொல்லி அவமதிக்கும் அண்ணன் மாடியி லிருந்து இறங்கி வருவது போன்ற காட்சி.

"இவனுக்கு என்ன தகுதி இருக்கு. இவனை நான் ஓரகத்தின்னு உறவு சொன்னடா? யாரையும் கேட்காமல், மதிக்காமல் இப்படி ஒரு கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டு வந்து நின்னா, நாங்கள் ஏத்துக்குவோமோ? இவனுக்கு இங்கே இடம் கிடையாது" அண்ணி வித்யா, அந்தஸ்து தராசில் எடை போட்டபடி ஆணவமாகப் பேசிக் கொண்டு இடுப்பில் கையை வைத்துக் கொண்டு நிற்பது போன்ற ஒரு மருட்சி.

கண்முன் வளைய வந்த அந்தக் காட்சிகளை உதறித் தள்ள முயலுகிறவன் போல் தலையைப் பலமாக ஆட்டிப் பெருமூச்சு எறிந்தான். சிறிது நேரத்தில் மழை சட்டென்று ஓய்ந்ததும் வீட்டுக்கு மெல்லத் திரும்பினான். தன் அறைக் குள்ளே சென்று கதவைச் சாத்திக்கொண்டு படுத்துவிட்டான். யாரையும் பார்க்கவோ பேசவோ அவனுக்கு விருப்பம் இருக்கவில்லை.

இரவு முழுவதும் சிந்தித்தான், சிந்தித்தான். ஒரு முடிவும் தெரியவில்லை. ஒரே குழப்பம்.

மறுநாள் விடியுமுன்பே அவசரமாகத் தன் தோள் பையில் மாற்று உடைகளையும், தேவையான பொருள்களையும் எடுத்துப் போட்டு நிரப்பிக் கொண்டான். பர்சில் தேவையான பணத்தைத் திணித்துக் கொண்டு வெளியே புறப்பட்டு விட்டான்.

சுற்றுலாப் பயணிகளைச் சுமந்துகொண்டு மைசூருக்கு? விடியற்காலையிலே புறப்பட்ட பஸ் ஒன்றில் அவனுக்கு இடம் கிடைத்தது.

பொருட்காட்சிச் சாலை, சாமுண்டீஸ்வரி ஆலயம், பிருந்தாவனம், ஸ்ரீரங்கப்பட்டினம், திப்புசுல்தான் சமாதி என்று பயணிகளுடன் அவனும் நகர்ந்து கொண்டே இருந்தான்.

மைசூர்ப் பட்டினத்தில் கடைத் தெருவில் வேண்டிய சாமான்களை வாங்கிக்கொள்ள பஸ் ஓட்டுநர் கொஞ்ச நேரம்



அனுமதி கொடுத்திருந்தார். ஊதுவத்தி, சந்தன விசிறி, பட்டுச் சேலை என்று பயணிகள் விழுந்தடித்துக் கொண்டு கடைத் தெருவில் நாலாபுறமும் சிதறினார்கள். அப்பொழுதுதான் அந்தக் கூட்டத்தில் அவர்கள் இருவரையும் நிரஞ்சன் பார்த்தான்.

அந்த வாலிபனுக்கு அவனை ஒத்த வயது இருக்கும். காலத்துக்கு ஒப்ப தொங்கு மீசை, கன்னத்தில் பரவிய கிருதா, கழுத்தில் புரண்ட முடி.

இளம் பச்சை மைசூர்ப்பட்டுச் சேலையில் அவனுடைய கையைப் பற்றிக்கொண்டு சதங்கைச் சிரிப்புடன் நடந்த அவளுக்கு சுமித்திரா வயதுதான் இருக்கும். ஆனால் அந்த அழகு இல்லை. மகிழ்ச்சியில் பூரித்து மலர்ந்த முகத்தில் ஒரு தனிக்களை. கழுத்திலே தங்கச் சங்கிலியுடன் பின்னிக் கிடந்த புத்தம்புது மஞ்சள் சரடு, புதுமணம் புரிந்த தம்பதிகள், தேன்நிலவுக்கு வந்திருக்கிறார்கள் என்று தம்பட்டம் கொட்டியது.

உங்களுக்கு ஆனால் ரொம்பத் துணிச்சல், வரதட்சிணை இல்லாமல் ஒன்றுமே நடக்காதுன்னு ஒரே பிடியாக இருந்த உங்கம்மாவை, எப்படியோ சமாளிச்சுட்டீங்களே? தேன் நிலவுக்கு வந்திருந்த அந்தப் புது மணப்பெண் தன் கணவனி டம் கொஞ்சியது அவன் காதுகளிலும் விழுந்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

"வரதட்சிணை வாங்கக் கூடாது. நான் விரும்புகிற உன்னைத் தான் மணப்பேன்னு ஒரே தீர்மானமாக நான் பேசி விட்டதால் அம்மா தம் போக்கை மாற்றிக் கொண்டாங்க, அவ்வளவுதான். சிலரைப் போல் காதலிச்சுட்டுக் கல்யாணமானதும் அம்மாவின் புடவைத் தலைப்பில் மறைந்து கொள்கிற கோழை நான் இல்லை." கம்பீரமாகப் பதிலளித்தான் அவன்.

ஓங்கி முதுகில் யாரோ சாட்டையால் சாடிய வேதனையில் நிரஞ்சன் உதட்டைக் கடித்துக் கொண்டான்.

சற்று நேரத்தில் ஒருமுடிவு எடுத்தவன் போல், அவன் சந்தனச் சாமான் விற்ற ஒரு கடைக்குள் சட்டென்று நுழைந்த

வன், அவசரமாக ஓர் அழகான சந்தனக் குங்குமச் சிமிழை வாங்கிக் கொண்டான்.

சாமுண்டீசுவரி ஆலயத்தில் அர்ச்சனை செய்தபோது கிடைத்த குங்குமப்பொட்டலத்தைப் பிரித்துச் சிமிழுக்குள் நிரப்பி மூடினான்.

மறுநாள் திங்கள்கிழமை மாலையில், அலுவலகத்தில் இருந்து நேரே சுமித்திராவின் வீட்டுக்குப் போவதாக முன் ஏற்பாடு. வரும்போது நல்ல செய்தியுடன் வரப் போவதாகச் சுமித்திராவிடம் சொல்லியிருந்தான்.

உள்ளே நுழையுமுன், "நீ கேட்டதைக் கொடுக்க வந்து இருக்கிறேன். இந்தா!" என்று குங்குமச்சிமிழை அவளிடம் கொடுத்தால் புரிந்து கொண்டுவிடுவாள்.

விரலால் தொட்டுக் குங்குமத்தை நெற்றியில் வைத்துக் கொண்டு அவனைப் பார்க்கும் போது... அவள் முகமே குங்குமமாக வெட்கத்தில் சிவந்து போகுமே?

அன்று வீடு திரும்ப நடு இரவாகி விட்டது. ஓசைப் படாமல் பின்புறப் படிகளில் ஏறி மெல்லக் கதவைத் திறந்து படுத்து விட்டான். பயணக் களைப்பில் அலுப்பு மீறித் தூங்கியும் விட்டான்.

தடதடவென்று வீட்டுக்கார அம்மாள் கதவைத் தட்டினாள்.

விழித்து எழுந்த பொழுது விடிந்து ஏழு மணியாகி விட்டதை உணர்ந்தான். "உன்னைத் தொலைபேசியில் சுமித்திரா அழைக்கிறாள். அவசரமாம்" என்றாள், அந்த அம்மாள்.

லுங்கியைச் சரியாக இழுத்து இடுப்பில் கட்டிக் கொண்டு பரபரப்புடன் விரைந்தான், நிரஞ்சன்.

"நீங்கள் மெயிலில் இத்தனை நேரம் வந்திருப்பீங்கன்னு தெரியும். அதனால்தான் கூப்பிட்டேன். தயவு செய்து உடனே எங்கள் வீட்டுக்கு வாங்க. அப்பாவுக்கு மறுபடியும் மாரடைப்பு வந்து..."

பேச முடியாமல் அவள் விம்மினாள்.



# 7

அதிகாலையில் வந்த அழைப்புக்கு இணங்கி நிரஞ்சன் அவசரமாகப் பல் துலக்கி, முகம் கழுவி, உடைகளை மாற்றிக் கொண்டு புறப்பட்டான். செங்கப்பா தெருவுக்குள் போனதுமே கவனித்து விட்டான். சதாசிவத்தின் குடும்ப வைத்தியரின் கார் வாசலில் நின்று கொண்டிருந்தது.

அவனைக் கண்டதும் சுமித்திரா கண்களைத் துடைத்துக் கொண்டு விரைந்து வெளியே வந்தாள்.

"நடுராத்திரி அப்பாவுக்கு லேசா நெஞ்சுவலி வந்தது. அந்த வேளையில் தொலைபேசியில் வைத்தியரை அழைக்க நான் வெளியே போகத் தேவையில்லேன்னு சொல்லி அப்பா தடுத்திட்டார். சித்த முன்னே மறுபடி தாள முடியாமல் வலியிலே அவர் துடிக்கப்போ, என்னால் பொறுக்க முடியலே. ஒரே ஓட்டமாக மூணாவது வீட்டுக்குப் போய், டாக்டருக்கும் உங்களுக்கும் போன் செய்தேன். உதடுகள் துடிக்க பேசிலே பேச முடியாது துயரத்தில் திணறினாள்.

சதாசிவத்தைச் சோதித்துவிட்டு வெளியே வந்த வைத்தியர் அவர்களிடம் நெருங்கினார். "இந்த முறை பலமான மாரடைப்பு வந்திருக்கு. ரெண்டு நாள் போன பின்புதான் எதுவும் சொல்ல முடியும்." தாழ்ந்த குரலில் பேசிவிட்டுத் தலையை ஆட்டினார்.

பொங்கி வந்த அழுகையை அடக்கிக்கொண்டு சுமித்திரா உள்ளே திரும்பினாள். கூடவே தொடர்ந்தான் நிரஞ்சன்.

உயரமா அடுக்கியிருந்த தலையணைகள் மீது சாய்ந்த வாக்கில் வேதனையுடன் படுத்துக் கிடந்தார் சதாசிவம். காலடி ஓசை கேட்டதும் மெல்ல கண்களைத் திறந்தார். வெளிறியிருந்த அவர் முகத்தில் லேசாக ஒளி பரவியது.

அருகில் உட்காரச் சொல்லி அவனுக்கு சைகை செய்தார். மெல்ல தம் கரத்தை நீட்டி அவனது கையைப் பற்றிக் கொண்டார்.

என்ன என்னவோ பேசவேண்டும் என்ற ஆவல் கண்களில்; மூச்சுத் திணறலில் முடியவில்லை.

"இதுதான் என் முடிவு- எனக்குத் தெரிந்த போச்சு" இனி சுமித்திரா, உன் பொறுப்பு. அம்மா சுமித்திரா திருநெல்வேலி தம்பி மகன் கோவிந்துக்குத் தந்திகொடுத்து விடு"

அதற்குமேல் அவரால் பேச முடியவில்லை. கண்களை மூடியபடி மயக்க நிலையில் ஆழ்ந்து போனார். மீண்டும் வைத்தியரை அழைத்து வருமுன் அவர் இறந்து போனார்.

அலுவலகத்திலிருந்து விடுப்பு எடுத்துக்கொண்டு சுமித்ராவுக்கு ஆதரவாக அவன் உதவி செய்வதில் துணையாக இருந்தான். அக்கம்பக்கத்தாரின் கூட்டம், ஓலக்குரல், ஆண்களின் அதட்டல், இவற்றினிடையே அவனுக்கு அப்போது எதுவுமே தெரியவில்லை.

தூரத்து உறவுமுறை என்று அவர்கள் குடும்பத்துடன் சிறிதளவு ஒட்டிக் கொண்டிருந்த கோவிந்தன் என்பவன் தன் வயதான தாயுடன் வந்திருந்தான். பெரியப்பாவுக்குச் செய்ய வேண்டியவற்றைச் செய்துவிட்டு, போகவரத் தனக்கும் தாயாருக்கும் ஏற்பட்ட செலவுத் தொகையைச் சுமித்திராவிடம் வசூலித்துக் கொண்டு புறப்பட்டு விட்டான்.

அதற்கு மேல் தங்கினால், தங்கச்சி என்ற உறவும் பொறுப்பும் தன்மேல் விழுந்துவிடுமோ என்ற அச்சம் அவனுக்கு. வயதுப் பெண்ணைத் தனியே விட்டுச் செல்கிறோமே என்று அவன் தாயார்கூட கவலைப்படவில்லை.

தனியே சுமித்திரா அந்த வீட்டில் எத்தனை நாள் வசிக்க இயலும்?

நிரஞ்சனுக்கு வேறு ஒரு கவலையும்கூட,



சதாசிவத்தின் பொருளாதார நிலைமையைப்பற்றி அவன் இதுவரை அலசிப் பார்த்தது இல்லை. அப்பா இறந்த பின்னர் வீட்டை நிர்வகிக்கவும், தன்னைக் காத்துக் கொள்ளவும் வேண்டிய வசதி அவளுக்கு இருக்கிறதா?

அதைப்பற்றி சுமித்திராவிடம் அவன் அன்று மாலை வெளிப்படையாகவே கேட்டுவிட்டான்.

"எங்கேயாவது ஒரு வேலை தேடிக்கொள்ளலாம் என்று யோசிக்கிறேன்." என்றாள் அவள்.

"நான் இருக்கும்போது நீ ஏன் கவலைப்பட வேண்டும் பரபரப்பாகக் கேட்டான்" அவன்.

அப்பா இறந்து சில நாள் தான் ஆகிறது. சில மாதமாவது துக்கம் அனுசரித்த பிறகுதானே நமது கல்யாணம். கல்யாணம் ஆகுமுன் நீங்கள் எனக்குப் பணம் கொடுத்து உதவ முன்வருவதும் தவறு. நான் அதை ஏற்பதும் முறையில்லை."

"வேலை கிடைக்கும் வரை செலவை எப்படிச் சமாளிக்கப் போகிறாய்?"

"அப்பா விட்டுப்போன பணம் கொஞ்சம் இருக்கிறது. என் அம்மா விட்டுப் போன இரண்டொரு நகையும் இருக்கிறது. காலத்தைக் கடத்தி விடுவேன்" துணிவாகப் பேசினாள்.

"இந்த வீட்டில் தனியாக எப்படி இருப்பாய்?"

அவள் மௌனமாக இருந்தாள். அவனுக்கும் அதே கவலைதான்.

இரண்டொரு நாள் கழித்து ஒரு பிற்பகல் உணவுக்குப் பின் அலுவலகத்தில் அவன் இருக்கையில் வந்து அமர்ந்த போது, சுமித்திரா அவனை தொலைபேசியில் அழைத்தாள்.

அவள் குரல் கம்மலாகத் துயரத்தில் ஒலித்தது. சாதாரணமாக அவள் வேலை நடுவே அவனை அழைப்பது இல்லை.

"நாங்கள் குடியிருக்கும் வீட்டின் சொந்தக்காரர் கடிதம் போட்டிருக்கிறார். வெளியூரிலிருந்து அவர் ஒரு மாதத்தில்

திரும்பி வந்து விடுவாராம். வீடு அவருக்குத் தேவையாம். நான் உடனடியாகக் காலி செய்து தர வேண்டுமாம்.

"நேரே வந்து பேசுகிறேன்."

தொலைபேசியை வைத்து விட்டு மேசை மீது இருந்த கோப்புகளைச் சிந்தனையுடன் வெறித்தான். சுமித்திரா வீட்டைக் காலி செய்து விட்டு எங்கே போய்த் தங்குவாள்?

மாலை அலுவலகத்திலிருந்து செங்கப்பா தெருவுக்குள் அவன் நுழையுமுன் இருட்டி விட்டிருந்தது.

துணைக்குக் கூட இருந்த வேலைக்கார அம்மாள் அடுத்த தெருவில் யாரையோ போய்ப் பார்க்க வேண்டும் என்று போய்விட்டாள்.

சுமித்திரா மட்டும் தனியே முன்னறையில் உட்கார்ந்திருந்தாள். அவனைக் கண்டதும் கதவைத் திறந்தாள்.

எதிர் வீட்டிலிருந்து இரண்டு தலைகள் சன்னல் வழியே தெரிந்ததை அவன் கவனித்தான். வாயிற்படி அருகே தயங்கி விட்டு உள்ளே சென்று நாற்காலியில் அமர்ந்து கொண்டான். கதவை சுமித்திரா திறந்தே வைத்திருந்தாள்.

வம்பு பேசப்போகிறவர்களுக்குக் கதவு மூடியிருந்தால் என்ன? திறந்திருந்தால் என்ன?

இருட்டிய பின்பு அவன் அங்கு வந்து போனான். இந்த ஓர் உண்மையை வைத்துக் கொண்டுதானே கதை பின்னப் போகிறார்கள்?

தேநீர்க் கோப்பையைக் சுமித்திரா அவன் அருகே ஒரு முக்காலி மீது வைத்து விட்டு ஒதுங்கியபடி சுவர் ஓரமாக நின்றாள்.

"என் கல்லூரித் தோழி ஒருத்தி இன்று பகல் என்னைக் காண வந்தாள். அவள் தான் வேலை பார்க்கும் அலுவலகத்தில் எனக்கும் ஒரு வேலை தேடித்தருவதாகச் சொல்லியிருக்கிறாள். அநேகமாக வேலை கிடைத்து விடும். தங்குவதற்குத்தான்



இப்பொழுது அவசரமாக ஓர் இடம் பார்க்கணும்." மெல்லிய குரலில் சொன்னாள்.

எதிர்வீட்டுச் சன்னலில் இன்னமும் தலைகள் தெரிந்தன. அவனுக்கு எரிச்சலாக இருந்தது. பிறர் படும் தொல்லைகள் சிலருக்கு நல்ல வேடிக்கை விருந்து.

"சுமி! வேலை தேடுவதைப் பற்றி அவசரப்படாதே. இடம் பற்றியும் கவலைப்படாதே. இரண்டையும் என்னிடம் விட்டு விடு. நான் கவனித்துக் கொள்கிறேன்." கூறிவிட்டு அவசரமாகத் தேநீரை எடுத்துப் பருகினான்.

இப்படித் தனிமையில் அவளுடன் பேச ஏங்கித் துடித்தவன். அவன் அப்போது நிலைமை வேறு. இப்போது நீடித்து அவன் அங்கேயிருந்தால் பார்ப்பவர்களுக்குத் தவறாகப்பட்டு விடும். அவன் மணந்து கொள்ளப் போகும் பெண்ணின் பெயருக்கு மாசு வர அவனே காரணமாகவா இருப்பது? சே! சே!

வேலைக்காரக் கிழவி அதற்குள் வெளியிலிருந்து திரும்பி வந்து விட்டாள்.

"அம்மாவைப் பத்திரமாகப் பார்த்துக் கொள். தனியே விட்டுவிட்டு நீ அடிக்கடி அங்குமிங்கும் போவது தப்பு" என்று நிரஞ்சன் எரிச்சலுடன் அவளைக் கடிந்து கொண்டான். பிறகு அவசரமாக விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டு விட்டான்.

கேசவன் தன் நண்பர்களுடன் சினிமாவுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான்.

"நீ வீட்டிலேதான் இருப்பே? கொஞ்சம் அம்மாவை ஒரு கண் பார்த்துக்கோ" பொறுப்பை நிரஞ்சன் தலையில் கட்டி விட்டு அவன் போய்விட்டான்.

ஜகதா கம்பளி நூலில் சட்டை பின்னிக்கொண்டு வானொலிப் பெட்டியருகே அமர்ந்திருந்தாள்.

பத்திரிகைகளைப் புரட்டியபடி இருக்கையில் இருந்த அவனுக்குத் திடீரென்று ஓர் எண்ணம் பளிச்சிட்டது.

"சென்னையில் இருக்கும் அம்மாவுடன் அவசரமாகப் பேச வேண்டும். அதற்கு உண்டான தொகையைக் கொடுத்து விடுகிறேன். டெலிபோன் தருகிறீர்களா?" என்று வீட்டுக்கார அம்மாளைக் கேட்டான்.

"அதுக்கென்ன அப்பா, பேசு!" அன்போடு சொல்லி விட்டு அவள் எழுந்து உள்ளே சென்று விட்டாள்.

நிரஞ்சன் எண்களைச் சுழற்றினான்.

தூக்கம் கலைந்த குரலில் அம்மா கமலம் மறுபக்கத்தில் பேசினாள்.

"இந்த நேரத்தில் எதுக்குக் கூப்பிடறே! அப்படி என்ன நடந்திட்டது?" அம்மா அதட்டலாகக் கேட்டாள்.

"சுமித்திரா அப்பா இறந்து போயிட்டார்னு கடிதம் போட்டிருந்தேனே?"

"துக்கம் கேட்கக் குடும்பத்தோடு ஓடி வரலையேன்னு கேக்கறியா?" ஏளனமாகச் சிரித்தாள் கமலம்.

"சுமித்திரா இப்போ தனியா இருக்கிறாள். அவள் அப்பாவுக்குக் கொடுத்த வாக்கை நான் நிறைவேற்றக் கடமைப்பட்டு இருக்கிறேன். கொஞ்ச காலம் அவளை நீங்கள் உங்களோட நம்ம வீட்டிலே சென்னையிலே வச்சுக்க முடியுமா? உங்களுக்கு ரொம்ப உதவியாயிருப்பாள், அம்மா!"

"இந்த வீடு கண்டவங்க வந்து தங்குற சத்திரமா சாவடியா? உனக்குப் புத்தியிருக்கா?"

தொலைபேசியை அண்ணாவிடம் கொடுத்துவிட்டு அம்மா நகர்ந்து விட்டாள்.

"இந்த வேளையில் தூங்கிக்கொண்டிருந்த அம்மாவை எழுப்பி என்ன கரடி விடறே?" அண்ணா உரத்த குரலில் உறுமினான்.



"சுமித்திரா தன்னந்தனியாகி விட்டாள். அவளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டியது என் கடமையாகி விட்டதால் நம்ப வீட்டில்..."

அவன் முடிக்கவில்லை, அதற்குள் அண்ணா பேய்ச் சிரிப்புச் சிரித்தான். "உனக்குப் பைத்தியம் பிடிச்சிருக்கு. எவளோ அநாதை ஆயிட்டா, அதுக்காக நாம்தான் அகப்பட்டோமோ, புகல் கொடுக்க?"

"அவள் எவளோ இல்லை, அண்ணா."

"மறுபடி அதே வட்டத்துக்குள்தான் வரே. நாங்கள் சொன்னது சொன்னதுதான். ஏதாவது கதை சொல்லிட்டு, அவளை அழைச்சிட்டு இங்கே வந்து நின்னியோ, நான் பொல்லாதவனாயிடுவேன். யார் அப்பன் செத்தால் உனக்கு என்னடா?"

தொலைபேசி தொப்பென்று வைக்கப்படும் ஓசை கேட்டது.

## 8

நாட்கள் நகர்ந்தன. சுமித்திரா கட்டாயம் வேலை ஒன்றைத் தேடிக்கொள்ள வேண்டிய நெருக்கடி வந்துவிட்டது. தோழியின் சிபாரிசில் அவள் வேலை பார்த்த நிறுவனத்திலேயே கணக்கராக அவளுக்கு ஒரு தற்காலிக வேலை கிடைத்திருந்தது. மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டாள். காலை எட்டு மணிக்கே வீட்டைவிட்டுக் கிளம்பி மாலை இருட்டும் சமயந்தான் திரும்ப முடிந்தது.

அவள் வரும் வரை ஒவ்வொரு நாளும் பஸ் நிலையத்துக்கு வந்து காத்திருந்து அவளுடன் கூட செங்கப்பா தெருவரை நடந்து அவளை வீட்டில் சேர்த்துவிட்டுச் செல்லும் பொறுப்பை நிரஞ்சன் ஏற்றிருந்தான்.

சுமித்திரா கொஞ்ச நாளாகத் தன் மனத்தை உறுத்திக் கொண்டிருந்த ஒரு சங்கதியை அவனிடம் சொல்லவில்லை.

அவளைத் திருமணம் செய்து கொண்டு நிம்மதியாக வாழப் போகிறான். அதற்குள் சின்ன விஷயங்களைச் சொல்லி அவனைக் குழப்ப வேண்டுமா? எனவே, அவள் அவனிடம் அதைச் சொல்லவில்லை.

அவள் வசித்த வீட்டுக்கு எதிர்ச் சாரியில் ஒருமாடி வீடு. வெகு நாளாகப் பூட்டிக் கிடந்த மாடி அறையில் இரண்டு வாலிபர்கள் சிலதினம் முன்னர் குடி வந்திருந்தனர். வாசல் கதவைத் திறந்துகொண்டு அவள் தோட்டத்துக்குள் வந்தால் போதும், எதிர்மாடியிலிருந்து லேசாக முதலில் தொடங்கி, பின்னர் பலமாக விசில் ஓசை கேட்கத் தொடங்கிவிடும்.

தவறிப் போய் ஒருநாள் அந்தப் பக்கம் பார்த்து விட்டாள்.

"ஹாய்! என்றான், அந்த அறையிலிருந்த சன்னல் வழியே எட்டிப் பார்த்து ஒரு தாடி மீசை வாலிபன்.

"கொஞ்சம் இப்படித் திரும்பேன்" நானும் பார்க்கிறேன். ஒல்லியாக இருந்த மற்றொருவன் அவளை நெருங்கினான்.

யார் அவர்கள்? அவளிடம் ஏன் வம்பு தொடுக்கிறார்கள்?

வேலைக்காரக் கிழவியின் பேச்சில் இருந்துதான் அவள் விவரம் தெரிந்து கொண்டாள்.

அந்த இருவரும் ஒரே அலுவலகத்தில் வேலை பார்க்கிற நண்பர்கள். தனிக்கட்டைகள். ஊருக்குப் போயிருந்த வீட்டுக்காரன், மாடியில் இவர்கள் குடியிருந்தால் வீட்டுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்று குடி வைத்து விட்டுப் போயிருக்கிறானாம். வீட்டுக்கு அவர்கள் உண்மையில் காவலா இருக்கிறார்கள்? ஊர் வம்பை விலைக்கு வாங்கத் துடிக்கும் முரட்டுத் தடியன்கள்!

அன்று மாலை கதவைத் திறந்து, அவள் வீட்டுக்குள் சென்றதும் வாசலில் நின்றபடியே விடைபெற்றுக் கொண்டு நிரஞ்சன் போய் விட்டான். அவன் உள்ளே வரக்கூட விரும்புவது இல்லை. அத்தனை கண்ணியமும் கட்டுப்பாடுமாக அவன் நடந்து கொண்டான்.



விளக்கைப் போட்டுவிட்டுக் கதவை மூடிக் கொண்ட போதுதான் கவனித்தாள். கதவு இடுக்கு வழியாகத் தபால்காரன் எறிந்து விட்டுப்போன ஒரு கடிதம்; முற்றும் புதிய பழக்கம் இல்லாத கையெழுத்து. அதை எடுத்துப் படிக்கக்கூட அவளுக்கு ஏனோ அச்சமாக இருந்தது. கைகள் நடுங்கப் படித்தாள்.

"அன்பே சுமித்திரா!

உன்பெயர் எனக்கு எப்படித் தெரியும் என்று அதிசயமாக இருக்கிறதா? ஒருமாத காலமாக நித்தமும் நீ வெளியே போகும் போது வரும் போதும் பார்த்துப் பார்த்து மனத்தைப் பறிகொடுத்தவன், நான்.

உன்னை நான் விரும்புகிறேன். தந்தை தாய் யாரு மற்றுக் காற்றில் அடிபட்டுத் தத்தளிக்கும் பூங்கொடியாக நீ தனிமையில் தவிப்பதைக் கேட்டு மனம் உருகி உனக்குக் காவலனாக நான் துணையிருக்க முன் வருகிறேன். ஏற்பாயா?

இன்று மாலை அலங்கார் தியேட்டர் அருகே உனக்காகக் காத்து நிற்பேன். வா!

உன் காதலன்.

எதிர்வீட்டு ரங்கமணி."

கோபத்துடன் கடிதத்தைச் சுக்கல் நூறாகக் கிழித்து எறிந்து விட்டு, அவள் தன் வேலையைக் கவனிக்க சமையல் அறைக்குள்ளே புகுந்தாள். பதற்றம் அடைந்த மனம் அமைதியடைய வெகு நேரம் சென்றது.

நிரஞ்சனிடம் இதைப் பற்றிப் பேசுவதா? வேண்டாம். பார்வைக்கு எதிர் வீட்டு இளைஞர்கள் முரடர்கள் போலத் தென்படுகிறார்கள். நிரஞ்சன் கோபத்துடன் ஏதாவது பேசப்போய், பின்னர் சண்டையாகி சங்கதி தெரு முழுவதும் பரவிவிடும். "எதற்கு வீண் அவமானம் பொறுத்திருப்போம்." என்று கடிதத்தைப் படித்தவள் போலவே அவள் காட்டிக் கொள்ளவில்லை. வழக்கம் போல வேலைக்குப் போய் வந்து கொண்டிருந்தாள்.

அடுத்த சில நாளில் ஒரு நாள் மாலை கதவைத் திறந்த போது இன்னொரு கடிதம் தரைமீது கிடந்தது. "படிக்காமலே கிழித்துப் போடத்தான் நினைத்தாள். இருந்தாலும் உள்ளே விஷயம் என்னதான் என்று தெரிந்து கொள்வது நலம் அல்லவா?" என்ற எண்ணம் ஏற்படவே பிரித்தாள்.

"சுமித்திரா, என் அன்பே!

என் நண்பனை நீ ஏற்காததால், நான் என் அன்பை உன் காலடியில் வைத்து வணங்கி ஆராதிக்க முன் வந்திருக்கிறேன்.

கடந்த பல நாளாக எதிர்வீட்டு மாடியிலே நின்று... தெருவிலே நடந்து செல்லும் நிலவைக் கண்டு ஏங்கி ஏங்கி உருகிப் போகும் இந்த ஏழையின் பக்கம் ஒரு தடவை கூடத் திரும்பிப் பார்க்கக் கூடாதா? எனக்கும் உன்னைப் பற்றி எல்லா விவரமும் தெரியும். நித்தமும் உன்கூட வந்து கொண்டிருக்கும் அந்தத் தடியனை விட நான் எந்த வகையிலும் குறைந்தவன் அல்ல.

திருமணத்தில் உனக்கு நம்பிக்கை இல்லை என்று அறிகிறேன். எனக்கும் இல்லை. இருவரும் இணைந்து நண்பர்களாக நெருங்கிப் பழகினால், உனக்குப் பல விதத்திலும் உற்ற துணைவனாக இருந்து பாதுகாப்பேன்- உறுதி.

உடனேயே பதிலை எதிர்பார்க்கும் உன்னையே நினைத்து உருகும் அன்பன்.

விசுவேசுவரன்.

பின்குறிப்பு:- உயரமாக மெல்லிய தோற்றத்துடன் இருக்கும் தொங்கு மீசைக்காரன் தான் உன்னால் நிராகரிக்கப்பட்ட என் நண்பன் ரங்கமணி..."

ஆத்திரத்திலே உடல் முழுவதும் அனலாகக் கொதிக்க சுமித்திரா ஆடிப்போய் விட்டாள்.



'ஆகட்டும். இன்னும் கொஞ்ச நாள். ஊருக்கு போயிருக்கும் எதிர் வீட்டுக்காரர் வந்துவிடப் போகிறார் என்று கேள்வி. அவர் வந்ததும் அவருடைய மனைவியிடம் நேரிடையாக, மாடியில் குடிவைத்துப் போயிருக்கும் துடுக்கு இளைஞர்களின் கேவலமான போக்கை எடுத்துச் சொல்லி ஆவன செய்ய வேண்டும். அவர்கள் வீட்டிலும் பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். கட்டாயம் அந்த அம்மாள் அவளுடைய வார்த்தைக்கு மதிப்புக் கொடுப்பாள்.' அந்தக் கடிதத்தையும் கிழித்துக் குப்பைக் கூடையில் வீசிவிட்டு அந்தச் சம்பவத்தை உடனடியாக மறக்க முயன்றாள்.

ஆனால், விவகாரம் அப்படி இலேசில் மறந்துவிடக் கூடியதாக இருக்கவில்லை. நாள் செல்லச்செல்ல எதிர்வீட்டு வாலிபர்களின் சேட்டைகள் அதிகமாயின. தெருவில் நடக்கும் போது அவள் மீது காகித அம்பை வீசினான் ஒல்லியான இளைஞன். வேகமாக இறங்கித் தெருவில் மிக அவசரமாகப் போகிறவன் போல் அவள் மீது மோதிவிட்டு நடந்தான், தாடி மீசைக்காரன்.

இந்த நிலையில் நிரஞ்சன் அலுவலக வேலையாக வெளியூர் செல்ல வேண்டி வந்தது.

அன்று மாலை பஸ் நிலையத்தில் இருந்து அவள் தனியே மெல்ல நடக்கத் தொடங்கியபோது, பின்னால் பலத்த காலடி ஓசை கேட்பதை உணர்ந்தாள். திரும்பிப் பார்க்கக் கூட அவளுக்குப் பயமாக இருந்தது. ஏன் பயப்படவேண்டும்? மனிதர்கள் நடமாடும் பெரிய சாலை. இங்குமங்கும் வாகனங்கள் போய்க் கொண்டிருந்தன. அப்படி அஞ்சும்படி நேரம் அதிகமாகி விடவில்லை. தனக்குள்ளே துணிவாகச் சொல்லிக்கொண்டு அவள் விரைவாக நடந்தாள்.

பின்னால் கேட்ட காலடி ஓசையும் விரைவாக அவளைத் தொடர்ந்தது.

அச்சத்தில் நெஞ்சு பக் பக் என்று அடித்துக்கொள்ள அவள் பரபரப்பாக மிகவும் வேகமாக நடக்கத் தொடங்கினாள்.

வீட்டை நெருங்கியதும், இடுப்பிலே செருகிக்கொண்டிருந்த சாவிக் கொத்தை எடுத்து அவசரமாகக் கதவைத் திறந்து உள்ளே நுழைய முயன்றபோது, அவளுடன் கதவைத் தள்ளிக்கொண்டு, அந்த முரடர்கள் இருவரும் நுழைவதை உணர்ந்தாள். "பேசாதே கழுத்தை முறிக்க விடுவோம்."

பயத்திலே அவள் இதயம் வெடித்து விடும்போலத் துடித்துக் கொண்டது. "ஐயோ! என்று வாய்விட்டு உரத்த குரலில் அலறிவிட்டாள்.

அவள் வாயை அடைக்க, அவளது சேலையின் நுனியைப் பற்றி இழுத்தவன், அருகில் வருவதற்குள் தெரு விளக்குகள் பளிச்சென்று எரியத் தொடங்கின. அவளையும் அறியாமல் அவள் கை மின்விசைப் பித்தானை அழுத்த, வீட்டு விளக்கும் மின்னியது.

"பிரமிச்சுட்டியா? பயப்படாதே. நமக்குள்ளே ஒரு தீர்மானத்துக்கு வந்து விடுவோம். எங்க ரெண்டு பேருக்கும் உன் மேல் ஆசை. நீ யாரை விரும்புறியோ அதுக்கு ஒத்திட்டு ஒருத்தன் விலகிக்கிறோம். ஒருவன் பேரம் பேசினான்.

"சீ! வெளியே போறீங்களா? கத்தி கூச்சலிட்டு ஊரைக் கூட்டட்டுமா?" சீறினாள் சுமித்திரா கோபத்துடன்.

"கூப்பிடு! நீ எங்களோடு ரொம்ப நாளா சிநேகிதம்னு சொல்லி உன் மானத்தைக் குலைக்க முடியும். தெரிஞ்சுக்கோ" ஒல்லியான வாலிபன் உறுமினான்.

"பெரிய பத்தினி வேஷம் போடாதே. எல்லாருக்கும் தெரியும்! தினமும் உன் வீட்டுக்கு ஒரு தடிப்பயல் வந்துட்டுப் போறதைத் தெருவே பார்த்திருக்கு. அவன் என்ன உன் கணவனா? கள்ளக் காதலன்! அவனைப் போல இன்னும் உனக்கு எத்தனை பேரோ? அத்தனை பேரில் நாங்களும் ஒருத்தராக இருப்பதிலே உனக்கு என்ன மோசம் வந்திடும்?"

"பாவி சண்டாளங்களா! வெளியே போறீங்களா இல்லையா?" உரத்த குரலில் சுமித்திரா கத்தினாள்.



"போக மாட்டோம்! சும்மா விட்டுப் போவதாக உத்தேசம் இல்லை." தாடி மீசைக்காரன் தடித்த குரலில் கர்சித்தான்.

"அப்பா! அப்பா!" என்று உரத்த குரலில் அலறி விட்டாள், சுமித்திரா.

கதவை ஒருக்களித்துப் பிடித்துக் கொண்டிருந்த தாடி மீசை வாலிபன் சிரித்தான். "செத்தவனைக் கூப்பிடு. ஓடி வருவான், உதவிக்கு!"

611604

அவன் முடிக்குமுன், "படார்" என்று அவன் கைமீது பலத்த ஓர் அடி விழுந்தது. சட்டென்று திரும்பினான்.

வெளியூரிலிருந்து அப்பொழுதுதான் திரும்பியிருந்தான் நிரஞ்சன். தன்னந்தனியாக இருக்கிறாளே பஸ் நிலையத்திலிருந்து நேராக இங்கே வந்தான்.

894.8113 LAK

தாங்க முடியாத ஆத்திரத்துடன் கையை மடக்கி சினிமா கதாநாயகன் போல் ஓங்கி ஒரு குத்து. மெலிந்த வாலிபன் மோவாயில் விட்டான். கீழ்ப் பல் உதட்டைக் கிழிக்க, உப்புக் கரித்த ரத்தம் உதட்டைத் தாண்டி மோவாயில் வழிய, வலி பொறுக்க முடியாமல் அலறிக் கொண்டு அவன் வெளியே ஓடினான். அடுத்தவனும் அவனைப் பின் தொடர்ந்தான்.

இதற்குள் எப்படியோ தெருவில் இருந்த சிலருக்கு விஷயம் தெரிந்தது. ஒரு சிறிய கும்பல் வாசலை நிறைத்துக் கொண்டது.

"என்ன இருந்தாலும் நீங்கள் திருமணம் ஆகாத ஒரு பெண்ணோட வீட்டுக்குத் தினமும் வந்து போவது சரியில்லை. அதனால்தான் அந்தப் பசங்களும் இப்படி நடந்து கொண்டாங்க" என்றார் ஒருவர்.

"பலாப்பழத்தை ஈ மொய்க்கத்தான் செய்யும்" என்றார் இன்னொருவர்.

சுமித்திரா அவமானம் தாளமுடியாமல் ஓவென்று அழுதாள்.

## 9

நாலாபுறமும் இடர்கள் சூழ்ந்து, உணர்வுகள் நொறுங்கிப் போகும் பயங்கர நிலையில், சில நேரம் பூர்வமாக ஒரு திடீர்த் திருப்பம் ஏற்பட்டுப் பிரச்னைகள் கலகலத்து விடுவதும் உண்டு.

அப்படி ஒரு திருப்பம்- நிரஞ்சன் வாழ்க்கையிலும் நிகழ்ந்து விட்டது.

"இனி என்ன செய்வது?" என்று குழம்பிக்கொண்டு வீட்டுக்கு வந்த அன்று இரவு, அவனை ஜகதா அம்மாள் உள்ளே வரும்படி அழைத்தாள்.

வெகு நேரம் அழுதவள் போல் அவள் முகமும் கண்களும் சிவந்து காணப்பட்டன.

அவள் மட்டும் வீட்டில் அப்போது தனியாக இருந்தாள்.

"தம்பி! நான் ஓர் இக்கட்டான நிலையில் இருக்கேன் நீ தான் உதவி செய்யணும், துயரத்தில் அவள் குரல் உடைந்தது.

நிரஞ்சனுக்கு அந்த அம்மாள் மீது தாயைப் போன்ற பரிவு. "சொல்லுங்க அம்மா என்னால் முடிஞ்ச உதவியைச் செய்யத் தயங்கமாட்டேன்" ஆறுதலாகக் கூறினான். அவள் காட்டி உபசரித்த இருக்கையில் சட்டென்று வந்து அமர்ந்து கொண்டான்.

"எனக்கும் என் மகன் கேசவனுக்கும் சில நாளா, ரொம்பச் சண்டை. நீ வேலை செய்கிற அலுவலகத்தை விட்டுப் போய் விட ராஜினாமாக் கடிதம் கொடுத்துட்டான். யாரிடமும் சொல்லாமல் இரகசியமாகச் செய்திருக்கான். இந்த மாதத்தில் இருந்து அவனுக்கு அங்கே வேலை இல்லை."

நிரஞ்சனுக்கு இது வியப்பாக இருந்தது. ஆனாலும், "அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், உங்கள் மகன் படிப்புக்கும்,



தகுதிக்கும் விரைவில் நல்ல இடத்தில்வேலை கிடைச்சிடும். கவலைப்படாதீங்க என்றான் ஆறுதலாக.

"தம்பி! அது என் கவலை இல்லை. வேலை செய்யாமல் விட்டோட இவன் இருந்தாலும் அக்கறையில்லை. உட்கார்ந்து சாப்பிட தேவையானதை வச்சிட்டுப் போயிருக்கிறார். என்னைக் கட்டிக்கொண்ட மகாராஜன். குடுகுடு என்று கண்ணீர் உகுத்தாள்.

முந்தானையில் முகத்தைத் துடைத்துக் கொண்டு தம்பி! என்னிடம் சொல்லாமல், என்னவோ மேல் படிப்பியாம், அதுக்கு இங்கிலாந்துக்கு ஒரு வருஷத்துக்குப் போக ஏற்பாடு செய்திருக்கிறானாம். எல்லாத்தையும் இப்ப வந்து சொல்றான், உடம்புக்கு முடியாமல் இருக்கிற என்னைத் தனியே விட்டுட்டு, இவன் வெளிநாட்டிலே போய் உட்கார்ந்து விட்டால் என் கதி? இருக்கறது ஒரே பிள்ளை. மறுபடியும் அவள் கண்களில் நீர் புரண்டது.

"கேசவன் தன் வாழ்க்கையில் முன்னேற முயற்சிகள் எடுத்துக் கிறார். அதை நீங்க வரவேற்கணும். நீங்கள் தனியா இருக்க மாட்டாங்க. நான் இங்கே துணையாக இருப்பேனே? சமாதானம் செய்ய முயன்றான்.

"இவன் காலா காலத்திலே ஒரு கல்யாணம் செஞ்சு கொண்டு போனாலும் நான் இப்படிக் கலங்கமாட்டேன். மருமகள் வீட்டிலே எனக்குத்துணையா இருந்திருப்பாள்" என்று துயரத் தோடு பெருமூச் செறிந்தாள்.

"ஒரு வருஷ காலம் ஓடிவிடும். உங்கள் மகன் தக்க படிப்பியோட திரும்பி வருவார். நல்ல வேலையில் சேர்ந்திடு வார். பெரிய இடத்தில் கல்யாணமும் நடக்கும். பிறகு நீங்கள் தனியாக இருக்க வேணாம்" என்று அவள் மனத்துக்கு அமைதி கொடுக்க இதமாகப் பேசினான் நிரஞ்சன்.

"நீ ரொம்பப் பொறுமையான பிள்ளை" கண்களைத் துடைத் துக் கொண்டு ஜகதா மெல்ல சிரித்தாள். "எனக்கு இப்பவெல் லாம் வீட்டு வேலையைக் கவனிக்க முடியாமல் போயிட்டது

கூடமாட ஒத்தாசை செய்ய என்னோட கூட ஒரு பொண்ணு துணைக்கு இருந்தால்..." அவள் முடிக்கவில்லை.

நிரஞ்சன் நெஞ்சு மகிழ்ச்சியிலே படபடத்தது. "அம்மா எனக்கு ஒரு யோசனை தோணுது. உங்களுக்கு மறுப்பு இல்லேன்னா சொல்றேன். உங்களுக்கும் உதவியாக இருக்கும் எனக்கும் நிம்மதியாக இருக்கும்."

"சொல்லுப்பா. அதுக்குத்தானே உன்னைக் கூப்பிட்டேன்." ஆர்வமாகக் கேட்டாள்.

ஒளிவு மறைவின்றித் தனக்கும் சுமித்திராவுக்கும் உள்ள காதல்- திருமணம் செய்துகொள்ள எடுத்திருக்கும் தீர்மானம்." தற்சமயம் சுமித்திராவின் பரிதாப நிலை எல்லாவற்றையும் ஒரே மூச்சில் சொல்லி முடித்தான் நிரஞ்சன்.

ஜகதா நெஞ்சுருகிப் போய்விட்டாள்.

பாசமும் பரிவுமாக உள்ள ஒரு நல்ல மகன். மனம் விரும்பிய பெண்ணைக் கட்டிக் கொண்டால் என்ன?

சாதியாவது மண்ணாவது! வீட்டுக்கு வருகிறவள் பண்பும் அன்பும் நிறைந்தவளாக அடக்கமான புத்திசாலிப் பெண்ணாக இருந்தால் போதாதா?

அந்தஸ்து?

நேற்று ஓகோன்னு இருந்தவர்கள் இன்று எங்கேயோ கிடக்கிறார்கள். பார்வையிலேயே படாமல் மூலையில் இருந்தவர்கள் இப்போது கோபுர உச்சிக்குப் போயிருக்கிறார்கள். வாழ்க்கையின் மேடு பள்ளங்களில் அந்தஸ்துக்கு நீடித்து நிற்கும் தகுதி ஏது?

விநாடியில் பலவும் எண்ணினாள். எழுந்து உள்ளே சென்று, தான் தயாரித்து வைத்திருந்த ரொட்டியும், கூட்டும் எடுத்து வந்து சாப்பாட்டு மேசை மீது தட்டில் பரிமாறினாள். சூடான பாலைத் தம்ளரில் நிரப்பி வந்து வைத்தாள். "தம்பி, எழுந்து கைகழுவிக்கிட்டுச் சாப்பிடு."

"என்னத்துக்கும்மா இதெல்லாம்?"



நிரஞ்சன் மறுத்ததை அவள் ஏற்கவில்லை. "என் வயத்திலே பாலை வார்த்தாப்போல நல்ல சேதி சொன்னே. அதுக்காகத்தான் இந்த உபசாரம்னு வச்சுக்கோ" என்று கூறிச் சிரித்தாள்.

"தம்பி நிரஞ்சன், சுமித்திராவைப் பத்தி இனி கவலைப் படாதே. நீ சொல்றதில் இருந்து அவள் ஒரு நல்ல குடும்பத்துப் பொண்ணுன்னு புரியறது. கேசவன் வெளி நாடு கிளம்பிய மறு நாளே அவளை இங்கே அழைச்சிட்டு வந்திடு. என்னோட துணையா இருக்கட்டும். தற்காலிகமா அவள் செய்கிற வேலையை விட்டுவிட ஏற்பாடு பண்ணு தம்பி. நான் ஒரு வேலை கொடுக்கிறேன். இந்தக் கிழவியைப் பத்திரமா பார்த்துட்டு கூடத் துணையாக எல்லாம் இருக்கட்டும். இருக்க இடம், சாப்பாடு, துணிமணி எல்லாம் கொடுத்து மகளைப் போல் பரிவா வச்சுக்கிறேன். வேண்டுமானால் சம்பளமும் கொடுக்கிறேன்." கண்களைச் சிமிட்டிக் கொண்டு மகிழ்ச்சியாகச் சிரித்தாள்.

நிரஞ்சனும் கூடவே சிரித்தான். அப்பாடா! இப்போது அவனுக்குத்தான் எத்தனை நிம்மதி. மகிழ்ச்சி.

அதற்குப் பின்னர் அவன் துரிதமாக ஆவன செய்தான். சுமித்திராவின் வீட்டைக்காலி செய்து, மேசை நாற்காலிகளை வந்த விலைக்கு விற்றுவிட்டு, தேவையான சாமான்களை மட்டும் கண்ணிப் பெட்டிகளில் அடுக்கிப் பத்திரமாகப் பூட்டி, பெட்டிகளை ஜகதா வீட்டுப் பரணில் கொண்டு வந்து சேர்த்து விட்டான்.

ஒருவாரத்தில் கேசவன் வெளிநாட்டுப் பயணத்தைத் தொடங்கினான். மறுநாளே சுமித்திரா ஜகதா அம்மாள் வீட்டில் வந்து தங்கிக் கொண்டாள்.

ஜகதா சில நிபந்தனைகளை விதித்தாள். தாயும் தந்தையும் இல்லாத கன்னிப் பெண் சுமித்திராவுக்குக் கல்யாணமாகும் வரை அவள் பாதுகாவலாக இருக்கப் போகிறாள். அதனால் அவள் தன்னுடன் வீட்டுக்குள்ளேயே தங்கி வசிக்க வேண்டும். நிரஞ்சன் எப்போதும் போல அவளின் பக்க அறையில்

தங்கிக் கொள்ளலாம். ஓட்டலில் இனி அவன் சாப்பிடத் தேவையில்லை. எல்லாருக்கும் சமைக்கும் உணவை அவனும் பகிர்ந்து கொள்ளலாம்.

ஜகதா விதித்த இந்தக் கட்டுப்பாடுகள் சுமித்திராவுக்கு மிகவும் பிடித்திருந்தன. தங்க இடம் கொடுத்துத் தாயாகி நிற்கும் அந்த அம்மாளின் மனம் நோக எந்தவிதமான தவறும் செய்யக்கூடாது என்ற ஆணித்தரமான எண்ணம் அவளுள் அழுந்தப் பதிந்தது. மேலும் அவளுக்குச் சில கொள்கைகள் இருந்தன. இலவசமாக எதையும் யாரிடமும் அவள் வாங்கிக் கொள்ள விரும்பியதேயில்லை. பதிலுக்கு எதுவுமே செய்யாமல் கை நீட்டிப் பெற்றுக் கொள்ளும் உதவி பிச்சை எடுப்பதற்கு ஒப்பாகும் என்று அவள் தந்தை அவளிடம் அடிக்கடி சொல்லியிருந்தார். அவரது அறிவுரைகளில் ஊறி வளர்ந்தவள் அவள்.

சாப்பாடும், தங்க இடமும் தந்து இந்தச் சமயத்தில் உதவிய அன்புமிக்க ஜகதா அம்மாளுக்கு அவள் பதிலுக்கு கடுமையான உழைப்பினால் ஈடு செய்து விடத் துடித்தாள். படித்திருக்கிறோம் என்ற நினைவை உதறிவிட்டு, ஜகதாவின் வீட்டில் விரைவில் அவள் தன்னை ஓர் உயர் மட்டத்து வேலைக்காரியாக மாற்றிக் கொண்டு விட்டாள்.

வழக்கம்போல விடியற் காலையில் எழுந்து குளித்து, வேறு உடை உடுத்திக் கொண்டு, ஜகதா செய்யும் பூஜைக்கு வேண்டிய மலர்கள், ஊது பத்தி இத்யாதிகளைத் தயாராக எடுத்து பூஜையறையில் வைப்பாள். காலையில் எல்லாருக்கும் சாப்பிட காபி பலகாரம் தயார் செய்வாள். நிரஞ்சனுக்கும் ஜகதாவுக்கும் பரிமாறி விட்டுப் பின்னர், தான் சாப்பிடுவாள். பகல் உணவை விரைவாகச் சமைத்து விட்டு ஓய்வாக உட்கார்ந்திருக்கும் போது அந்த அம்மாளுக்குப் பத்திரிகைகளைப் படித்துக் காட்டுவாள். படுக்கையைத் தட்டிப்போட்டு, களைப்பாக இருக்கும் ஜகதா ஓய்வு எடுத்துக்கொள்ள உதவுவாள். இப்படிப் பணி விடைகளை அன்போடு ஆசையோடும் செய்தாள் சுமித்திரா.



சொந்த மருமகன் கூடத் தன்னை இப்படிக் கவனித்துக் கொள்வானா என்ற வியப்புத்தான், ஜகதாவுக்கு இத்தனை பாசமும் பரிவுமாகப் பழகும் நல்ல பெண்ணை, கமலம் ஏற்க மறுக்கிறாளோ? தேய்த்துத்துடைத்த திருச்சூர் குத்து விளக்குப்போல எத்தனை அழகான பெண்!

படித்தவள்- புத்திசாலி- அடக்கமானவள்- அன்பானவள். இத்தனை குணங்களும் சாதி என்னும் ஒருசிறு தடுப்புக் குள்ளேயா அடிபட்டுப் போகவேண்டும்? சே! இந்தச் சாதிக் கொடுமைகள் இன்னுமா தொலையவில்லை. எண்ணி எண்ணி மருகிப் போனாள் ஜகதா.

பழகப் பழக அந்தப் பெண்ணின் மீது அவளுக்கு அதிகமான பிடிப்பு ஏற்பட்டது. எப்பொழுதாவது தன்னுடன் கடைகளுக்கு அழைத்துச் செல்லும்போது, ஆசையுடன் அவள் கேட்கும்முன் தானே வளையல்கள், முகப்பவுடர், சோப்புகள் என்று வாங்கித் தருவதை வழக்கமாக்கிக் கொண்டாள்.

அழகான விலை உயர்ந்த பட்டுச் சேலை ஒன்றை ஒரு நாள் வாங்கி சுமித்திராவிடம் கொடுத்தாள். 'இது என்னுடைய பரிசு. நாளைக்கு உனக்குப் பிறந்த நாள்னு கேள்விப்பட்டேன்.

'அம்மா!' உணர்ச்சிப் பெருக்கில் தொண்டை அடைத்துப் பேச முடியாமல் அமைதியானாள். அவள் கண்கள் கலங்கின.

பெற்ற தாயைச் சிறுவயதிலே பறிகொடுத்தவள் இப்போது தந்தையையும் இழந்து தனி மரமாகி விட்டவள் அவளுக்கு இப்படி ஓர் அதிர்ஷ்டமா?

மறுநாள் அந்தச் சேலையைக் கட்டிக் கொண்டு வந்து தன்னைக் கும்பிட்ட சுமித்திராவைக் கண் கொட்டாமல் பார்த்தாள் ஜகதா திகைப்புடன்.

புத்தம் புது பட்டுச் சேலையில், தலை கொண்ட மட்டும் செண்பகப் பூவைச் சூடிக்கொண்டு, நெற்றில் பளிச்சிட்ட குங்குமம் கைகளில் கலகலத்த வளையலுமாக, அலங்காரத்துடன், நகர்ந்து வரும் தேர் போல், எத்தனை அழகாக இருக்கிறாள்! கட்டுக் கொள்ளாத தவிப்பு.

ஊகூம். இளம் ஜோடிகள் எத்தனை காலம் தனித்து வாழ்வது? இளமை மறுபடியும் திரும்ப வராதே? கவனிக்க வேண்டிய பருவத்திலே கவனித்தால் தானே பயிர் சீராக விளையும்?

உள்ளத்திலே தோன்றிய எண்ணத்தை உடனடியாகச் சொல்லி விட்டாள், ஜகதா. "தம்பி நிரஞ்சன்! ஆறுமாதத்துக்கு மேலாகி விட்டது. இதுவரை துக்கம் காத்தது போதும். இறந்தவர்களுக்கு நம் மனசிலே மரியாதை இருந்தால் போதும். வெளிப்படையாகக் காட்டிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இதைத்தான் சுமித்திரா அப்பாவும் விரும்புவார். என்னால் ஆன உதவியைச் செய்யத் தயாராக இருக்கிறேன். உடனடியாக உன் அம்மாவுக்கு ஒரு கடிதம் எழுதிப் போடு."

நிரஞ்சன் குழப்பத்துடன் விழித்தான்.

"தைமாதம் முகூர்த்தத்திலேயே சின்ன அளவில் இந்த வீட்டிலே ஒரு கல்யாணத்தை நடத்திட முடிவு செய்துட்டேன். அதோட ஒரு பதிவுத் திருமணமும் செய்துடலாம், நாளைக்கு ஒரு சமயம் நீ நல்ல வேலை தேடிக் கொண்டு வெளிநாட்டுக்குப் போறதாக இருந்தால், பதிவுத் திருமணச் சான்றிதழ் முக்கியமா தேவைப் படும்னு கேள்வி." வாய்விட்டு மனம் நிறையச் சிரித்தாள் ஜகதா.

முகம் சிவந்து நின்ற சுமித்திராவை ஆசையுடன் மெல்லப் பார்த்து மகிழ்ந்து போனான் நிரஞ்சன்.

## 10

அன்று பிருந்தாவனம் எக்ஸ்பிரஸ் கிளம்பு முன்னமே தாமதமாகி விட்டது. சென்னையில் இறங்கிய நிரஞ்சனும், சுமித்திராவும் இரவு தங்குவதற்கு ஒரு லாட்ஜைத் தேடிப் பிடித்துச் சாமான்களுடன் அறைக்கு வந்து சேருவதற்கு இரவு வெகு நேரமாகிவிட்டது.



அந்த வேளையில் தாயைத் தொலைபேசியில் கூப்பிடுவதும் சரியாக இருக்காது. நேரிடையே அவர்கள் இருவரும் வீட்டுக்குப் போய் நிற்பதும் முறையல்ல என்ற எண்ணத்துடன் லாட்ஜில் தங்கத் தீர்மானித்தான்.

ஜகதா அம்மாளின் விருப்பப்படி நிரஞ்சன் சுமித்திராவை மணந்துகொள்ளப் போவதாகத் தாயாருக்கும் அண்ணனுக்கும் கடிதம் எழுதி போட்டான். கிணற்றில் போட்ட கல்லாக பதிலே இல்லை.

ஜகதாவின் வற்புறுத்தலும் துணை செய்ய அவன் துணிவுடன் சுமித்திராவைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டான். தன் சொந்த செலவில் எளிய முறையில் திருமணத்தைத் தன் வீட்டிலேயே அக்கம் பக்கத்து நண்பர்கள் புடை சூழ ஐதீக முறைப்படியும் ஜகதா முடித்து விட்டாள். மணமக்களுக்குக் கனிசமான ஒரு தொகையைக் கல்யாணப் பரிசாக வேறு கொடுத்து வாழ்த்தினாள்.

சுமித்திரா இப்படி ஓர் ஆதரவையும் அன்பையும் எதிர்பார்க்கவில்லை. மாலையும் கழுத்துமாகத் தம்பதிகள் அந்த அம்மாளின் காலைத் தொட்டுக் கும்பிட்ட போது, தன் தாயைக் கண்டுவிட்டதுபோல் உணர்ச்சி பரவசப்பட்டு ஜகதா அம்மாளைக் கட்டிக் கொண்டு, ஆனந்த மிகுதியில் விசும்பி விட்டாள், சுமித்திரா.

"உலகில் இப்படியும் சில நல்லவர்கள் இருக்கிறாங்களே. யாரோ பெற்ற பிள்ளையிடம் இத்தனை அன்பா?" நிரஞ்சனுக்குத் தாங்க முடியாத வியப்பு நன்றி உணர்வு.

தேன் நிலவுக்கு சுமித்திராவின் விருப்பப்படி தம்பதிகள் மதுரைக்குப் போய் வந்தனர். பிறகு சில நாள் மைசூர், ஊட்டிக்கு உல்லாசப் பயணம். அங்கு இருந்து திரும்பிய போதுதான், சில நாளில் கேசவன் ஊருக்குத் திரும்ப இருப்பதாக நல்ல செய்தி கொண்ட தந்தி வந்தது. அத்துடன் வேறு ஒரு செய்தியும் தொடர்ந்தது.

நிரஞ்சனுக்குச் சென்னை அலுவலகம் ஒன்றில் வெகுநாளாக அவன் விரும்பிக் காத்துக்கொண்டிருந்த வேலை கிடைத்து விட்டது. உயர்ந்த பதவி, அதிகப்படியான சம்பளம், பானை பிடிக்க, பாசத்துடன் தன் கையைப் பிடித்த சுமித்திராவின் பாக்கியம் என்று மகிழ்ந்து விட்டான்.

வேலையில் வந்து சேர்வதற்கு அந்த அலுவலகம் அவனுக்குச் சில நாள் அவகாசம் கொடுத்திருந்தது. கேசவன் வந்ததும் அவனிடம் தாயை ஒப்பித்துவிட்டுப் பிரியா விடை பெற்றுக் கொண்டு இருவரும் புறப்பட்டுச் சென்னை வந்தனர். கையோடு சுஜாதா அம்மாள் கட்டிக் கொடுத்த தயிர் சோற்றைச் சாப்பிட்டுக் களைப்புடன் லாட்ஜ் அறையில் உறங்கிப் போனார்கள்.

மறுநாள் விடிந்ததும், குளித்து முடித்துக் கிளம்பினர். அருகில் இருந்த ஓட்டல் ஒன்றில் காலைப் பலகாரத்தை முடித்துக்கொண்டு பஸ் நிலையத்துக்கு விரைந்தனர்.

சென்னைக்குக் கிளம்பு முன் தன் நண்பன் ஒருவனுக்கு நிரஞ்சன் கடிதம் எழுதியிருந்தான். "குறைந்த வாடகையில் ஒரு சிறிய வீடு தேவை. பார்த்து வைக்கவும்." நண்பனிடமிருந்து பதிலும் வந்தது. "உன் அதிர்ஷ்டம் அலமேலுமங்காபுரத்தில் எங்கள் குடும்பத்து நண்பர் தம் வீட்டின் மாடிப் பகுதியைப் பழுது பார்த்து, வாடகைக்கு விடத் தயாராக வைத்திருந்தார். நான் செய்த சிபாரிசில் மயங்கி உனக்கு முன்னூற்றைம்பது ரூபாய்க்கு அதை வாடகைக்கு விட ஒப்புக் கொண்டு விட்டார். முன் பணமாக இரண்டு மாத வாடகை உன்னை நம்பிக் கொடுத்து விட்டேன். கைவிட்டு விடாதே! பழைய காலத்து வீடு. அதிகம் எதிர்பார்க்காதே. சென்னைக்கு வந்ததும் முதல் வேலையாக என் அலுவலகத்துக்கு வந்து சாவியை வாங்கிக் கொண்டு போ.

பஸ்ஸிலிருந்து இறங்கி அந்தச் சந்துக்குள் நடந்து இடது பக்கம் திரும்பி, மாடிப்படிகளைக் கடந்து நண்பன் பணியாற்றும் அலுவலகத்துக்குள் நுழைந்தனர். வராந்தாவில் ஒருபுறம் சுமித்திராவை நிற்கச் சொல்லிவிட்டு, நிரஞ்சன் மட்டும் நண்பன் வேலை செய்த பகுதிக்கு விரைந்து சென்று,



நன்றியைத் தெரிவித்து விட்டுச் சாவியை வாங்கிக் கொண்டு வந்தான்.

வீடு பார்ப்பதற்கு எடுப்பாக இருக்கவில்லை. சிறு தோட்டத்துக்குள் அமைந்த பழைய நாள் கட்டடம். குறுகலான மாடிப்படிகள் இங்குமங்கும் வெடிப்பு விழுந்த சிவப்பு சிமெண்டு தரை. ஒரே படுக்கையறை கொண்ட சின்னஞ்சிறு பகுதி. டிஸ்டெம்பர் பூசியிருந்த சுவரில் இப்போது வீட்டுக்காரர் வெறும் சுண்ணாம்பை வாரி அடித்திருந்தார்.

"ரொம்பச் சின்ன இடம். உனக்குப் பிடிக்கிறதா?" ஆதங்கத்துடன் கேட்டான் நிரஞ்சன்.

"உங்க மனசிலே எனக்கு எத்தனை பெரிய இடத்தைக் கொடுத்திருக்கீங்க. அதை நினைக்கும்போது, இது பெரிய பங்களாவாகத்தான் எனக்கு தோணுது. சிறுகக் கட்டிப் பெருக வாழணும்னு அப்பா அடிக்கடி சொல்வார்.

எப்பவும் உனக்கு இந்த நிறைஞ்ச மனசு இருக்குமா சுமித்திரா?" கேட்டுக்கொண்டே அவளைத் தன் அருகே இழுத்து அணைத்துக் கொண்டான்.

"எப்பவும் எவ்வித மாறுதலும் இல்லாமல் இப்படியே இருக்கப் பிரியப்படுகிறேன்." அவனது தோள் மீது முகத்தைப் பதித்துக் கொண்டு குழைவாகச் சொன்னாள்.

"ரொம்ப வேலையிருக்கு" என்று சொன்னபடி மெல்ல விடுவித்துக் கொண்டு சமையல் அறையில் இருந்த அலமாரி ஒன்றைத் திறந்தாள்.

முன்பு குடியிருந்தவர்கள் விட்டுப் போன கரப்பான் பூச்சிகள் இங்கும் அங்கும் ஓடின.

மூலையில் சாத்திக் கிடந்த பழைய துடப்பம் ஒன்றை எடுத்துக் கொண்டு அலமாரித் தட்டுகளைச் சுத்தம் செய்ய முனைந்தாள். கரப்பான் பூச்சிகளில் ஒன்று பறந்து வந்து அவள் தோள்பட்டை மீது உட்கார்ந்து கொண்டது. இடக்கைச் சுண்டு விரலால் அதைத் தட்டித் தள்ளி விட்டுத் தரையை வேகமாக பெருக்கத் தொடங்கினாள்.

"இது ரொம்ப ஆச்சரியம்! உரத்த குரலில் சிரித்தான் நிரஞ்சன்.

"எது?" என்ற பாவனையில் நிமிர்ந்து பார்த்தாள் அவள்.

இத்தனை நேரம் அண்ணி இங்கே இருந்திருந்தால், கரப்பான் பூச்சிகளைப் பார்த்துக் கூச்சலிட்டு ஊரைக் கூட்டியிருப்பாங்க. பார்த்துட்டாலே அத்தனை நடுக்கம். அது மேலே விழுந்தால் போதும், அலறி விடுவார்கள். அம்மாவுக்கு எலிகளைக் கண்டால் ரொம்பப் பயம். எலி எலின்னு எட்டு வீடு கேட்கக் கூக்குரல் போட்டு விட்டு ஓடிவிடுவாங்க."

"அப்படியா?" அதற்கு மேல் அவள் கேட்கவில்லை. கரப்பான் பூச்சிகளையும்" எலிகளையும் கண்டு நடுங்கும் அந்த உறவினர்கள் இருவரையும் பாராமலே அவள் இப்போது நடுங்கிக் கொண்டிருந்தாள்.

லாட்ஜிலே வைத்திருந்த சாமான்களை நிரஞ்சன் சென்று எடுத்து வந்ததும், அருகிலிருக்கும் ஓட்டல் எதிலாவது கொஞ்சம் பாலை வாங்கி வந்து சம்பிரதாயத்துக்கு அதை மறுபடி காய்ச்சிச் சாப்பிட்டுவிட்டு, அம்மா? அண்ணி முதலானவர்களைச் சந்திக்கப் புறப்படுவது என்று ஏற்பாடு. அதை எண்ணி அவள் கலவரப்பட்டுக் கொண்டிருந்தாள்.

பெட்டிகளைத் திறந்து சமையல் சாமான்களை எடுத்து அலமாரித் தட்டுகளில் அடுக்கினாள். மண்ணெண்ணெய் ஸ்டவ்வில் பாலைக் காய்ச்சினாள்.

அலமாரித் தட்டில் ஒருபுறம் வீட்டிலிருந்து கொண்டு வந்து சிறிய வெண்கல விளக்கை ஏற்றிவிட்டு, அதன்முன் கண்களை மூடிக்கொண்டு கைகள் கூப்பிய நிலையில் ஒரு கணம் நின்றாள்.

பால் தம்ளரைக் கையில் எடுத்து மெல்லப் பருகிய வண்ணம் தன் அன்பு மனைவியை ஆசையுடன் பார்த்தான் நிரஞ்சன்.

"நீ இப்ப என்ன வேண்டிக்கிட்டேன்னு சொல்லட்டுமா? முதல்லே நமக்குப் பிறக்கப்போகிறது ஆண் குழந்தையாக இருக்கணும்னு தானே வேண்டிக்கிட்டே! செல்லமா அவள் கன்னத்தைக் கிள்ளி விளையாடினான்."



அவள் வேண்டிக் கொண்டது உண்மை. ஆனால் அது தொடர்ந்து பல நன்மைகளையே கொடுத்த தெய்வம் முதல் முதலாக அவள் சந்திக்கப் போகும் உறவினர் மனசிலும் நல்ல எண்ணத்தையே கொடுக்க வேண்டும் என்பதுதான் அவள் பிரார்த்தனை.

கூந்தலை வாரிச் சிரக்கிக் கொண்டு, பெட்டியில் இருந்து புதுச்சேலை ஒன்றை எடுத்து உடுத்திக்கொண்டு அவள் தயாரானாள். அவனும் உடைகளை மாற்றிக் கொண்டு கிளம்பினான்.

வழியில் கடையில் கொஞ்சம் மிட்டாயும் பழங்களும் வாங்கிக் கொண்டனர்.

ஆட்டோவை விட்டு இறங்கி வீட்டுக்குள் சென்ற கணவனைத் தொடர்ந்த அவள் கால்கள் பின்னின.

இதுவரை எல்லாமே நல்லபடியாக நடந்திருக்கிறது. இந்தச் சந்திப்பும் நல்லதாகதான் இருக்கப் போகிறது என்ற ஒரு நம்பிக்கை நிரஞ்சனுக்கு.

அன்று அலுவலக விடுமுறை தினம். காபி பலகாரத்துக்குப் பின்னர் அண்ணன் ஊஞ்சலில் அமர்ந்திருந்தான். அம்மா சுவர் ஓரமாகக் கிடந்த சோபாவிலே உட்கார்ந்திருந்தாள்.

அழைப்பு மணி ஒலிப்பதைக் கேட்டு அண்ணி வந்து கதவைத் திறந்தாள்.

பின்னால் நின்ற சுமித்திராவைக் கண்டதும் அவள் முகம் சிறுத்துப் போயிற்று.

அவள் யார் என்பதைப் புரிந்து கொண்டு விட்டாள். ஏற இறங்க உறுத்துப் பார்த்த வித்யாவின் உள்ளத்திலே நெருப்பு எரிந்தது.

அந்தஸ்திலும், சாதியிலும் தன்னைவிட மட்டமான சுமித்திரா, பளிச்சென்று அழகோடு வந்து நின்றதைக் காண அவளுக்குப் பொறுக்கவில்லை. வீட்டுக்கு வருகிற மற்றொரு மருமகள் அவளைவிட அழகாக இருந்து விடுவதா?

"உங்கள் தம்பி தன் மனைவியோட வந்திருக்கார்." உள்ளே திரும்பிக் குரல் கொடுத்து விட்டு, வந்தவர்களை வாவென்று அழையாமல் திரும்பிச் சென்று விட்டாள்.

அம்மா கமலம் திடுக்கிட்டு எழுந்தாள்.

அவள் வாயைத் திறக்குமுன் அண்ணா எழுந்து கையமர்த்தினான்.

"நீங்கள் எல்லாரும் உள்ளே போங்கள். நான் அவனிடம் பேசிக்கிறேன்." என்று சீறினான் தமையன்.

நடையைத் தாண்டி மெல்ல வந்து நின்ற அவர்களிடம் வேகமாக வந்தான், அண்ணன் பலமுறை சொல்லியிருந்தும் நீ குடும்பத்தை எதிர்த்துக் கொண்டு கல்யாணம் செய்து கொண்டிருக்கே. எந்தத் துணிவில் இவளை அழைச்சிட்டு இங்கே வந்தே?" உரத்த குரலில் கத்தினான்.

வித்யா கொடுத்த வரவேற்பில் நடுநடுங்கிப் போன சுமித்திரா, கணவனின் பின்னால் மறைந்துகொள்ள முயன்றாள். சிங்கமாகக் கர்ஜிக்கும் கொழுந்தனை அவள் பார்க்கவே விரும்பவில்லை.

"எம்மா, இது உன் ஆலோசனையா? நீ என் தம்பியைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கலாம். ஆனால், எங்கள் வரை நீ இந்த வீட்டு மருமகள் இல்லை. உள்ளே வரவோ அம்மாவிடம் பேசவோ உனக்குத் தகுதி இல்லை. இதை விடப் பகிரங்கமாக வேறு என்ன சொல்ல?"

ஏற்கெனவே கோழிக்குஞ்சு போல நடுங்கிக் கொண்டு நின்ற சுமித்திராவை உறுத்து விழித்தான் நிரஞ்சனின் அண்ணன்.

## 11

அதற்குப் பின் அவர்கள் இருவரும் அந்த நிகழ்ச்சியைப் பற்றிப் பேசவேயில்லை.



முதல் சில நாள் அவர்கள் உணவுக்காக அருகிலிருந்த ஓட்டலுக்கு அலைய வேண்டியிருந்தது. விரைவாக வீட்டை ஒழுங்கு செய்தவுடன், சுமித்திரா அதே தெருவில் இருந்த மளிகைக்கடையில் தேவையான சாமான்களை வாங்கிப் பிளாஸ்டிக் டப்பாக்களில் அடைத்துக் கொண்டாள். குடி புகுந்த மூன்றாவது நாளே அவள் தன் கணவனுக்குச் சமைத்துப் போட்டு அலுவலகத்தில் சாப்பிட பகல் உணவும் கையோடு கட்டிக் கொடுக்கத் துவங்கி விட்டாள்.

நாட்கள் விரைந்தன. முதல் மாதம் வாங்கிய சம்பளத்தைக் கொண்டு வந்து மகிழ்ச்சியாக நிரஞ்சன் அவளிடம் கொடுத்தான்.

"செக்கை மாத்திப் பணமாகக் கொண்டு வந்திருக்கேன். இதிலேதான் வீட்டு வாடகையில் இருந்து சகலமும் அடக்கம். சமாளிக்க வேண்டியது உன் பொறுப்பு. வேடிக்கையாகக் கூறிக்கொண்டு பணம் வைத்திருந்த காகித உறையை அவளிடம் நீட்டினான்.

"புரிகிறது, மகளே உன் சமர்த்து அப்படின்னு ஒரு பழமொழி. அதுபோல இந்தப் பணத்திலே நீ சேலை தான் வாங்குவியோ, பவுடர்தான் வாங்கிப் பூசிப்பியோ, என் வயிற்றைக் காயப் போடாமல் சாமான் வாங்கிச் சமைக்கப் போறியோ, எனக்குத் தெரியாதுன்னுட்டு எல்லாத்தையும் என் தலையில் வச்சுட்டீங்க, மகிழ்ச்சியுடன் முறுவலித்தாள் சுமித்திரா. ஏற்றி வைத்திருந்த குத்து விளக்கின் அருகே காகித உறையை வைத்துக் கும்பிட்டாள்.

"உன் தலையிலே வைக்க வேற ஒன்னு கொண்டு வந்திருக்கேன்" கையிலிருந்த பொட்டலத்தை அவிழ்த்து மல்லிகைச் சரத்தை எடுத்து அவளுக்குச் சூட்டினான்.

"சுமி!" அன்பாக அழைத்து அவளைத் தன் நெஞ்சோடு சேர்த்துக் கொண்டான்.

"உண்மையைச் சொல், நீ என்னுடன் மகிழ்ச்சியாக இருக்கியா? இந்த எளிய வாழ்க்கை உனக்குப் பிடிக்கிறதா?" அவள் கன்னங்களை அன்புடன் வருடினான்.

"அதே கேள்வியை நானும் கேட்கிறேன். இந்த ஏழைப் பெண்ணைக் கட்டிக் கொண்டு நீங்கள் சுகமாக இருக்கிறீங்களா?" அவனது முடியை விரலால் அளைந்து விளையாடினாள்.

அவன் பதில் சொல்லவில்லை. மெல்ல அவளை விடுத்து மௌனமாகக் குளியலறைக்குள் புகுந்தான். விரைவில் முகத்தைக் கழுவிக் கொண்டு, உடைகளைக் களைந்து விட்டு வேட்டியும் பனியனும் தரித்துச் சாப்பிட உட்கார்ந்தான்.

சேமிப்புப் பெருகிய பின்புதான் மேஜை, நாற்காலி இத்யாதி என்பது சுமித்திராவின் திட்டம்.

அவசரத்துக்கு இரண்டு பிரம்பு மோடாக்களும் ஒரு சிறுமுக்காலியும் வாங்கி முன்னறையில் போட்டிருந்தான்.

தட்டைக் கழுவித் துடைத்து முன்னறைத் தரையில் ஒரு பக்கமாக வைத்துவிட்டு சமைத்த உணவைச் சூடு படுத்தி எடுத்து வந்தாள், அருகில் தரையில் அவன் எதிரே அமர்ந்து கொண்டு, தட்டில் உணவை மெல்லக் கரண்டியால் அளவோடு எடுத்து அன்பாகப் பரிமாறினாள்.

சாம்பாரும் சோறும் நெய்யும் கலந்து ஒரு கவளம் எடுத்து வாயில் போட்டு விழுங்கிய படி அவளை நிமிர்ந்து பார்த்தான் நிரஞ்சன்.

"குழம்பு ரொம்பக் காரமா இருக்கா? மிளகாயைக் கடிச்சுட்டீங்களா? முகம் சிவந்து, கண்களில் நீர் ததும்பிடுச்சே?" மெல்லச் சிரித்துக்கொண்டு தன் முந்தானையால் அவன் முகத்தையும் கண்களையும் துடைத்து விட்டாள்.

"மிளகாயைக் கடிக்கலே காரமா எங்கம்மா பேசின சில வார்த்தைகள் நினைவுக்கு வந்து...?"



"சாப்பிடும் போது நல்ல சங்கதிகளை எண்ணிக்கணும். அதுகளைப் போய் ஏன் நினைக்கப் பார்க்கணும்." செல்லமாகக் கடிந்து கொண்டாள்.

"தினமும் நீ இப்படி என் முன்னால் உட்கார்ந்து பரிவோட பார்த்துக் கவனிச்சுச் சாப்பாடு போடுறியே, இந்த மாதிரி என் வாழ்நாளில் ஒரு முறைகூட என் தாயார் எனக்குச் சாப்பாடு தன் கையால் எடுத்துப் போட்டது இல்லை."

"பெரிய வீடு- சமைக்க ஓர் ஆள்- வேலைகளைக் கவனிக்க இன்னோர் ஆள்னு வசதியான வாழ்க்கை உங்க அம்மாவுக்கு. உடம்பை அலட்டிக் கொண்டு வேலை செய்யப் பிடிக்கலே போலிருக்கு."

"இல்லை. அண்ணனைக் கண்டதும் விழுந்தடிச்சுட்டு ஓடி வருவாங்க. சாப்பிடச் சொல்லி உபசாரம் பண்ணித் தன் கையால் பரிமாறுவாங்க. என்னைக் கண்டதும் அப்படி ஒரு வெறுப்பு."

"ஏனாம்?"

"அதுக்கு ஒரு காரணம் இருக்கு. ஆனால் அதுக்கு நான் பொறுப்பாளி இல்லே, அவங்க நிலையிலே வேறு ஒரு பெண் விவேகமுள்ளவளா இருந்திருந்தா, இப்படி நடந்துக்கவே மாட்டாங்க. அதை நினைக்கும்போது என் மனசு படும் வேதனையை..."

"சாப்பிடும் போது ஏன் இந்தக் கஷ்டமான நினைவு? விட்டுத் தள்ளுங்க. உங்களுக்குப் பிடித்த எலுமிச்சம்பழம் ரசம் வச்சிருக்கேன், கொஞ்சம் டம்ளரில் ஊத்துகிறேன், சாப்பிடுங்க" பக்குவமாகப் பேசி அவன் கவனத்தை வேறு பக்கம் திருப்பினாள்.

ஆனாலும் அவன் நெஞ்சு துயரத்தில் கனத்தது. பத்துமாதம் தன் வயிற்றில் இடம் கொடுத்த அம்மா, அவர்களுக்கு அந்த வீட்டில் இடம் இல்லை என்று ஒதுக்கிவிட்டாள். மனத்திலும் இடம் இல்லை என்று மகனையும் பார்க்க மறுத்துவிட்டாள். மருமகளும் மகனும் எப்படித் தான் வாழ்

றொர்கள் என்று தெரிந்துகொள்ளக் கூட ஆவலும் இல்லையே? இது என்ன அதிசயப் பிறவியோ? வெகுநேரம் அதைப் பற்றியே தனக்குள் சிந்தித்தாள்.

நிரஞ்சன் படுக்கை அறைக்குள் வானொலி கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

தட்டிலே சோற்றைப் போட்டுக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தாள், சுமித்திரா.

உணவு அவளுக்குத் திடீரென்று கசந்தது. திக்கற்ற இரு குழந்தைகள் போல், கலகலப்பும் சந்தடியும் மிகுந்த பட்டணச் சூழ்நிலையில் எங்கேயோ சூனியமான தனியிடத்தில் தவிப்பது போன்ற துயர உணர்வில் கண் கலங்கிப் போனாள்.

சில மாதம் கழித்து ஒருநாள் மாலை அலுவலகத்தில் இருந்து வந்து களைப்புடன், முன்னறையில் புதிதாக அவள் வாங்கிப் போட்டிருந்த பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்தான் நிரஞ்சன். காபியைக் கலந்து கொண்டு வந்த அவள் கவனித்தாள், அவன் முகத்திலே கவலையும் துயரமும் கப்பிக் கொண்டிருப்பதை.

அலுவலகத்தில் ஏதாவது தகராறா? அவளுக்குக் கவலையாகிவிட்டது. "ஏன் ஒரு மாதிரி இருக்கிறீங்க? உடம்புக்கு ஏதாச்சும்..." காபியை முக்காலி மீது வைத்து விட்டுப் புறங்கையால் அவன் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள்.

"உடம்புக்கு ஒண்ணுமில்லே. மனசுதான் வருத்தப்படறது. அம்மாவைக் கடைத்தெருவிலே பார்த்தேன். அண்ணாவோட ஏதோ வாங்க உம்முடியார் சென்டருக்கு வந்திருந்தாங்க. என்னைக் கண்டதும் பாராதது போல முகத்தைத் திருப்பிக் கொண்டு காரில்போய் ஏறிக் கொண்டு விட்டாங்க. எனக்கு மனசு ரொம்ப வேதனை பட்டது." என்றுகூறித் திணறினான். காபியை எடுத்து ஒரே வாயில் வருத்தத்துடன் விழுங்கிக் கொண்டான்.

கலைந்து நெற்றி மீது புரண்டு கொண்டிருந்த அவனது கிராப்பு முடியை விரல்களால் கோதிச் சீராக்கி கொண்டே



அவள் சொன்னாள். "அம்மாவைப் போல் கனிவுடன் கவனிக்க, மனைவியாக அன்பைக் காட்ட, சிநேகிதியாக உங்கள் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ள, காதலியாக உங்களுக்குக் களிப்பூட்ட நான் கூட இருக்கிறேனே, மறந்துட்டீங்களே. தயவு செய்து எனக்கு ஓர் உதவி செய்வீங்களா? தெருவின் மூலைக் கடையிலே ஒரு சாத்துக்குடிபழம் வாங்கிக் கொண்டு வாங்க."

"இப்போ அந்தப் பழம் சீசன் இல்லையே. புளிச்சு வழியுமே, இன்னொ பல்லு தட்டிப் போகும். கட்டாயம் வேணுமா?" அவன் மெல்ல முறுவலித்தான்.

"புளிப்பாச் சாப்பிட்டால் தேவலை போல இருக்கு. பக்கத்துத் தெருவில் ரேவதின்னு ஒரு பெண் வைத்தியர், கிளினிக் வச்சிருக்காங்க தெரியுமா?"

"நான் கவனிக்கலே, அவங்களுக்கென்ன?"

"அவங்களுக்கு ஒண்ணுமில்லை. எனக்குத்தான்..."

பதறிப் போய்விட்டான் நிரஞ்சன். சுமி! உனக்கு உடம்புக்கு என்ன? என்கிட்ட ஒண்ணுமே சொல்லாமல் நீயே தனியா அந்த டாக்டரைப் போய்ப் பார்த்தியா?"

"ஆமாம். இன்னிக்குக் காலையிலேயே அவங்களைப் போய்ப்பார்த்தேன், ரொம்ப நல்லவங்க. பிரியமாப் பேசினாங்க."

"புளிப்பான சாத்துக்குடிப் பழத்தைப் வாங்கிச் சாப்பிடச் சொன்னாங்களா?" செல்லமாக அவள் கன்னத்தைக் கிள்ளினான்.

"பச்சைப் பிள்ளையாக மனம் குழைஞ்சு தடுமாறிப் போகாமல் இனிமேல் நீங்கள் துணிவாகத் தலை நிமிர்ந்து தனியே வாழத் தெரிஞ்சுக்கணும்னு சொல்லச் சொன்னாங்க."

"அவங்களுக்கு எப்படி நம்ம விஷயம்...?" நிரஞ்சன் விழித்தான்.

"என்ன படிச்சிருந்தாலும், புத்திசாலியாகவும் தொழிலில் திறமையாகவும் இருந்தாலும் சில ஆண்பிள்ளைகளுக்குச் சட்டுனு புரிஞ்சுக்கிற சாமர்த்தியம் கிடையாது. அப்படிப்

பட்டவங்களில் நீங்களும் ஒருத்தர். இன்னும் பளிச்சின்னு சொல்லணுமா?"

"குட்டை குழப்பறே! சுத்தி வளைக்காதே." அன்போடு கடிந்து கொண்டாள்.

"அம்மா, அண்ணா, அண்ணி இவங்க யாருடைய அசட்டையையும் அவமதிப்பையும் பாராட்டாம நீங்க துணிவா இருக்கத் தெரிஞ்சுக்கணும். ஏன்னா விரைவில் நீங்கள் அப்பா ஆகப் போறீங்க. பச்சைப் பிள்ளை ஒன்று வரப் போகிற வீட்டிலே நீங்கள் இன்னமுமா குழந்தையா இருக்கப் போறீங்க?"

துள்ளி எழுந்து நின்ற நிரஞ்சன், ஆசையோடு அவளை அள்ளித் தூக்கிக்கொண்டு அறைக்குள்ளே ஒரு சுற்று வந்தான்.

"விடுங்கோ கீழே போட்டுடாதீங்க! என்ன விளையாட்டு இது?" இறுக்கமாக அவன் தோள்களை அணைத்துக்கொண்டு அவள் கொஞ்சினாள் மகிழ்ச்சியுடன்.

## 12

நிரஞ்சன் சில மாதத்தில் தந்தையாகி விட்டான்.

தன் தந்தையின் நினைவாக கௌரிசங்கர் என்ற பெயரைக் குழந்தைக்கு வைத்து மகிழ்ந்தான், நிரஞ்சன். சுருக்கமாக இருவரும் சங்கர் என்று அழைத்தனர்.

தனக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை நிரஞ்சன் தன் அண்ணனுக்கும் அம்மாவுக்கும் கடிதங்கள் மூலம் தெரிவித்தான். அதற்கு ஏதும் பதில் வரவே யில்லை. ஆனால் பெங்களூரிலிருந்து கேசவனின் தாய் வாழ்த்தும் சிறு பரிசும் அனுப்பினார்.

தன்னை வரவேற்க விரும்பாத நிரஞ்சனின் குடும்பம் தன் குழந்தையையும் வரவேற்கவில்லை என்ற உண்மை சுமித்திராவுக்குக் கசப்பாகத்தான் இருந்தது. ஆனால் அவள் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை.



இப்போது மூவராகிவிட்டதினால் குடும்பத்தில் செலவும் அதிகமாகத் தொடங்கியது; நிரஞ்சன் கவனித்த வேலையில் சம்பளம் நிறைய கிடைத்தது என்றாலும், அவர்களால் முன் போல் மாதாமாதம் குறிப்பிட்ட தொகையைச் சேமிக்க முடியவில்லை.

குழந்தை வளர்ப்பில் சுமித்ரா கண்ணும் கருத்துமாக இருந்தாள். பிரசவத்துக்கு முன் ஆலோசனைகள் தந்து கவனித்துக் கொண்ட டாக்டர் ரேவதியிடந்தான் குழந்தையை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை எடுத்துச் சென்று காட்டி யோசனைகள் பெற்று வந்தாள்.

டாக்டர் ரேவதிக்கு அந்த வட்டாரத்தில் நல்ல பெயர். தாயையும் குழந்தைகளையும் பொறுமையாகக் கவனித்து சிகிச்சை தரும் நல்ல வைத்தியர், கைராசிக்காரர் என்ற புகழ் மிகவும் தயாள மனதுடையவள். வசதி இல்லாதவர்களிடம் கசக்கிப் பிழிந்து பணம் எடுத்துக்கொள்ள மாட்டாள். வசதியுள்ளவர்களிடம் கண்டிப்பாகப் பணத்தைக் கறந்து விடுவாள்.

அன்று காலையில் ரேவதியிடம் குழந்தையைக் காட்டி வர சுமித்திரா கிளம்பினாள். குழந்தைக்குச் சாப்பாட்டில் மாற்றங்கள் ஏதேனும் தேவையா என்று கேட்டுத் தெரிந்து கொள்ளத்தான் அங்கே வந்திருந்தாள்.

குழந்தையைக் குளிப்பாட்டி, துடைத்து, சுத்தமான உடைகள் உடுத்திக் கையில் ஒரு கம்பளத்தையும், பிளாஸ்டிக் கூடையில் அவனுக்குத் தேவையான பால்புட்டி, தண்ணீர் பாட்டில் எல்லாவற்றையும் அடைத்துக் கொண்டு வந்திருந்தாள். சுமித்திரா, வரிசையில் காத்துக் கொண்டிருக்கும் போது படிக்க ஒரு கதைப் புத்தகத்தையும் கையோடு கொண்டு வந்திருந்தாள்.

நர்ஸ் காட்டிய இருக்கையில் அமர்ந்து கொண்டு, குழந்தையை மடியில் போட்டுக் கொண்டு, புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டாள். சிலரைப் போல அக்கம்

பக்கத்திலே உட்கார்ந்து இருப்பவரிடம் கதை பேசித் தொண தொணக்கும் வழக்கம் அவளுக்குப் பிடிக்காது.

சங்கர் மிக விரைவில் தூங்கத் தொடங்கி விட்டான். மடியை நிறைத்த அவனது அழகு முகத்தை உற்றுபார்த்து மகிழ்ச்சியுடன் போர்வையால் கழுத்துவரை மூடிப் பத்திரமாக வைத்துக் கொண்டு, கதைப் புத்தகத்தின் ஏடுகளைப் புரட்டிக் கொண்டிருந்தாள். திடீரென்று கம்மென்ற தாழம்பூ மடல்களின் மணம் முகத்தில் அடித்ததும் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

எதிர் இருக்கையில் அப்போதுதான் வந்து உட்கார்ந்து கொண்ட அம்மாளின் காஞ்சிபுரம் பட்டுச் சேலையிலிருந்து தான் மணம் வந்தது. அகலமான சரிகைக் கரை கொண்ட சேலையின் ஓரந்தான் முதலில் சுமித்திராவின் கண்களில் பட்டது. மெல்லக் கண்களை மேலே ஓடவிட்ட போது, மறுபடியும் திடுக்கிட்டுப் போனாள்.

சுமித்திரா எதையும் சட்டென்று மறந்துவிடக் கூடியவள் அல்ல. ஒரு தடவைதான் பார்த்தாள். அதுவும் அச்சம் நிறைந்த சூழ்நிலையில் என்றாலும், அவளுக்கு தன் மாமியாரின் முகம் மனத்திலே பளிச்சென்று இருந்தது.

சுமித்திராவுக்குக் காரணம் இல்லாமல் நெஞ்சு படபடத்தது. புத்தகத்தை மூடிப் பையில் வைத்துவிட்டு விழித்துக் கொண்டு புரண்ட மகனைத் தூக்கி மடிமீது நன்றாக வைத்துக் கொண்டாள்.

சங்கர் நன்றாக விழித்துக்கொண்டு விட்டான். கூட கொண்டு வந்த பால்புட்டியை எடுத்துக் கொடுத்த போது வேகமாகச் சப்பிக் குடிக்கத் தொடங்கினான்.

"வயது ஒன்னு இருக்குமா?" அருகில் இருந்த ஓர் அம்மாள் குழந்தை முகத்தைப் பார்த்துவிட்டு ஆவலுடன் கேட்டாள்.

"ஆமாம்" என்றாள் சுமித்திரா.

"உடம்புக்கு என்ன?" அவள் தொடர்ந்தாள்.



"ஒன்னும் இல்லை. குழந்தை வளர்றதைஎன்னு அடிக்கடி காட்டிட்டுப் போகச் சொன்னாங்க டாக்டர் அம்மா. அதுக்குத் தான் வந்தேன்." சுமித்திரா மெல்லியதாக முறுவலித்தாள்.

எதிரே உட்கார்ந்திருந்த மாமியார் தன்னையே உற்றுப் பார்ப்பதை உணர்ந்தபோது அவள் நெஞ்சு இன்னும் வேகமாகத் துடிக்கத் தொடங்கியது.

"இந்தக் காலத்துப் பெண்கள் ரொம்பத் தெரிஞ்சு வச்சிருக்காங்க. எங்கள் காலத்திலே குழந்தையை வளர்க்கும் போது நாங்கள் அடிக்கடி வைத்தியர் யோசனையைக் கேட்கிறது இல்லை."

அப்படிச் சொல்லாதீங்க. வீட்டிலே பெரியவங்க, அனுபவம் உள்ளவங்க இருப்பாங்க. அவங்க அப்போதைக்கு அப்போது ஆலோசனை சொல்லுவாங்க. இந்த காலத்திலேதான் தனிக் குடித்தனம்னு சிறுசுகள் புறப்பட்டு விடுகிறதுங்களே. அதனால் தான் ஒன்னுமே தெரிகிறதில்லை என்று, மூன்றாவதாக இருக்கையில் அமர்ந்திருந்த வயதான பாட்டி விளக்கம் கொடுத்தாள் உரத்த குரலில்.

"எம்மா, உன் வீட்டிலே பெரியவங்க யாரும் கிடையாதா?" முதலில் பேசியவள் கேட்டபோது, சுமித்திரா முகம் சிவந்து போனாள். எதிர்ப்புறத்தில் இருந்த மாமியாரின் கண்கள் தன்னை ஊடுருவதைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

"எல்லாரும் இருக்காங்க. என்னவோ எங்கள் வீட்டுக்காரருக்குத் தனியா இருக்கணும்னு ஆசை."

"உன் பக்கத்து மனுஷா யாரும் கிடையாதா?"

"அப்பா மட்டுந்தான் இருந்தார். அவரும் கல்யாணத்துக்கு முன்னாடி போயிட்டார்."

"அட பாவமே! என்ன இருந்தாலும் உறவுன்னு சொல்லிக்க நமக்குன்னு நாலு பேர் இருந்தாதான் அம்மா மனைக்குத் தெம்பு."

"அக்கம் பக்கத்திலே உங்களைப் போல இருக்கிறவங்களை உறவுன்னு நெனைக்கக்கிறேன்."

"ஆமாம், ஆமாம். எல்லாம் நம்ம ஊர், எல்லாரும் நம்ம சொந்தக்காரங்கன்னு நெனைக்கிறது ரொம்ப நல்லது அம்மா. அறிவுள்ளவங்க அப்படித்தான் எல்லாரோடையும் கூடிக் கலந்து வாழ முயலுவாங்க."

"குழந்தைக்குப் பேர் என்ன வச்சிருக்கீங்க? ஆணா, பெண்ணா?"

"ஆண் குழந்தை. என் மாமனார் பேர் வச்சிருக்கோம் சங்கர்னு கூப்பிடறோம்."

கமலம் விடுக்கென்று நிமிர்ந்து அவளை நேருக்கு நேர் பார்த்தாள்.

சற்றுமுன் கடுமை தெரிந்த அந்த முகத்திலே கூட லேசாக ஒருசிறு முறுவல். மாரிக் காலத்து நிலவு போல மெல்லப் படர்வதை சுமித்திரா கண்டாள்.

எழுந்து சென்று, "அத்தை! உங்கள் பேரனைப் பார்த்தீங்களா?" என்று சொல்ல வேண்டும் போல இருந்தது. அறிமுகம் செய்துகொள்ள வேண்டும் என்ற வேகம் அவளுள் எழுந்தது.

அதற்குள் நர்ஸ் அவளை அழைத்து விட்டாள். "திருமதி சுமித்திரா நிரஞ்சன் நீங்கள்தானே? வாங்க உள்ளே. டாக்டர் அம்மா அழைக்கிறாங்க."

குழந்தையை அள்ளித் தோள்மீது போட்டுக் கொண்டு, பிளாஸ்டிக் பையை ஒரு மூலையில் வைத்து விட்டு அவள் அவசரமாக எழுந்து, டாக்டரின் அறைக்குள் சென்றாள். குழந்தையின் சுருண்ட முடியும், நிலவு போன்ற அழகு முகமும் அவள்தோள் மீது தெரிந்தன.

கமலம் வைத்த கண் வாங்காமல் குழந்தையையே பார்த்தாள்.

நெஞ்சை என்னவோ செய்தது அவளுக்கு.

சுமித்திரா சிரித்த முகத்துடன் சிறிது பொழுதில் வெளியே வந்தாள்.



திடமென்று அவளுக்கு ஒரு துணிவு ஏற்பட்டது. அவள் வேகமாக மாமியாரின் முன்வந்து நின்றாள்.

"அத்தை! உங்கள் உடம்புக்கு என்ன?" கவலையுடன் விசாரித்தாள். "உங்கள் பேரனைப் பார்த்தீங்களா? மாமா பேர் தான் வச்சிருக்கோம்" என்று மகிழ்ச்சியுடன் குழந்தையை அவள் முன் நீட்டினாள்.

"தாத்தா... தாத்தா" என்று குழறியபடி கைவிரலைச் சப்பிக் கொண்டிருந்த அந்தப் பச்சைப் பாலகனது அழகு முகத்தை நிமிர்ந்து பார்த்த கமலம் ஆடிப்போய்விட்டாள்.

"எங்கே இப்படிக்கொடு."

அவள் கையை நீட்டு முன் அந்த விபரீதம் நடந்து விட்டது. புயலாக அண்ணி வித்யா உள்ளே வந்தாள்.

"இங்கேயா உட்கார்ந்திருக்கீங்க? முதல்லே ரத்தப் பரிசோதனைக்கு அழைச்சுப் போகச் சொன்னேன் டிரைவரிடம். அங்கே போய்ப் பார்த்தால் உங்களைக் காணோம். வாங்க" அதிகாரமாக மாமியாரை விரட்டி அழைத்துக்கொண்டு வெளியே போய்விட்டாள்.

கையில் வாரைப் பிடித்துக் கொண்டு இழுத்துச் செல்லப் படும் நாய்க்குட்டி போல் கமலம் வாய் பேசாமல், இளைய மருமகளைத் திரும்பிப் பார்க்கத் துணிவின்றி, வெளியே மெல்ல நடந்து சென்றாள்.

"யாரும்மா அவங்க?" பக்கத்தில் இருந்தவளின் மண்டை வெடித்தது.

"உங்களைப் போல் தெரிஞ்சவங்க தான்." சமாளித்தபடி கூடையைத் தூக்கிக்கொண்டு வெளியே வந்தாள் சுமித்திரா.

## 13

இந்தக் குறுகிய காலத்துக்குள் சுமித்திரா அந்தத் தெருவில் இருந்த பல பெண்களுக்குப் பழக்கமாகி விட்டாள். ஆனாலும்,

அக்கம்பக்கத்தவர்களிடம் அநாவசியமாகப் பேச்சுவார்த்தை வைத்துக்கொள்வது இல்லை. என்ன, ஏது என்று வம்பு தும்புகளில் தலையிட்டுக் கொள்வதும் இல்லை. அதே சமயம் தன்னால் பிறருக்கு ஏதேனும் தேவைப்பட்டால் மறுக்காமல் முடிந்தவரை உதவினாள்.

அக்கம்பக்கத்தவர்களிடம் அளந்து தான் பேசுவாள்.

"இன்று ஏன் இப்படி ஒரு வெயில் காய்கிறது? விலைவாசிகள் இப்படி உயர்ந்துகொண்டே போனால் கட்டுப்படுத்துவது எப்படி?" என்ற பொதுவிஷயங்களை மட்டுமே பேசினாள். தன்னைப் பற்றியோ தன் குடும்பத்தைப் பற்றியோ அவள் யாரிடமும் வாயைத் திறந்தது இல்லை. பட்டும் படாமலும் அவள் மற்ற பெண்களிடம் மிகவும் ஜாக்கிரதையாகத்தான் பழகினாள்.

அன்று மாலை குழந்தை சங்கரை இடுப்பில் சுமந்து கொண்டு அருகில் கடை வரை போயிருந்தாள். தேவையான சாமான்களை விரைவில் வாங்கிக்கொண்டு அவள் திரும்பும் போது அடுத்த வீட்டு அஞ்சுகம் பரபரப்புடன் வருவதைக் கவனித்தாள்.

"நல்லவேளை, நீ வந்து விட்டாய். என் மகன் பள்ளிக் கூடத்தில் இருந்து திரும்புவான். வீடு பூட்டியிருந்தால், சாவி உன்னிடம் இருக்கும்; வாங்கிக் கொள்ளவேணும் என்று காலையிலேயே சொல்லி வச்சிருக்கேன். இந்தா! அவன் வந்தால் கொடுத்துடு" என்று சாவியை அவளிடம் நீட்டினாள்.

சுமித்திரா அமைதியாக வாங்கிக் கொண்டு, "ஆகட்டும்" என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தாள். மெல்லியதாக முறுவலித்தாள்.

"என் நாத்திக்கு நேத்துக் காலை கருணாகரி மருத்துவமனையில் பெரிய ஆபரேஷன் செய்தாங்க. காலையிலே தான் நினைவு வந்தது. அவங்களைப் போய்ப் பார்க்க எனக்கு இப்பத்தான் ஒழிஞ்சது."

"அப்படியா? என்றாள் சுமித்திரா.



முகத்திலே பவுடர் மீது கொப்பளித்த வேர்வையைக் கைக்குட்டையால் ஒத்திக் கொண்டாள். அஞ்சுகம் "என் நாத்தனார் படுத்திருக்கிற வார்டிலே பக்கத்து கட்டிலில் ஓர் அம்மா இதே மாதிரி சிகிச்சைக்காக வந்து படுத்திருந்தாங்க. நாலு நாளைக்கு முன்னர்தான் அவங்களுக்கு ஆபரேஷன் ஆச்சு. இப்போ பக்கத்திலே ஒரு தனி அறையிலே, படுக்க வச்சிருக்காங்க. அவங்களைப் பக்கத்திலே இருந்து கவனிக்கக் யாருமே கிடையாது. ராத்திரி முச்சூடும் அனத்திக்கிட்டு அவங்க போட்ட சத்தத்தைக் கேட்டு என் நாத்தனாருக்குக் கிலி பிடிச்சுப் போச்சு. ரொம்பச் சமாதானப்படுத்தி ஆபரேஷனுக்கு அனுப்பி வச்சோம்."

"ஐயோ பாவமே" ஒவ்வொருத்தர் உடம்பு ஒவ்வொரு தினுசு" என்று சுமித்திரா பெருமூச்சு செறிந்தாள்.

ஒவ்வொரு வீடு ஒவ்வொரு தினுசுன்னு சொல்லு. பொருத்தமா இருக்கும். ஒரு வாரமா நாலும், இவரும் ஆஸ்பத்திரியும் வீடுமா அலைஞ்சுகிட்டிருக்கிறோமே, நல்ல வசதியான வீட்டைச் சேர்ந்தவங்க அந்தம்மா. கொஞ்சம் வயதானவங்க. மகனும் மருமகளும் தினமும் சித்த வந்து எட்டிப்பார்த்துட்டுப் போறாங்க. மகனாவது எப்படி இருக்கிறீங்க அம்மான்னு கேட்கிறார். அந்த மருமகள் இருக்கிறாளே, ரொம்பத் திமிர் பிடிச்சவள் போல தெரியறா. ராத்திரியெல்லாம் கூச்சல் போட்டு மத்த நோயாளிகளை ரொம்பக் கஷ்டப்படுத்துறீங்களாம். உங்களை தனி அறையிலே வைக்க ஏற்பாடு செய்துட்டார் டாக்டர். தனி அறையின்னா அதிகம் பணம் செலவாகும் தெரியுமில்லையா? யார் ராத்திரி முழுவதும் கூட துணைக்கு இருக்கமுடியும்னு நினைக்கிறீங்க" ன்னு, பட படன்னு அந்த அம்மாகிட்ட பேசினதைக் கேட்டு, எனக்கே பரிதாபமாய்ப் போயிடுச்சு. "நர்சுகள் பார்த்துப்பாங்க, நீ சிரமப் படவேண்டாம். வித்ர ? "அப்படின்னாங்க, பெயர் அழகா தான் இருக்கு; பெண்ணும் அழகாதான் இருக்கா, குணம்?" அடிக்குரலில் சீறினாள் அஞ்சுகம்.

சுமித்திரா திடுக்கிட்டுப் போனாள்? அந்த மருமகள் பெயர் வித்யாவா? தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டாள். "அந்தம்மா பெயர் தெரியுமா? எந்த வார்டில் இருக்காங்க?" பல விவரங்களையும் கேட்க வேண்டும் என்ற துடிப்பு. ஆனால், கேட்கத் துணிவு இருக்கவில்லை.

"வரேன். கதை பேசிக் கொண்டு நிக்கிறனே?" அஞ்சுகம் வேகமாக நடந்தாள்.

வீட்டுக்கு வந்த சுமித்திராவுக்கு வேலையே ஓடவில்லை. சில நாட்களுக்கு முன்னர் ரேவதியின் மருத்துவ அறையில் மாமியாரைப் பார்த்த நினைவு வந்தது. உடம்புக்கு ஏதோ கோளாறு. இல்லாவிட்டால் அங்கே ஏன் வரவேண்டும்? திடீரென்று அவளுக்கு ஒரு யோசனை பளிச்சிட்டது.

சமையலை வேகமாக முடித்துவிட்டு, குழந்தைக்கு உணவை ஊட்டினாள். அவளைத் தூக்கி இடையில் சுமந்து கொண்டு கதவைப் பூட்டிவிட்டுக் கிளம்பினாள்.

நல்லவேளை அஞ்சுகத்தின் மகன் அவளைத் தேடிக்கொண்டு வந்தான். சாவியை அவனிடம் கொடுத்து விட்டு அவள் வேகமாக நடந்தாள்.

"இப்பத்தானே உன் குழந்தையைப் பார்த்தேன். அதுக்குள்ளே என்ன உடம்புக்கு?" ரேவதி, வியப்புடன் விசாரித்தாள்.

சுமித்திராவுக்குத் திடீரென்று துக்கம் நெஞ்சை அடைத்தது. சட்டென்று பேச முடியவில்லை. மனதை விட்டு விஷயத்தைச் சொல்லவும் வெட்கமாக இருந்தது.

"இந்த மாதம் பன்னிரண்டாந் தேதி குழந்தையை நான் கொண்டு வந்து காண்பிச்ச போது இங்கே கமலம் என்கிற ஒரு அம்மா வந்திருந்தாங்க..."

"எந்தக் கமலம்? அவங்களைப் பத்தி உனக்கு என்ன கவலை? அடக்கமாட்டாத வியப்புடன் ரேவதி கேட்டாள்.



'நுங்கம்பாக்கம், சாஸ்திரி அவின்யூவில் இருந்து வருகிற வங்க. அவங்க மகன் பெயர் சுரேந்திரன். ரேணுகா என்டர் பிரைசிலே பெரிய வேலையில் இருக்கிறவர்.'

'அந்தக் கமலம்மாளைச் சொல்றியா? ஆமாம் அவங்களைப் பத்தி உனக்கு என்ன தெரியவேண்டும்?

'இத்தனை நாளும் உங்க கிட்ட நானும் என் கணவரும் சொல்லிக் கொண்டது இல்லை. அவங்க என் மாமியார், எங்கள் கல்யாணத்தினாலே குடும்பத்திலே மனத்தாங்கல். நாங்கள் ஒதுங்கியிருக்கிறோம். ஆனால் உறவு விட்டுப் போகாதே? என் மாமியாருக்கு உடம்புக்கு என்னன்னு தெரிஞ்சுக்க ஆவலா இருக்கு. என் கணவர் கேள்விப்பட்டால் ரொம்பக் கவலைப்படுவார்." சுமித்திரா தழு தழுத்தாள்.

ரேவதி மனம் மகிழ்ந்து போனாள். "வைத்தியர்கள் தங்கள் நோயாளிகளின் உடல் நிலையைப் பற்றி மத்தவங்க கிட்ட சொல்றது முறையில்லை. நீ நெருங்கின உறவுப் பெண் அதனால் சொல்றேன். அவங்களுக்கு ஒருவகையில் நான் குடும்ப வைத்தியர். அவங்களைக் கருணாகரி மருத்துவ மனையில் அனுமதிச்சிருக்கேன். ஆபரேசன் ஆகி நாலைந்து நாளாகிறது. வயிற்றிலே கட்டியிருந்தது. தனி அறையிலே இருக்காங்க. போய்ப் பார்க்கிறியா?"

"அவங்க உடம்பு இப்போ எப்படி இருக்குன்னு சொல்ல முடியுமா?"

"இப்போ நல்லா குணமாகிக் கொண்டு வர்றாங்க."

"ரொம்ப நன்றி டாக்டர்" என்று கூறிவிட்டு வெளியே வந்தாள் சுமித்திரா.

அன்று நிரஞ்சன் அலுவலகத்திலிருந்து திரும்ப வெகு நேரமாகிவிட்டது. அவன் உற்சாகம் குறைந்தவனாக, ஏதோ நினைவில் உறைந்திருப்பதை அவள் கவனித்தாள். பரிமாறிய உணவில் பாதியை மட்டும் வேண்டா வெறுப்பாகச் சாப்பிட்டுவிட்டு எழுந்துவிட்டான்.

"பசிக்கலையா? இல்லாட்டி சாப்பாடு ருசிக்கலையா? கவலையுடன் விசாரித்தபடி கையைத் துடைத்துக்கொள்ள துண்டை எடுத்துக் கொடுத்தாள்.

"உன் சாப்பாட்டிலே குறை எதுவும் இல்லை. என் மனசில் தான் குறை" பேச முடியாமல் உதட்டைக் கடித்துக் கொண்டான்.

"நான் அதைப்பத்தித் தெரிஞ்சுக்கலாமா?" மெல்ல கேட்ட சுமித்திரா, துயரம் கப்பிய அவனுடைய முகத்தைக் கனிவாகப் பார்த்தாள்.

"உன் மாமியாருக்கு உடம்பு சுகமில்லை. ஆஸ்பத்திரியில் அறுவைச் சிகிச்சை நடந்ததாம். என் சிநேகிதன் மூலம் கேள்விப்பட்டேன். எனக்கு ரொம்பத் துக்கமாக இருக்கு. பெத்த தாய் உடம்புக்கு முடியாமல் இருக்கும் போது கூடத் தெரிவிக்காமல் அண்ணன் சதி செய்திருக்கிறாரே?"

"இப்போ உடம்பு எப்படி இருக்காம்?"

"குணமாகிக் கொண்டு வருகிறதாம். கொஞ்ச நாளில் ஆஸ்பத்திரியில் இருந்து வீட்டுக்கு அனுப்பிவிடுவாங்களாம்."

அப்போ கவலையை விடுங்க. அவங்களுக்கு உடம்பு மோசமாகி விட்டதுன்னு கேள்விப்பட்டால், நாம் உடனடியாப் போய்ப் பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம். உங்கள் அண்ணி, அண்ணன் யாருடைய உதாசீனத்தையும் அப்போ பொருட்படுத்தத் தேவையில்லை. குணமாகிட்டு வராங்கன்னு கேள்விப்பட்டு வந்திருக்கிறீங்க. அதுவே இப்ப போதும்னு நினைக்க பொறுமையா இருங்க. நிலைமை எப்பவும் இப்படியே இருக்காது. தண்ணி அடிச்சு தண்ணி விலகாது. அது போலத்தான் உறவுகளும்.

"சுமி! நீ சொல்றது என் மனசுக்கு எத்தனை ஆறுதலா இருக்கு தெரியுமா? அண்ணனும் அண்ணியும் படுத்துகிற பாட்டுக்கு, நீ மட்டும் கூடத் துணையாக இல்லாட்டா என் வாழ்வு சீர் குலைஞ்சு போயிருக்கும்."



"அப்பாவுக்குப் பின் தனியாகிவிட்ட எனக்கு நீங்கள் வாழ்வு கொடுத்திருக்காவிட்டால், என் கதி என்ன ஆகியிருக்கும்? எனக்கு நீங்கள் துணை, உங்களுக்கு நான் துணை."

கட்டிலின் மீது படுத்திருந்த குழந்தை சங்கர் விழித்துக் கொண்டு, "அப்பா..." என்று கூவி அழுதபோது நிரஞ்சன் உள்ளே சென்று மகனை அள்ளி எடுத்துக் கொண்டான்.

"நம் இருவருக்கும் இவன் துணைன்னு சொல்றான் கேட்குதா? மகனை மார்புடன் அணைத்துக்கொண்டு சிரித்தான்.

## 14

சுமித்திரா தன் மகன் சங்கரைத் தூக்கிக் கொண்டு கடைத் தெருவுக்குப் போயிருந்தாள். நாளுக்கு நாள் எடை கூடி, ஆரோக்கியமாகக் கொழு கொழு என்று வளர்ந்து விட்டிருந்த குழந்தை சங்கர் இடுப்பிலே கனத்தான். வீட்டுச் சாமான்கள் கொண்ட துணிப்பை கையில் கனத்தது. எதிர்வெயிலில் கண்களை இடுக்கிக் கொண்டு அவள் நடைபாதை மீது வேகமாக வந்து கொண்டிருந்தாள்.

திடீரென்று மிக அருகில் பாதையோரத்திலே வந்து நின்ற காரைப் பார்த்தவுடன் அவள் நெஞ்சு படபட வென்று துடித்துக் கொண்டது. அவர்கள் யாரும் அவளைக் கவனித்ததாகப் புலப்படவில்லை. அவளுடைய மைத்துனர் சுரேந்திரன்தான் வண்டியை ஓட்டிக் கொண்டு வந்திருந்தான். கணவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த வித்யா முன்னைவிட உப்பியிருந்தாள். வேலையாட்கள் உள்ள வீடு, வசதியான வாழ்க்கை. குழந்தை பிறந்த பிறகு பருக்கத் தொடங்கினவள். நிறுத்தவில்லை போலும். அவளது நீண்ட முகம் வட்டமாகி விட்டிருந்தது.

வண்டியைவிட்டு இறங்கியவள் திணறிக் கொண்டு கைப் பைக்காகப் பின் இருக்கையில் குனிந்து தேடிக் கொண்டிருந்தாள்.

சுமித்திராவின் கண்கள் அங்கே தாவின. அவளுக்கு மிகவும் திகைப்பாகி விட்டது. மருமகளுக்கு எதிராக மாமியார் கமலம் காய்ந்த சுக்குப் போல் மிகவும் இளைத்திருந்தாள். ஏன் இப்படி? அறுவைச் சிகிச்சைக்குப் பின் உடல்நிலை தேறவில்லையா?

அவள் தனக்குள் எண்ணியபடி மெல்ல நடந்தாள்.

"இந்த உலகம் மிகவும் சிறியது. அதனால்தான் நாம் மீண்டும் மீண்டும் சிலரைச் சந்தித்துக்கொண்டே இருக்கிறோம்." அவள் அப்பா அவளிடம் வேடிக்கையாகச் சொல்வது வழக்கம்.

உலகமே சிறியது என்றால், அவர்கள் வாழும் சென்னை அந்தக் கணக்கில் ஒரு சிறு புள்ளிதான். அதனால் தானோ என்னவோ, இந்தச் சில மாதங்களில் அவள் தன் கணவனின் குடும்பத்தாரை எத்தனை இடங்களில் பார்த்து விட்டாள்! ஆனால், ஒரு தடவை கூட அந்த எதிர் பாராதச் சந்திப்புகளைப் பற்றி அவள் தன் கணவரிடம் சொல்லவில்லை. சொல்லி அவனுடைய மனத்தைப் புண்படுத்துவானேன் என்ற எண்ணந் தான் காரணம்.

கமலம்மாளுக்கு அறுவை சிகிச்சை நடந்து குணமாகிக் கொண்டிருக்கிறாள் என்று அவள் கேள்விப்பட்ட சில நாளைக்குப் பிறகு, ஒருநாள் மாலை அவள் தன் குழந்தையுடன் கோயிலுக்குப் போயிருந்தாள். பிரார்த்தனையை முடித்துக் கொண்டு வெளியே வந்தாள். குளு குளுவென்று வீசிய காற்றை அனுபவித்த வண்ணம் வெளிப் பிரகாரத்தில் பலர் அமர்ந்திருந்தனர். அவளும் குழந்தையுடன் ஒரு பக்கமாகச் சிறிது நேரம் உட்கார்ந்து விட்டாள்.

தேங்காய் பழத்தட்டுடன் மெல்ல நடந்து அவளைத் தாண்டிக் கொண்டு சென்ற பெண்மணியைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள்.

அவள் மாமியார் கமலம் தன் சிகிச்சைக்குப் பின் கோயிலுக்கு வழிபட வந்திருக்கிறாள். முன்னைவிடப் பாதியாக மெலிந்த தோற்றம், வெளிர் அடைந்த முகம், தளர்ந்த நடை,



கையில் பிடித்திருந்த பூஜை சாமான் நிறைந்த தட்டையும் தூக்க முடியாத சோர்வு முகத்தில்.

ஓடிச்சென்று மாமியாருக்கு உதவ வேண்டும் என்ற ஆவல் சுமித்திராவுக்கு. "அந்த தட்டை இப்படிக் கொடுங்கள், நான் தூக்கிக் கொண்டு வருகிறேன்." என்று சொல்ல நினைத்து எழுந்தாள்.

"அத்தை" என்று கூப்பிட வாயைத் திறந்தாள். ஆனால் அடுத்த கணம் வார்த்தை தொண்டையிலே நின்று விட்டது.

பின்னால் சற்றுத் தொலைவில் தோளில் பையை மாட்டிக் கொண்டு பட்டுப் புடைவைத் தலைப்பை விசிறியபடி கழுத்திலே மின்னிய வைர அட்டிகையைச் சரி செய்து கொண்டு வந்த வித்யாவைப் பார்த்து விட்டாள் சுமித்திரா.

மெலிந்து தளர்ந்து விட்டிருந்த மாமியார் கையில் சுமையாகக் கனமான பிரார்த்தனைச் சாமான் தட்டைக் கொடுத்துவிட்டு, அவள் வெறுங்கைகளை வீசிக்கொண்டு பின்னால் மிடுக்காக வந்து கொண்டிருந்தாள். எத்தனை அசட்டையான போக்கு?

ஒரு சமயம் அவள் தன் மாமியாரை அலட்சியமாக துச்சமாக நடத்துகிறாளோ என்னவோ? வெளியே சொல்லிக் கொள்ள முடியாமல் கமலம் புழுங்கிக் கொண்டிருக்கிறாளோ?

சுமித்திரா கனத்த மனத்துடன் கோயிலை விட்டு வெளியே வந்தாள்.

அதற்குப் பிறகு ஒரு நாள் பகல் சினிமா பார்க்க கணவனிடம் அனுமதி பெற்றுக்கொண்டு அடுத்த வீட்டு அஞ்சுகத்துடன் போயிருந்தாள். நகரத்துப் படமாளிகைகளில் ஓடி அடங்கி விட்டிருந்த ஒரு பிரபலமான படம் பார்க்கத் தவறியவர்கள் அந்த ஒதுக்குப்புறமான கொட்டகையை நாடித் தேடிக் கொண்டு வந்திருந்தனர். பகல் காட்சிக்கே பெரும் கூட்டம்.

படம் முடிந்தவுடன் வெளியே வந்தபோது மாலை மங்கி விட்டிருந்தது. ஆனால், அவளது பார்வை பளிச் சென்று அவன் மேல் விழுந்தது. உயர்ந்த வகுப்பில் இருந்து வெளிப்

பட்ட கூட்டத்திலே அவளுடைய மைத்துனன் சுரேந்திரன் காணப்பட்டான்.

'வேலைக்குப் போகாமல் இந்த வேளையில் படம் பார்க்க வந்திருக்கிறாரே' என்று அவள் அதிசயிக்குமுன் அதிர்ச்சியடைந்தாள். அவன் தனியாக வந்திருக்கவில்லை. ஒடிய உயரமாக அமெரிக்கன் ஜார்ஜெட்டில் ஓர் இளம் பெண். மிகவும் நெருக்கமாக அதிகம் பழகியவள் போன்ற முறுவலுடன் அவன் தோள்மீது இடித்தபடி வெளியேறிக் கொண்டிருந்தாள். இருவரும் ஜோடியாகக் காரில் ஏறி அமர்ந்து கொள்வதையும் சுமித்திரா பார்த்து விட்டாள்.

ஒரு பெரிய நிர்வாகத்தின் தலைவராகப் பணி புரியும் அவள் மைத்துனனிடம் மனைவிக்குத் தெரியாமல் ஒரு விவகாரம் இருக்கிறதா?

வித்யாவுக்குக் கட்டாயம் தெரிந்திருக்க முடியாது. தெரிந்திருந்தால், அவள் ஆளைக் கிழித்துப் போட்டு விடுவாளே! அத்தனை கோபக்காரியாச்சே?

சுமித்திராவுக்குத் தாங்கமுடியாத அதிர்ச்சி, குழப்பம், ஆனால், அவள் கண்ட காட்சியைப் பற்றி கணவனிடம் மூச்சுக்கூட விடவில்லை.

கடைத் தெருவில், பொருட்காட்சி மைதானத்தில், கோயில் என்று பல இடங்களில் அவள் அவர்களை நேருக்கு நேர் சந்தித்தாள். ஆனால் தொடர்பு கொள்ளவில்லை. அவர்களும் பேச விரும்பவில்லை.

அவளும் நெருங்க அஞ்சினாள்.

நிரஞ்சன் வேலைக்கு அமர்ந்த நிறுவனத்தில் அவனுக்கு விரைவில் வேலையில் உயர்வு, சம்பள அதிகரிப்பும் ஒருங்கே கிடைத்தன. அத்துடன் அவர்களுக்குச் சொந்தமாக வீடு கட்டிக் கொள்ளும் வாய்ப்பும் கிடைத்தது.

அவர்கள் வசித்த குடியிருப்புக்கு அருகே காலியாகக் கிடந்த மனை ஒன்றைத் துண்டு போட்டு விற்பனைக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தார், அதன் சொந்தக்காரர்.



நிரஞ்சன் உடனடியாகச் செயல்பட்டான். அவனுடைய நிறுவனத்தைச் சேர்ந்த சிலருடன் கூட்டாக அந்த மனையைக் கம்பெனி மூலமாக விலைக்கு வாங்க ஏற்பாடு செய்து, பின்னர் ஆளுக்கு ஒரு மனையில் நிறுவனத்திலேயே கடன் தொகை பெற்று வீடு கட்டுவது என்ற ஏற்பாடு: மிகவும் முயன்று அதை நிறைவேற்றியிருந்தான்.

அவர்கள் பங்கிற்கு ஒரு கிரவுண்டு நிலம் தெருவின் முன் பக்கத்தில் வசதியான இடத்தில் கிடைத்தது. நில விலையுடன் கட்டடச் செலவுத் தொகையும், சேர்த்துக் கடனாக நிறுவனத்திலிருந்து கிட்டிவிடவே, வீட்டுக்கு அடிக்கல் போட்டுப் பூஜை செய்ய நாள் குறித்திருந்தான்.

இந்த நல்ல செய்தியை அம்மாவுக்குத் தெரிவிக்க அவன் விரும்பினான். கணவனுடைய விருப்பத்துக்குத் தடை சொல்லாமல் சுமித்திரா தன் மாமியார் முகவரிக்கு ஒரு கடிதம் தன் கைப்பட எழுதி, அவர்களது ஆசியைக் கோரியிருந்தாள்.

அவர்களது வாழ்க்கையில் ஏற்படும் இன்பதுன்பங்களில் குடும்பத்தார் கலந்து கொள்ள மாட்டார்கள் என்பது தெரிந்த கதைதான். ஆனாலும், கணவனைத் திருப்தி செய்ய, அவள் தன் மாமியாருக்குப் பணிவுடன் எழுதியிருந்த கடிதத்துக்கு, பதில் சீறிக்கொண்டு வந்திருந்தது. வித்யா எழுதியிருந்தாள்.

'உன் உறவே வேண்டாம் என்று ஒதுங்கியிருக்கும் என் மாமியாருக்கு கடிதம் எழுதி உறவு கொண்டாட நினைக்கும் உன் துணிவைப் பாராட்டுகிறேன். ஆனால், உன் கடிதத்தை அத்தை கையால் கூடத் தொடவில்லை. கிழித்து எறியச் சொன்னார்கள். அப்படியே செய்துவிட்டேன். அத்துடன் நீ புதுப்பிக்க நினைக்கும் உறவையும் சேர்த்து எடுத்து எறியத்தான் இந்த பதில் புரிந்துகொள்.

வீடு கட்டப் போகிறீர்கள். அதற்குக் கொஞ்சம் பண உதவி தேவை. அஸ்திவாரம் போடுமுன் மாமியாருக்கு தெரிவிக்கும் பாவனையில் புது உறவுக்கு

அஸ்திவாரம் போட நினைக்கிறாய். அதோடு பனைத்துக்கும் இப்பொழுதே அடி போடப் போகிறாய்.

நீ நேற்று வந்தவள். நான் இந்தக் குடும்பத்திலே ஊறிப் போய் ஊன்றிக் கொண்டவள். உன் தந்திரம் தெரிந்துதான் உன்னையும் உன் கணவனையும் ஒதுக்கி வைத்திருக்கிறோம். மீண்டும் இதுமாதிரி முயற்சியில் ஈடுபட்டால் பின் அவமானத்துக்கு உள்ளாவாய் என்று எச்சரிக்கிறேன். -வித்யா."

"அவர்கள் வரவேண்டாம், 'நல்லாயிருங்கள்' என்று அம்மா ஆசி சொன்னதாக ஒரு பதினைந்து பைசா கார்டு அதையாவது அனுப்பியிருக்கலாமே?" ஆதங்கப்பட்டான், அவன்.

"ஆமாம், நானும் கேட்கத்தான் நினைக்கிறேன். அப்படி உங்களை வெறுக்கும்படி நீங்கள் அவர்களுக்குச் செய்த கொடுமை என்ன?" எனக்குச் சொல்லுங்கள். கொதித்துக் கொண்டு புறப்பட்ட உணர்வைக் கட்டுப்படுத்த இயலாமல் சுமித்திரா கேட்டுவிட்டாள்.

"சொல்கிறேன். உனக்குத் தெரியாத இரகசியம் நம்மிடையே ஏதும் வேண்டாம். நீ கேட்டு விட்டு சிரிப்பாய். அப்படி உட்கார் சொல்கிறேன்" என்றான் நிரஞ்சன்.

## 15

மகனை அள்ளி மடிமீது வைத்துக்கொண்டு இருக்கையில் அமர்ந்தான் நிரஞ்சன்.

"எங்கிருந்து தொடங்கட்டும்? கதை கேட்கத் தயாராகி விட்டாய். சொல்லா விட்டால் விடமாட்டியே" வேடிக்கையாக கேட்டான். குழந்தையின் பிஞ்சு விரல்கள் முகத்தை வருடியபோது இன்பத்திலே மெய்சிலிர்த்துப் போனான்.



இப்படிப்பட்ட சுகத்தை- மகிழ்ச்சியை வேண்டாம் என்று உதறிவிட்ட தாயைப்பற்றி நினைத்த மாத்திரத்தில் அவன் உள்ளம் வேதனையில் புழுங்கியது.

"என்ன எங்கேயோ யோசிக்கறீட்டு... கதை ரொம்ப நீளமோ?" சுமித்திராவும் வேடிக்கையாகக் கேட்டபடி எதிரே வந்து அமர்ந்து கொண்டாள். சிரித்துக் கொண்டு கணவன் பேசியபோதிலும் அவன் முகத்திலே கவிழ்ந்து கிடந்த வேதனையை அவளால் புரிந்து கொள்ளமுடிந்தது.

"தேனாம்பேட்டையில் சுந்திரமூர்த்தி தெருவில் இருக்கும் பெரிய பழையவீடு அப்பாவின் பரம்பரைச் சொத்து. ஒரு தடவை நாம் அந்த வழியாகப் போன போது காட்டினேனே, ஞாபகம் இருக்கா?" கேட்டான் அவன்.

பதிலுக்குத் தலையைப் பலமாக ஆட்டினாள் அவள்.

அவர்கள் இருவரும் அருகில் இருந்த சினிமாக் கொட்டகையில் படம் ஒன்றைப் பார்த்துவிட்டுச் சாலையைத் தாண்டி, அந்தத் தெருவுக்குள் புகுந்து பஸ் நிலையத்தை விரைவாக அடைய நடந்து கொண்டிருந்த போது அவன் அந்த வீட்டை அவளுக்குக் காட்டிய நினைவு வந்தது.

சுற்றுச் சுவர்கள் இடிந்து, புதர் மண்டிக் கிடந்த நாலு கிரவுண்டு பூமிக்குள் உயரமாக நின்ற பழைய காலத்து மாடிக் கட்டடம். ஒரே பார்வையில் அது எவ்வளவு பழுதடைந்து நிற்கிறது என்பதை அவள் அறிந்து கொண்டாள். மாடியையும் கீழ்ப்பகுதியையும் மோட்டார் ரிப்பேர் கம்பெனி ஒன்று வாடகைக்கு எடுத்திருந்தது. தோட்டம் முழுவதும் பல கார்கள் நின்று கொண்டிருந்தன.

சிமெண்டு நடைபாதையில் எண்ணெய்க் கறைகள் சுவர் ஓரமாகப் பல காலி தகர டப்பாக்கள், குறுக்கும் நெடுக்குமாக அலைந்த காக்கிச் சட்டை ஆட்கள்- எல்லாவற்றையும் அவள் கவனித்தாள்.

"பழுதடைந்த பழைய வீடு என்றாலும் இந்த இடத்துக்கு இப்போ விலை மதிப்பு உயர்ந்து விட்டிருக்கு. அப்பாவுக்குப்

பின் அம்மாவுக்கு உடையதாகி விட்டது. நல்ல வாடகைக்கு விட்டிருக்காங்க. அம்மாவுக்குத் தன் செலவுக்கு வேண்டிய பணத்துக்கு ஒருநாளும் கஷ்டமே இல்லை." விவரித்துக் கொண்டே நடந்தான் நிரஞ்சன்.

"ஊசி முனை இடம் இருந்தாலும், இப்போ எங்கேயுமே இடத்துக்கு மதிப்பு உயர்ந்து விட்டிருக்கிறது. இந்த இடத்தை விற்றால் அத்தைக்கு கணிசமான தொகை கிடைக்கும். தம் காலம் முழுவதும் யார் தயவுமின்றி நிம்மதியாக வாழ முடியும் என்றாள் சுமித்திரா."

"அப்பா இறந்து போன போது கூட அம்மா அப்படி ஒன்றும் கதியற்றுப் போகவில்லை. இந்தப் பெரிய வீடு அப்பாவின் இன்சூரன்சு பணம்- அவர் வேலை பார்த்த நிறுவனத்தில் இருந்த வந்த பிராவிடண்ட்பண்டு இக்யாதிகள் நிறையக் கிடைத்தன. அத்துடன் அம்மாவுக்கு அப்பா காலத்தி லேயே வாங்கிப் போட்ட தங்க வைர நகைகள், பிறந்த வீட்டிலிருந்து அவங்க கொண்டு வந்த நகைகள் என்று நிறைய இருக்கின்றன. அப்பா இறந்து போகும் போது அண்ணா என்ஜினியர் வேலைக்குப் படித்துக் கொண்டிருந்தார்.

அன்று அவர்கள் பேசிய அனைத்தும் சுமித்திராவுக்கு நினைவுக்கு வந்தது. "பாவம், சின்ன வயதிலேயே அத்தை விதவையாகி விட்டாங்க." பெருமூச்சு செறிந்தாள்.

"அதைப் பற்றித்தான் சொல்லப் போகிறேன். அவங்க விதவையானதுக்கு நான் காரணம் போல அம்மாவுக்கு என் மேல் தீராத வெறுப்பு."

திடுக்கிட்டுப் போனாள் சுமித்திரா. அவள் நெஞ்சு படபடவென்று துடித்துக் கொண்டது.

"வேடிக்கைதான்! நீங்கள் எப்படி அதுக்குக் காரணமாவீங்க? நீங்கள் செய்த தவறு? கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் தேவலை" என்றாள்.

"எனக்கும் அண்ணாவுக்கும் இடையே பல வயது இடைவெளி. வெகு காலத்துக்குப் பின்னர் நான் பிறந்தேனாம்.



எனக்கு முன் இடையே இரண்டு பெண் குழந்தைகள் பிறந்து இறந்துவிட்டனர். அவர்கள் எல்லாரும் அதிர்ஷ்டசாலிகள்! அவர்கள் பிறந்தவுடனேயே அப்பாவுக்கு வேலையில் உயர்வு. சம்பள உயர்வு என்று பல நலன்களைத் தங்களோடு கொண்டு வந்தார்களாம். அம்மா அடிக்கடி சொல்லி என்னை இடித்துக் காட்டுவது உண்டு." பேச முடியாமல் தடுமாற்றத்துடன் அவன் தரையைப் பார்த்தான்.

அனுதாபத்துடன் அவன் தோளை மெல்லத் தட்டினாள் சுமித்திரா. "அத்தை மனம் கசக்க நீங்கள் செய்த பிசகு தான் என்ன? அதைச் சொல்லுங்கள்" என்று மெல்லிய குரலில் அனுதாபத்துடன் கேட்டாள்.

"உனக்கு நம்பிக்கை உண்டோ என்னவோ தெரியாது. இதுவரை நாம் அறிந்த விஷயத்தைப் பற்றிய பேசியது இல்லை. அம்மாவுக்குத் தீவிரமான நம்பிக்கை உண்டு. அப்பா அது சமயம் நல்ல மதிப்பான பதவியில் இருந்தார். அதனால் அம்மா பிரசவத்துக்காகத் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தாங்க. இரண்டு நாள் பிரசவ வேதனைப்பட்ட பிறகே அம்மாவுக்கு நான் பிறந்தேனாம். ஆண் குழந்தை என்று செய்தியைக் கேள்விப்பட்ட அப்பாவுக்கு மகிழ்ச்சி கட்டுக்கொள்ளவில்லை. தம்முடன் வேலை பார்த்த எல்லாருக்கும் இனிப்பு வழங்கிவிட்டு, என்னைப் பார்த்து மகிழ மோட்டார் சைக்கிளில் விரைந்து வந்தாராம். அம்மாவுக் குத் தாம் கொண்டு வந்த ஆர்லிக்ஸ் நிறைந்த பிளாஸ்கைப் படுக்கையருகே இருந்த மேசை மீது வைத்து விட்டு சிறிய தொட்டிலுக்குள் கிடந்த என்னை வைத்த விழி வாங்காமல் பார்த்தாராம். "குழந்தை என்னைப் போல் இருக்கானா? உன்னைப்போல் இருக்கானா?" அம்மாவிடம் கேலியாகப் பேசிவிட்டு, என்னைக் கொஞ்சி மகிழ்ந்தாராம். மீண்டும் அலுவலகத்துக்குப் போக வேண்டும் என்ற தவிப்பில் விரைவாக அம்மாவிடம் சொல்லிக்கொண்டு குழந்தையை மெல்லத் தொட்டுப் பார்த்து விட்டுப் புறப்பட்டாராம். ஆஸ்பத்திரியின் வாயிலை விட்டுச் சாலைக்குள் திரும்புமுன்,

எதிரே வேகமாக வந்த லாரியுடன் மோட்டார் சைக்கிள் மோதி, அப்பா அங்கேயே இறந்து போனாராம். பிணத்தின் முகத்தில் கூடப் பிள்ளையைப் பார்த்துவிட்டுப் போன மகிழ்ச்சியான சிரிப்பு அப்படியே இருந்ததாம்."

நிரஞ்சனின் தொண்டை கரகரத்துக் கண்கள் கனத்தன. கைக்குட்டையால் மூக்கை ஒத்திக் கொண்டான்.

"பாவம், ஒரு விபத்திலே மாமா இறந்துபோய் விட்டார். அதுக்குப் பச்சைப் பாலகனாகப் படுத்துக் கிடந்த நீங்கள் எந்த வகையில் பொறுப்பாளி?" சிறிது கோபத்துடன் கேட்டாள் சுமித்திரா.

மறுபடியும் அவனுடைய தோளை மெல்ல ஆதரவுடன் தட்டினாள். தன் சிறு கரங்களை நீட்டித் தாயிடம் பாய்ந்து வந்த மகனை வாரித் தன் மார்புடன் அணைத்துக் கொண்டாள். அவர்களின் அன்புச் செல்வன் கௌரிசங்கரன் பிறந்தபொழுது அவர்கள் வாழ்க்கையில் ஏதேனும் சங்கடம் ஏற்பட்டு இருந்தால், அவன் மீது அவளின் தாயுள்ளம் கசந்து விடுமா? தனக்குள்ளே எண்ணி வியந்தாள்.

"பிறந்த குழந்தையைப் பார்த்து விட்டு வெளியே வந்த தந்தைக்கு மரணம் என்றால், அந்தக் குழந்தையின் அதிர்ஷ்டத்தை என்ன சொல்வது? அம்மாவுக்குத் தாங்கமாட்டாத துக்கம் அதிர்ச்சி, அன்றிலிருந்து என்னைப் பார்க்கவும் பிடிக்காத வெறுப்பு."

"இதை அறியாமை என்று தான் சொல்லவேண்டும்."

"இந்த குழந்தையைத் தூக்கிக் குப்பைத்தொட்டியில் போடுங்கள். இவன் குழந்தையல்ல. என் குங்குமத்தைக் குலைக்க வந்த யமன்- அப்படின்னு ஜன்னி கண்டு கத்திக் கூச்சலிட ஆரம்பித்துவிட்டாங்களாம். அம்மா எனக்குப் பால் கொடுக்கக்கூட மறுத்துட்டாங்களாம். சுற்றத்தார் எல்லாரும் சேர்ந்து, இவன் பிள்ளையல்ல, எல்லோரையும் துடைத்துவிடப் பிறந்த துடைகாலன்" என்று பழிக்கத் தொடங்கினாராம். அம்மாவின் உடல் நிலையை எண்ணி எண்ணி என் தாய்



வழிப் பாட்டனும், பாட்டியும் என்னைத் தம்முடன் வளர்த்து ஆளாக்க எடுத்துச் சென்று விட்டனர். வெகு காலம் நான் பாட்டி தாத்தா இருவரின் பராமரிப்பில் வளர்ந்து படித்துக் கொண்டிருந்தேன். விடுமுறை சமயம் தேனாம்பேட்டை வீட்டுக்கு வருவது உண்டு. ஆனால், அம்மா பாம்பைக் கண்டுவிட்டது போல் என் அருகே நெருங்கவும் மாட்டாங்க. பயந்து நடுங்குவாங்க."

"அட பாவமே!" அனுதாபப்பட்டாள் சுமித்திரா.

"அண்ணாவுக்குத் தான் தொழில் கல்விக்குப் படித்திருக்கிறோம் என்கிற கர்வம். என்னை ஒரு பொருட்டாகவே அப்போதெல்லாம் மதித்தது இல்லை. இப்போது மட்டும் என்ன? குடும்பத் தலைவன் என்ற பெருமை, என்னைத் தூசியாகப் பாவிக்கிறார். சிறு வயதில் இருந்தே ஒன்றாக வளராத குறை. அண்ணாவிடம் எனக்கும் பாசம் இருந்தது இல்லை. பெரியவர் என்ற அளவில் மரியாதை உண்டு. அவ்வளவுதான்."

"பிறகு?"

"பாட்டி, தாத்தா இருவரும் ஒருவர் பின் ஒருவராக இறந்து போயினர். நான் எங்கள் வீட்டுக்கு வந்து வசிக்க நேரிட்டது. அந்தச் சில ஆண்டுகளில் நான் அம்மாவுக்கு வேண்டாத பிள்ளையாக வளர்ந்தேன். அந்தக் கொடுமையை விரிவாகக் கேட்காதே, என் மனம் வெடிக்கிறது."

"எனக்கு நீங்கள் ரொம்ப வேண்டியவர். என் வாழ்க்கையின் எல்லாமே நீங்கள்தான் என்று பெருமையோடு இருக்கேன். இதைத் தெரிந்த கொண்டு கூடவா, அந்தத் துயரம் உங்களை இன்னும் பாதிக்கிறது?"

"இளமைப் பருவத்துப் பாதிப்புகள் மனத்தில் ஆழமான வடுக்களை உண்டு பண்ணி விடுகின்றன. அதனால் அவற்றை மறந்து ஒதுக்கிட முடியவில்லை."

"முயன்றால் நாளடைவில் மறந்துவிடுவீங்க. ஒரு குழந்தைக்கு அப்பாவான பின்னும், குழந்தையாகவே இருப்பேன் பழையதை நினைத்துப் புலம்புவேன்னா சரிப்பட்டு வருமா?

"அண்ணாவுக்குக் கல்யாணமானதும் வீட்டின் அதிகாரம் அண்ணி வித்யாவின் கையில் ஏறியது. இப்போது அந்த வீட்டில் தன் வெறுப்பை வெளிப்படையாகக் காட்டும் அம்மா அண்ணாவுடன், அண்ணியும் சேர்ந்து கொண்டு விடவே, வாழ்க்கை எனக்குப் பெரும் சித்திரவதையாகி விட்டது. தேனாம்பேட்டைத் தோட்டத்திலே ஒரு பெரிய சப்போட்டா மரத்தைப் பார்த்தியே, அதன் நிழலிலே உட்கார்ந்து கொண்டு நான் என்னைப் பற்றியே நினைத்து வேதனையில் குமைந்த நாட்கள் எத்தனை எத்தனையோ?"

"குழந்தையின் அதிர்ஷ்டம் பெற்றவங்களைப் பாதிக்கும்னு சொல்வதை நம்புகிறீங்களா? ஒரு சமயம் பெங்களூரில் நாம் இருவரும் வேடிக்கையாக நமது கைகளைக் காட்டிக் குறி பார்த்துக் கொண்டோமே, நினைவிருக்கா?" அவள் சிரித்ததும், நிரஞ்சனும் கூடவே சிரித்து விட்டான்.

"ஆமாம். அந்த குறி பார்க்கிறவன் ஐந்து ரூபாய் தட்சணைக்கு கன்னடத்திலே உங்ககிட்ட அரைமணிக்கு மேல் கதை அளந்தானே? நீ பெரிய உத்யோகத்துலே இருக்கப் போகிறேன்னு கூடச் சொன்னான். இங்கே எனக்குச் சமைத்து போட்டுக் கொண்டு வீட்டையும் குழந்தையையும் பார்த்துக் கொண்டிருக்கே. அதுதான் உனக்குக் கிடைத்த அதிர்ஷ்டம்." நிரஞ்சன் உரக்கச் சிரித்தான்.

"எங்களூர்க் குறிகாரர் சொன்னது உண்மை. நான் குடும்பத் தலைவின்னு ஒரு பெரிய பதவியில் இருக்கிறேன் அதை எண்ணிப் பாருங்கள்? உங்களுக்குச் சமைத்துப் போட்டு, உங்கள் குழந்தைக்குத் தாயாக இருந்து குடும்பத்தைக் கவனிப்பதைவிட பெரிய உத்தியோகம் எனக்கு என்ன கிடைக்க விடும்? சொல்லுங்க" அன்புடன் அவனுடைய தலைமுடியை விரல்களால் அளைந்தாள்.



நிரஞ்சன் நெஞ்சு நெகிழ்ந்து போனான். சுமி! நீ ரொம்பவும் என்னை நேசிக்கிறே? என் குறை ஒன்னுமே உன் கண்களில் படுவதேயில்லை."

"பழைய புராணத்தை எடுத்து வைத்துக்கொண்டு நீங்கள் வருத்தப்படறதுதான் ஒரு பெரிய குறையாக எனக்குப் படறது. அதை விட்டுட்டீங்கன்னா என் கணவர் போல இந்த உலகத்திலே ஒரு மகிழ்ச்சியான மனிதனைத் தேடித் தேடி அலைந்தாலும் கிடைக்க மாட்டார்னு நான் தம்பட்டம் கொட்டுவேன்."

சிரித்துக்கொண்டே எழுந்து வந்து அவன் அருகே தோளில் சாய்ந்தபடி உட்கார்ந்து கொண்டாள். சுமித்திரா. எப்படியாவது அவனை அந்தத் தீராத துயரத்திலிருந்து கரையேற்றிவிட வேண்டும் என்ற ஆதங்கம் அவளுக்கு.

## 16

அதற்குப் பிறகு அவர்கள் இருவருக்கும் கடந்து போன சம்பவங்களைப் பேசிக் காலங்கழிக்க பொழுதே இருக்கவில்லை. அவர்கள் வாங்கியிருந்த நிலத்தில் விரைவாக வீட்டைக் கட்டத் தொடங்கியிருந்தார். காண்டிராக்டர் காலையில் வேலைக்குப் போகுமுன்னும், மாலையில் திரும்பிய பிறகும் கட்டடத்தின் வளர்ச்சியைப் பார்வையிடத்தான் நிரஞ்சனுக்கு நேரம் சரியாக இருந்தது. குழந்தை, கணவன், வசிக்கும் வீடு மூன்றையும் கவனிப்பதுடன் வேகமாக உருவாகிக் கொண்டு இருந்த சொந்த வீட்டுக்குள் பொருத்த வேண்டிய கண்ணாடிகள் கதவு கைப்பிடிகள் என்று அழகு பார்த்துப் பொருள்களை வாங்குவதில் சுமித்திரா மும்முரமாக இருந்தாள்.

அந்த ஆண்டின் இறுதியிலேயே வீடு கட்டி முடிவு அடைந்து விட்டது. ஒரு நல்ல நாளில் அவர்கள் புதுமனை புகுவிழாவைக் கொண்டாடினார்கள்.

இதுவரை தாங்கள் குடியிருந்த வீட்டின் சொந்தக்காரரையும் அவர் மனைவியையும், இன்னும் தெருவில் இருந்த அக்கம் பக்கத்து மனிதர்கள் சிலரையும் விழாவுக்கு அழைத்திருந்தனர். அவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியுடன் வந்து கலந்து கொண்டார்கள். வழக்கம் போல் நிரஞ்சன் தன் தாயாருக்கும், அண்ணனுக்கும் தனித்தனியே அழைப்பு இதழ்களை அனுப்பியிருந்தான். அவர்கள் யாரும் வரவில்லை.

"மூன்று படுக்கை அறைகளா? பரவாயில்லை. எங்கள் வீட்டில் இரண்டுதான் வச்சுக் கட்டினோம்."

"உள்ளடங்கிய குளியலறைகூட இருக்கா? பேஷ்! பேஷ்!"

"வீடு நல்லா பெரிசாத்தான் அமைஞ்சுடுச்சு!"

"லட்ச ரூபாய்க்கு மேலே ஓடியிருக்குமே, இப்போ இருக்கிற விலைவாசியில். கம்பெனியிலே கடன் வாங்கிச் சமாளிச்சு கட்டிங்க."

விழாவுக்கு வந்தவர்கள் வீட்டைப் பார்த்துப் பிரமித்தனர், பாராட்டினர், புகழ்ந்தனர். நிரஞ்சனுக்கும் சுமித்திராவுக்கும் கட்டுக் கொள்ள முடியாத மகிழ்ச்சி.

விருந்து சாப்பிட்ட பிறகு ஆண்கள் வாயிற்புறத்தில் இருந்த பெரிய வராந்தாவில் பிரம்பு நாற்காலிகளில் அமர்ந்துகொண்டு தேர்தல் முடிவுகளை அலசிக்கொண்டு இருந்தனர்.

உள்ளே சாப்பாட்டு அறையில் கூடியிருந்த பெண்கள் இடையே ஒரே பேச்சு, சிரிப்பு, கூச்சல். அதன் இடையே பொறுமையாக, அமைதியாக உணவு வகைகளைப் புன்முறுவலுடன் இலைகளில் நிதானமாகப் பரிமாறி உபசரித்துக் கொண்டிருந்தாள், சுமித்திரா.

எதிர்வீட்டு ஏகாம்பரத்தின் மனைவி பார்வதியும் கோடி வீட்டு துரைசாமியின் அக்கா தருமியும் மிகவும் உரத்த குரலில் ஊர்வம்பு அளந்து கொண்டிருந்தனர், பரிமாறிக் கொண்டிருந்த சுமித்திரா ஒரு கணம் துணுக்குற்று நிமிர்ந்து நின்றாள்.



"தேனாம்பேட்டைச் சந்திரமூர்த்தி தெருவிலே இருக்கிற அந்த மாடி வீட்டு விஷயம் என்னாச்சு? உன் அக்கா மகன் வாங்கப் போவதாகச் சொன்னியே?"

"அநேகமாக வாங்கினால் போல்தான். அமெரிக்காவில் இருந்து என் அக்கா மகன் இங்கே ஒரு வீடு வாங்கிப் போட்டுட்டுப் போகத்தானே வந்திருக்கிறான். எத்தனையோ பார்த்துவிட்டான். ஆனால், இதுதான் அவனுக்குப் பிடிச்சிருக்கு."

"ரொம்பப் பழைய வீடாச்சே? அதைப் போயா வாங்கப் போறான்?"

"வீட்டுக்கா பணம்? இடத்துக்காக வாங்கப் போறான்" அதிலே குடியிருக்கிற மோட்டார் ரிப்பேர்க்காரனைக் கிளப்பிட்டு, அதை இடிச்சுத் தள்ளிப் பெரிய ஃப்ளாட்டு கட்டுவதாகத் திட்டம்.

"இப்பவே சொல்லிட்டேன். அந்த ஃப்ளாட்டுகளை வாடகைக்கு விடறதா இருந்தால், எனக்கு ஒண்ணு கொடுக்கணும். மனசிலே வச்சிக்கோ. பிறகு மறந்துட்டேன்னு சொல்லாதே."

"இப்பத்தான் பேச்சு வார்த்தையே நடக்கிறது. அதுக்குள்ளே நீ அவசரப்படுறியே? அந்த வீட்டுச் சொந்தக்காரியான கிழவி ரொம்பப் பேராசைப் பிடிச்சவளா இருக்கா, இரண்டு இலட்சத்துக்கு மேலே கேட்கிறா. அவளைவிட அவள் மருமகள் மகா ஆத்திரக்காரியா இருக்காளாம். அவள்தான் மாமியாரை உசுப்பி விடுகிறாளாம். என் அக்கா மகனும் பிடிவாதக்காரன் என்ன விலை கேட்டாலும் அதை வாங்கிடறதுன்னு தீர்மானிச்சுட்டான்" சிரித்துக்கொண்டே பேசினாள் பார்வதி.

குழம்புப் பாத்திரத்தைச் சமையல் அறை மேடை மீது கொண்டு வைத்துவிட்டு ஒரு கணம் அயர்ந்து போய் நின்றாள் சுமித்திரா. அவர்கள் குறிப்பிட்டுப் பேசிய வீடு, அவளுடைய மாமியாருடையது. அதை ஏன் அத்தை விற்கப் போகிறாங்க? ஏன்? எதற்காக? ஒரு சமயம் வயசுக் காலத்தில் பழுதடைந்து கிடக்கும் பங்களாவைக் கட்டிக் காத்துவர முடியாததினாலா?

நல்ல விலை கிடைக்கிறது என்பதாலா? அல்லது மைத்துனன் சுரேந்திரனுக்கு அவசரமாக அதிகப்படி பணம் தேவைப் படுகிறதா? அதுக்காக விற்கிறாங்களா?

அவளுக்குக் கவலையாகத்தான் இருந்தது. ஆனாலும் வெளியே காட்டிக்கொள்ளவில்லை. தான் பேச்சுவாக்கில் கேள்விப்பட்டதைக் கணவனிடம் சொல்லி அவனைத் துயரத்திலும் குழப்பத்திலும் ஆழ்த்த விரும்பவில்லை. மௌன மாக இருந்து விட்டாள்.

புதுமனை புகுந்து வாழ்க்கை மெல்ல நகர்ந்து கொண் டிருந்தது. ஒரு நாள் மாலை நிரஞ்சன் மிகவும் கவலையும் துயரமுமாக வீட்டுக்குள் நுழைந்தான்.

"சுமி! அம்மா அந்த வீட்டை வித்துவிட்டாங்க தெரியுமா? ஒரு வார்த்தை எனக்குத் தெரிவிக்கலே. வித்த பணத்திலே ஒரு பங்கு கேட்டு நான் வாதாடிக்கொண்டு அவங்க முன்னால் போய் நிக்கப் போறதில்லை. அந்தப் பணத்தை அவங்க பத்திரமாக வைத்துக்கொண்டு வாழ்ந்தால் போதும், எனக்கும் பயமா இருக்கு." பெருமூச்சு செறிந்தான்.

"வீடு அவங்களுடையது. விற்பது அவங்க விருப்பம் சின்னப்பிள்ளையா அவங்க? தன் பணத்தை எப்படிப் பிடிக்க வச்சுக்கணும்னு அவங்களுக்குத் தெரியும். வீணா நீங்கள் ஏன் மனசை அலட்டிக்கிறீங்க?" அன்புடன் கடிந்த படி காபியைக் கலந்து கொண்டு வந்து அருகில் வைத்தாள்.

ஆனாலும், அவளுக்குச் சிறிது அச்சமாகத்தான் இருந்தது. வித்யாவும் சுரேந்திரனும் ஏதோ சூழ்ச்சி செய்துதான் அந்த வீட்டை விற்கும்படி கமலம்மாளை நிர்ப்பந்தித்து இரு க்கிறார்கள் என்பதுவரை அவளால் ஊகிக்க முடிந்தது.

சில நாளைக்குப் பின்னர் ஒரு நாள் மாலை காது வலியுடன் அழுத குழந்தை சங்கரை அழைத்துக்கொண்டு அவள் டாக்டர் ரேவதியிடம் போயிருந்தாள்.

குழந்தையைக் கவனித்து மருந்துச் சீட்டு எழுதிக் கொடுத்து விட்டு ரேவதி அவளைப் பார்த்து மெல்லச் சிரித்தாள்.



"அவசரமா! உட்கார் உன்கிட்ட ஒரு சங்கதி சொல்லணும். உன் மாமியார் கமலம்மா முந்தா நேத்து இங்கே வந்திருந்தாங்க.

திடுக்கிட்டுப் போனாள் சுமித்திரா. "ஐயோ? அவங்களுக்கு உடம்புக்கு மறுபடியும் ஏதாச்சும் வந்திட்டதா?" கேட்டுக் கொண்டே எதிரே கிடந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

"ஒன்னுமில்லை. அந்த அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு ஆறுமாசத்துக்கு ஒரு தடவையாவது வந்து உடம்பைப் பரி சோதனை செய்துகொண்டு போகணும்னு சொல்லியிருந்தேன். அதுக்காகத்தான் வந்தாங்க. இப்ப அவங்களுக்கு உடம்புக்கு ஏதும் கோளாறு இல்லை. அந்த அம்மாவே என்கிட்ட பேசணும்னு துடிச்சாங்க. சொன்னதை உங்கிட்ட சொல்றேன்."

"என்ன சொன்னாங்க டாக்டர்?" பதறினாள் சுமித்திரா.

"அவங்க கணவரின் தாத்தா காலத்திலிருந்து பரம்பரையாக வந்த சொத்தாம் அந்தப் பழைய வீடு. தேனாம்பேட்டையில் இருந்ததாம். மாதாமாதம் வந்த வாடகையிலே அவங்க நல்ல தெம்பா தனக்கு வேண்டியதை வாங்கிச் செலவழிக்கக் முடிஞ்சதாம். அறுவைச் சிகிச்சைக்கு ஆன செலவு எல்லாத்தை யும் வாடகைப் பணத்தைச் சேர்த்துவச்சுத்தான் சமாளிச்சாங் களாம். அவங்களைக் காப்பாத்திக் கொண்டிருந்த அந்த வீட்டை விற்கச் சொல்லி மகன் வற்புறுத்திச் சில நாளாகப் பாடாய்ப்படுத்திவிட்டானாம். பொறுக்க முடியாமல் போன வாரம் அதை வித்துட்டாங்களாம். சொல்லிவிட்டு அந்தம்மா 'ஓ'ன்னு அழுதுட்டாங்க, எனக்கு ரொம்ப வேதனையா இருந்தது."

நெஞ்சை அடைத்த துக்கத்தை சுமித்திரா விழுங்கிக் கொண் டாள். "என் மைத்துனர் காலமுச்சூடும் அத்தையை வைத்துக் காப்பாத்துகிறார், இல்லையா? அதனால் அவங்களை வற்புறுத்த உரிமை இருக்குன்னு நினைக்கிறேன்.?"

"உன் அத்தை கையில் பணம் கணிசமா இருக்கு. அதனால் காப்பாத்துறாங்க. ஒன்னும் இல்லாமல் வெறுங்கையோட இருந்தால், அவங்க ரெண்டு பேரும் வயசுக் காலத்திலே

அந்தக் கிழவியை வாசலில் துரத்திடுவாங்க. எனக்கு உன்னை விட இந்த உலகத்தைப் பத்தி ரொம்பத் தெரியும். பணத்துக்கு முன்னாடி பாசத்துக்கு மதிப்பு இல்லாமல் போயிடுத்து" என்று விரக்தியாக ரேவதி பேசினாள்.

"அந்தப் பணத்தை வட்டிக்கு விட்டாலும் அத்தைக்குக் காலம் முழுவதும் உதவியாக இருக்குமே, ஏன் கவலைப் படணும்?

"அந்தப் பணத்தை உன் மைத்துனர், தாம் தொடங்கப் போகும் வியாபாரத்துக்கு உபயோகிக்கப் போகிறாராம். அவர் இப்போ வேலையை விட்டு விட்டாராம்."

மீண்டும் சுமித்திரா திடுக்கிட்டுப் போனாள். நல்ல வேலையை உதறிவிட்டு, ஏன் இப்படி ஒரு வம்பை விலைக்கு வாங்கிக் கொள்கிறார்? ஆனால், அதிர்ச்சியை வெளிக் காட்டாமல் பேசினாள்.

"சொந்த வியாபாரம் தொடங்கி விரைவில் முன்னுக்கு வர ஆசைப்படுகிறார். அம்மாவிடம் கடன் கேட்காமல் பிறகு யாரிடம் கேட்பார்?"

"உன் மைத்துனருக்கு நீ வக்காலத்து வாங்கிப் பேசுவதை நான் பாராட்டுகிறேன், ஆனால், சுரேந்திரன் அந்தப் பணத்தை வியாபாரத்தில் போடலே."

"என்ன சொல்றீங்க டாக்டர்?"

"ஒரு பெண் மேலேயும், குதிரை மேலேயும் பணத்தை அவர் போடுகிறார். எப்பவாவது நாலும் வேடிக்கை பார்க்கக் குதிரைப் பந்தயத்துக்குப் போவது உண்டு. போனவாரம் நடந்த ஹாண்டிகாப் பந்தயத்தில் உன் மைத்துனரை ஓர் அழகான இளம் பெண்ணோடு பார்த்தேன். அவளை அணைத்துக் கொண்டு நின்றபடி பைனாகுலரில் பார்த்துத் தொண்டை கிழிய, சில்வர் ஸ்டார் கமான்... கமான்னு கத்திக் கொண்டிருந்தார். பந்தயம் முடிஞ்சதும் அவர்கள் காரில் ஏறிக்கொண்ட போது பார்த்தேன். உன் மைத்துனர் முகத்திலே பேய்க்களை. ரொம்பப் பணத்தைச் சில்வர் ஸ்டார் மேலே போட்டிருக்க



வேண்டும். அது காலை வாரி விட்டிருத்து" மெல்லச் சிரித்தாள் ரேவதி.

"அவங்க வீட்டுக்கு மூத்தவர். அவருக்குப் புத்தி சொல்லித் திருத்த நாம் யார்? கேட்க மிகவும் கஷ்டமாயிருக்கு." மனக்கசப்புடன் சொல்லிவிட்டு சுமித்திரா வெளியேறினாள்.

"என்ன அநியாயம்! சுரேந்திரன் ஏன் இப்படி மாறிவிட்டார்? அண்ணி வித்யாவுக்குத் தெரியாதா? தெரிஞ்சும் தடுத்து நிறுத்த முடியாதபடி கோழையாகி விட்டார்களா? அவரை ஒழுங்கான பாதைக்குக் கொண்டு வர என்ன செய்ய வேண்டும்?"

சிந்தித்தபடியே நடந்தாள், சுமித்திரா.

## 17

"வீட்டைக் கட்டிப் பார்..." என்ற நிரஞ்சனுக்கு அந்த ஆண்டிலே செலவு பெருகிவிட்டிருந்தது. அலுவலகத்திலே வாங்கியிருந்த கடனை மாதம் தவறாமல் அடைக்கவும் வீட்டுச் செலவுகளைச் சமாளிக்கவுமே அவனுடைய வருவாய் சரியாய் இருந்தது. சினிமா, நாடகம் போன்ற பொழுது போக்குகளைச் சுமித்திரா குறைத்துக் கொண்டாள். கணவனின் வருவாய்-செலவு இனங்கள் இரண்டிலும் பூரண அக்கறை காட்டி ஒத்துழைத்தாள். வாழ்வின் ஒவ்வொர் அசைவிலும் அவள் தன் கணவனுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு அவற்றுக்கு மதிப்புக் கொடுத்து அவனை அனுசரித்து நடக்கத் தெரிந்து கொண்டிருந்தாள்.

நிரஞ்சனுக்கு மிகவும் பெருமையாகத்தான் இருந்தது. சுமித்திரா பார்க்க மட்டும் அழகான பெண் அல்ல. பண்பிலும் அன்பிலும் நிறைந்தவளாக இருந்தாள்.

குழந்தை சங்கரனின் இரண்டாவது பிறந்தநாள் நெருங்கிக் கொண்டிருந்தது. விமரிசையாக அதைக் கொண்டாட முடியா விட்டாலும் குழந்தைக்குப், புதிய உடை அணிவித்து அழகு

பார்க்க சுமித்திரா ஆசைப் பட்டாள். இன்று மட்டும் சிறிதளவு பாயசம் வைத்துத் தன் அருமை மகனின் பிறந்த நாளை இனிப்பாகக் கொண்டாடி விடுவது என்பது அவள் திட்டம்.

கணவன் அலுவலகத்துக்குக் கிளம்பிச் சென்ற பிறகு குழந்தைக்கு உடைகள் வாங்க அவள் கடைத் தெருவுக்குப் புறப்பட்டாள். அண்ணாசாலையில் பஸ் நிலையத்தில் இறங்கிக் கொஞ்ச தூரம் நடந்து அருகேயிருந்த ஒரு பெரிய கடைக்குள் அவள் நுழைய முற்பட்டபோது அவர்களைப் பார்த்து விட்டாள்.

அவள் மைத்துனர் சுரேந்திரன் அந்த இளம் பெண்ணுடன் கடைக்குள் சேலைகள் விற்கும் பகுதியில் நின்று கொண்டிருந்தான்.

அவள் மனம் பதைபதைத்தது.

விற்பனையாளர் சேலைகளை எடுத்து பிரித்து மேசை மீது குவித்துக் கொண்டிருந்தார், சுரேந்திரனைப் பார்த்து லேசாக முறுவலித்தபடி அந்த மோகினி பட்டுச் சேலைகளைப் பரிவுடன் தடவிக்கொண்டிருந்தாள்.

டாக்டர் ரேவதி சொன்னது முற்றும் உண்மைதான். அவளுடைய மைத்துனர், வீட்டை விற்ற பணத்தைத் தமது வியாபாரத்தில் போடாமல் இப்படி விரயம் பண்ணுகிறாரே?

குழந்தைக்கு வேண்டிய உடைகளை ஆராய்ந்த வண்ணம் அருகிலே சற்றுத் தொலைவில் நின்ற சுமித்திராவின் காதுகளில் விற்பனையாளர் சொன்னது நன்றாகக் கேட்டது.

"நாலு சேலைதான் எடுத்திருக்கிறீங்க? இன்னும் ரெண்டு எடுத்து வையுங்கள், அரைடசன் ஆகும். அப்பத்தான் நாளைக்கு ஒண்ணா உடுத்திக்கச் சுலபமாயிருக்கும்" என்று விற்பனையாளர் உற்சாகப்படுத்தினார்.

அவள் சுரேந்திரனின் முகத்தை ஆவலுடன் பார்த்து லேசாக முறுவலித்தாள். "ஐயா, என்ன வேணாம்னா சொல்லப் போறார்! நீங்கள் ஏன் தயங்குறீங்க? பணம் கொடுக்கப் போகிறது அவர்; பொறுக்கி எடுக்கப்போறது நீங்கள். இந்த ஜதா



பனாரிசை விட்டுடாதீங்க. விலை ரொம்ப இல்லை. ஆயிரத்து முந்நூறுதான்."

"ஆசையா இருந்தால் இதையும் எடுத்துக்கோ" என்று சுரேந்திரன் அடிக்குரலில் சொன்னது கேட்டது.

உப்பலாக இருந்த மணிப்பர்சை எடுத்து அவன் நோட்டுக்களை எண்ணுவதைக் கடைக்கண்ணால் சுமித்திரா பார்த்தாள். அவள் மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது. பாடுபட்டு அவர்கள் முன்னோர் தேடி வைத்த பணம் எப்படிப் பாழாய்ப் போகிறது?

"வேண்டியதை எடுத்துக்கங்க. பணம் பத்தாவிட்டா உங்கள் வீட்டு ஐயா செக் எழுதிக் கொடுக்கப் போறார். ஏன் யோசிக்கிறீங்கள்?" என்று விற்பனையாளர் தூண்டி விட்டார்.

கொஞ்ச நேரத்தில் பணம் கை மாறியது. சுமக்க மாட்டாமல் அடுக்கிக் கட்டிக் கொடுத்த சேலை மூட்டையை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு அவள் மெல்லிய குரலில் பேசி, சங்கீதச் சிரிப்புச் சிரித்தபடி சுரேந்திரன் மேல் இடித்துக்கொண்டு மெல்ல கடையை விட்டு இறங்கினாள். சற்றுத் தொலைவில் நிறுத்தியிருந்த காரில் இருவரும் ஏறிக்கொண்டனர். கார் நகர்ந்து சென்றதும் கடை விற்பனையாளர் ஓங்கிய குரலில் சிரித்தார்.

"என்ன வேலுமணி, அவன், அவன் மனைவியின்னு நினைச்சு தடபுடலா உபசாரம் பண்ணி எட்டாயிரம் ரூபாய் சரக்கைத் தலையில் கட்டிட்டே! பலே ஆள் நீ" என்று அடிக்குரலில் கேலியாகச் சொல்லி நகைத்தார் இன்னொரு விற்பனையாளர்.

"கடைக்குள் ஜோடிகள் நுழைஞ்சதுமே எனக்குத் தெரியும். இவள் இவன் மனைவி இல்லை. இவள் இவனுடன் இடையில் வந்து ஒட்டிக் கொண்டவள், அப்படின்னு டக்குனு கண்டுபிடிச்சுட்டேன். உள்ளே வந்ததுமே இவள் இவனுடைய மனைவி இல்லேன்னு புரிஞ்சுகிட்டேன். மனைவியோ காதலியோ யாராயிருந்தால் நமக்கு என்ன? நமக்கு ஆகவேண்டியது விற்பனை! ஹி ஹி" சிரித்தார்.

ரவிக்கைத்துணி விற்பனை பகுதியில் இருந்த மூன்றாவது மனிதர் மெல்ல நகர்ந்து அவர்கள் பக்கம் வந்தார்.

"வேலுமணி நானும் பார்த்திட்டுத்தான் இருந்தேன். இந்த ஜாலக்காரி வலையிலே யாரோ இப்ப புதுசா ஒருத்தன் விழுந்திருந்தான். உனக்கு அவனைத் தெரியுமா?

"யோகானந்த் அண்ட் பார்ட்னர் கம்பெனியிலே அஞ்சு வருஷமா ஸ்டெனோவா இருக்கா. என் தம்பியை அங்கே பார்க்கப் போகிறப்போ இவளைப் பார்த்தேன். யாரடா இந்த மோகினின்னு கேட்டேன். அவள் மோகினி மட்டுமல்ல பிசாசு. ஆளைப் பிடிச்சா ரத்தத்தை உறிஞ்சுடுவா. காட்டேரி. பம்பாய்காரி, சித்ரான்னுபேர் ஏற்கெனவே மானேஜர் இவள் பிடியில் விழுந்து மொட்டையாகி விட்டார் என்பான். தம்பி, இப்போ பார்த்தா யாரோ வேற ஒரு பெரிய மனுஷன் மாட்டிக் கொண்டிருக்கான். பாவம் அவன். யார் பெத்த புள்ளையோ?" மூவரும் குலுங்கக் குலுங்க நகைத்தனர்.

சுமித்திராவின் காதுகள் இரண்டும் கடகடவென்று எரிந்தன. அவள் மைத்துனர் அந்தப் பெண் சித்ராவுடன் கொண்டுள்ள உறவு வித்யாவுக்கு இன்னமும் தெரியாமல் இருக்கிறதே? அதிசயந்தான் தெரிந்திருந்தால் படு கோபக்காரியான அவள் சும்மாவா இருப்பாள்? ரகளை செய்திருப்பாளே? அண்ணா சாலை வரை எட்டிவிட்ட கதை, அவள் காதுகளில் விழ எத்தனை காலம் பிடிக்கும்? ஆனால், அதற்குள் அந்த மோசக் காரி சுரேந்திரனின் சொத்து முழுவதையும் ஏப்பம் விட்டு விட்டால்? வேண்டியதை வாங்கிக்கொண்டு வேதனையுடன் கிளம்பினாள் சுமித்திரா.

கணவனிடம் அவள் வாயைத் திறக்கவேயில்லை. ஆனால், மனம் அலைபாய்ந்து கொண்டிருந்தது. சுரேந்திரன் குடும்பத்துக்கு ஏற்படும் கஷ்டமும் நஷ்டமும் அவர்களுக்கு ஏற்பட்டது போலத்தானே? நீரை அடித்தால் நீர் விலகுமா? அப்படித்தான் தம்பி உறவின் பிணைப்பு.



சங்கரின் பிறந்த நாள் அன்று காலை, கணவன் அலுவலகம் சென்றதும், வீட்டைப் பூட்டிக்கொண்டு குழந்தையுடன் அவள் கோவிலுக்குப் புறப்பட்டாள்.

அன்று கோவிலில் கூட்டம் அதிகம் இல்லை. விரைவாகக் குழந்தைக்காக ஓர் அர்ச்சனை செய்து முடித்துக்கொண்டு பிரசாதத்துடன் அவள் பிரகாரத்துக்கு வந்த போது நேருக்கு நேர் வித்யாவைச் சந்திக்க நேர்ந்தது விட்டது.

அவளால் கட்டுக் கொள்ளவில்லை. "அக்கா! உங்கள் கிட்ட ஒருவார்த்தை பேசணும். இப்படி ஓரமா வர்றீங்களா?" என்று நெஞ்சு படபடக்கப் பேசிவிட்டாள்.

விருக்கென்று திரும்பிய வித்யாவின் கண்களில் நெருப்பு எரிந்தது. "என்னோட பேசணுமா? என்ன பேசணும்?" என்று கோபத்துடன் உறுமினாள்.

"உங்களைப் பத்தின முக்கியமான செய்தி. உங்கள் நன்மைக் காகவேதான் சொல்றேன்" என்று சுமித்திராவின் மெல்லிய குரல் உணர்ச்சி வேகத்தில் உடைந்தது.

வித்யாவுக்குக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல். அதே நேரம் ஓரகத்திக்குச் சமதையாக நின்று பேசுவதா என்ற ஆணவம்.

"என்ன சொல்றே? சீக்கிரம் சொல்லித் தொலை" என்று அசட்டையாக மதில் சுவர் ஓரமாக வந்து நின்றாள்.

"உங்கள் கணவரை நான் அண்ணாசாலையிலே மூணு நாளைக்கு முந்தித் துணிக்கடையிலே பார்த்தேன்."

"உலக மகா அதிசயத்தைப் பார்த்தது போலச் சொல்ல வந்துட்டியே?"

"அவசரப்படாதீங்க, அவர் மட்டும் தனியாகக் கடைக்கு வரலே. கூட ஓர் இளம் பெண் வந்திருந்தாள். யோகானந்த் கம்பெனியில் வேலைபார்க்கிற ஸ்டேனோ. அவள் பெயர் சித்ரா. எட்டாயிரம் ரூபாய்க்குச் சேலைகள் வாங்கினாள். அவர் பணம் கொடுத்ததைப் பார்த்தேன்."

"என்ன இதெல்லாம் புதுக் கதை. என் புருஷன் மேலே இல்லாத பழியைச் சுமத்தறே?" சீறினாள் வித்யா. அதே சமயம் அவள் கண்கள் கலங்கின, அக்கம் பக்கத்திலே யாரும் கேட்டுவிடக் கூடாதே என்ற பரபரப்புடன் சுற்றிலும் பார்த்தாள்.

"சில மாசத்துக்கு முந்தி ஒரு சினிமா பார்க்கப் போயிருந்தேன். அங்கே உங்கள் கணவர் சித்ராவுடன் படம் பார்க்க வந்திருந்தார் அப்பவே என் மனசு கஷ்டப் பட்டது. குதிரைப் பந்தய மைதானத்தில் கூட ரெண்டு பேரையும் பார்த்தவங்க என்கிட்டே வந்து சொல்லியிருக்காங்க."

"என் கணவனை எனக்குத் தெரியும். நீ வந்து வீண் கதை கட்டி என் குடும்பத்திலே குழப்பம் செய்யத் தேவையில்லை. இதெல்லாம் அந்த அயோக்கியன் நிரஞ்சன் வேலை. இப்படிச் சொல்லச் சொல்லி ஏவிவிட்டு இருக்கிறான். நீ வந்து கதைக்கிறே!"

சுமித்திராவுக்குக் கோபமும் துக்கமும் பொங்கிக் கொண்டு வந்தன. "அவர் ஒரு பாவமும் அறியாதவர். வீணா அவரைத் திட்டாதீங்க."

"ஆமாம்! உன் கணவனுக்கு உடனே சப்பைக் கட்டு கட்டுறியே? என் புருஷனைக் கண்டபடி பேசினால் நான் கேட்டுக்கிட்டு நிற்பேனா? உனக்கு அறிவு இருக்கா? இன்னொரு வார்த்தை அவரைப் பத்தித் தப்பா சொன்னே நான் படு பொல்லாதவளாகிடுவேன். ஜாக்கிரதை, கோயில்னு கூடப் பார்க்க மாட்டேன். சனியன், பூஜை வேளைக் கரடி போல" என்று படபட வென்று பொரிந்தாள் வித்யா.

"அக்கா!" திகைப்புடன் கண்கலங்கித் தழுதழுத்தாள் சுமித்திரா.

"சீ போடி பொய்க்காரி! எனக்கு நல்லது சொல்றது போல் கதை கட்டிக்கொண்டு மெள்ள எங்கள் வீட்டுக்குள்ளே நுழைந்துக்கப் பார்க்கிறே. அது நடக்காது."

"உங்கள் வீடு சிதைஞ்சு போகக் கூடாதுன்னு நல்ல எண்ணத்தோடு எச்சரிக்கிறேன், அக்கா"



"அக்கான்னு என்னை நீ உறவு கொண்டாடத் தேவையில்லை. ஆடு நனையுதேன்னு ஓநாய் அழுததாம். இந்தத் தடவை தொலையுதுன்னு இதை இங்கேயே விட்டுடறேன். மறுபடி இது மாதிரி கதை எடுத்திட்டு வந்தியோ, நானும் அவரும் உங்களைப் பிடிக்கக் காட்டிலே கொண்டு விட்டுடுவோம் பத்திரம்" என்று சீறிவிட்டு மிகவும் மிடுக்காக அவளைத் தாண்டிக்கொண்டு உள்ளே சென்றுவிட்டாள் வித்யா.

நல்லது செய்யப் போய் இப்படியா? திகிலில் சுமித்திராவின் வாயும் நாக்கும் உலர்ந்து போயின.

## 18

அன்று ஞாயிற்றுக்கிழமை. அலுவலகத்துக்கு அவசரமாகக் கிளம்பி ஓடத் தேவை இருக்கவில்லை. நிரஞ்சன் நன்றாக விடிந்த பின்னர்தான் எழுந்திருந்தான். சூடான நீரில் வேண்டிய மட்டும் குளித்து விட்டுச் சுத்தமாக உடுத்திக்கொண்டு வராந்தாவில் கிடந்த நாற்காலி ஒன்றில் உட்கார்ந்து கொண்டான். காலைப் பத்திரிகைக்காக ஆவலுடன் தெருவைப் பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தான்.

உள்ளே சமையல் அறையில் சுமித்திரா காபி பலகாரம் தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள். இரவில் வெகு நேரம் தந்தையுடன் கொஞ்சி விளையாடிக் களைத்துப் போன சங்கர் இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தான்.

வராந்தாவில் இருந்து கேட் வரை பரவிக் கிடந்த பத்தடிப் பூமியிலே சுமித்திரா பூஞ்செடிகளை நட்டுப் பயிராக்கிப் பாதுகாத்து வளர்த்து வந்தாள். சுற்றுச்சுவர் அருகிலே அடர்த்தியாக வளர்ந்து சுவரிலே படர்ந்திருந்த நித்திய மல்லிகையிலே கொத்துக் கொத்தாக மலர்கள். காற்றோடு கலந்த அதன் இனிய மணம் முகத்திலே மோதிய போது நிரஞ்சனுக்கு ஆனந்தமாக இருந்தது.

சொந்த வீடு, அழகான மனைவி, ஆசை மகன்! எத்தனை கொடுத்து வைத்தவன்! சுமித்திரா அவன் வாழ்வில் எத்தனை நிறைவைக் கொடுத்து விட்டிருக்கிறாள்! தனக்குள்ளே எண்ணியபடி காற்றோடு கலந்த மலரின் மணத்தை மூச்சை இழுத்து அனுபவித்தபடி கண்களை மூடி நாற்காலியில் சாய்ந்து கொண்டான் நிரஞ்சன்.

படக்கென்று கேட்டின் இரும்புத் தாழ்ப்பாள் நீக்கப்பட்டுக் கம்பி மீது விழும் ஓசை.

திடுக்கிட்டு எழுந்தான்.

காலைப் பத்திரிகை போடும் பையன் தாமதமாக வருகிறானோ! எரிச்சலுடன் அவனைச் சாட எழுந்தவன், அயர்ந்து போய் அப்படியே நின்று விட்டான்.

கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே அந்தக் காலை வேளையில் அவனுடைய அருமை அண்ணன் சுரேந்திரன் வருகிறானே! ஆனந்தம் பிடிபடவில்லை அவனுக்கு.

"அண்ணா, வாங்க" உற்சாகத்துடன் கூவியபடி கைகளை நீட்டி வரவேற்கப் படிகளைத் தாண்டி முன்னால் ஓடினான்.

அண்ணன் சுரேந்திரன் முகத்திலே கடுமை தெரிந்தது.

"உன்னிடம் ஒரு முக்கிய விஷயம் பேசணும்னு வந்திருக்கேன்." குரலில் ஓரே கோபம்.

"உள்ளே வாங்க. உட்காருங்க. அம்மா, அண்ணி, குழந்தை எல்லோரும் சுகந்தானே?" பதற்றமாக விசாரித்தபடி நிரஞ்சன் முன்னறையில் இருந்த ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு உபசரித்தான்.

வேண்டா வெறுப்பாக சுரேந்திரன் உட்கார்ந்து கொண்டான்-
"எங்கே உன் மனைவி? அவளைக் கூப்பிடு" அதிகாரமாக அதட்டினான் தமையன்.

முன் அறையில் எழுந்த பேச்சுக் குரலைக் கேட்டு மெல்ல எட்டிப் பார்த்த சுமித்திராவுக்குப் பகீரென்றது.



நெஞ்சு பக் பக்கென்று திகிலுடன் துடிக்க அவசரமாகக் காபியைக் கலந்து தம்ளர்களில் நிறைத்து எடுத்துக்கொண்டு வந்தாள்.

"வாங்கோ! அத்தை, அக்கா எல்லாரும் சவுக்கியந்தானே! காபி சாப்பிடுங்கோ" அருகில் கிடந்த முக்காலி மீது வைத்தாள்.

"காபி பலகாரம் சாப்பிட்டு உறவு கொண்டாடி மகிழ நான் இங்கே வரலே" என் தம்பி எதிரிலே கேட்கிறேன், மறைக்காமல் பதில் சொல். கோயில்லே வித்யாவைப் பார்த்து என்ன சொன்னே?

கணவனது பக்கம் திரும்பக்கூட சுமித்திராவுக்குத் துணிவு இருக்கவில்லை. மிரட்சியுடன் விழித்தாள். இதயம் வெடித்து விடும் போலத் துடித்துக் கொண்டது. தொண்டையிலே என்னவோ அடைத்துக்கொண்டு விட்டது போன்ற அச்சம். ஆடிப் போய் விட்டாள்.

"யாரோ ஒரு பெண்ணோட நான் ஊர் சுத்தறேன்னு போய் கோள் வச்சிருக்கியே? உனக்கென்ன துணிச்சல். நான் ஊர் சுத்தினதை நீ கண்ணால பாத்தியா?" ஓங்கி அவன் அதட்டினான்.

மெய் பதறிப் போனாள் அவள். "புடவைக்கடையில் அவளுடன் உங்களைப் பார்த்தேன்" என்று உண்மையை சொல்ல அவளுக்கு வாய் வரவில்லை. கேட்பவன் குரல் ஓங்கினால், பதில் அளிப்பவளிடம் உள்ள மெய் பொய்யாகி விடுவது இயல்புதானே?

"நிரஞ்சன்! உன் பெண்டாட்டி லேசுப்பட்டவள் இல்லை. இவளை அம்மா உள்ளே சேர்க்க மறுத்த ஆத்திரத்தை வைத்துக் கொண்டு, என்னை பழி வாங்கத் திட்டமிட்டு உன் அண்ணி கிட்ட என்னைப் பற்றி ஏராளமான கதைகள் சொல்லியிருக்கா, இதனாலே வித்யாவுக்கும் எனக்கும் பெரிய சண்டை. இத்தனையும் உனக்குத் தெரியாமலா, நடந்திருக்கும்?"

அவமான உணர்வில் முகம் சிவந்து போனான் நிரஞ்சன்.

"அண்ணியிட்டே நீ போய்ப் பேசினியா?" உரத்த குரலில் ஆத்திரத்துடன் அதட்டினான்.

மைத்துனர் எதிரே கணவன் தன்னைக் கடிந்து கொள்ளும் அவமான நிலை உருவாகி விட்டதை எண்ணி துக்கம் நெஞ்சை அடைக்க, கண்களில் நீர் புரள, உதட்டைக் கடித்துக் கொண்டு மௌனமாக இருந்தாள், சுமித்திரா.

"வாயில் என்ன கொழுக்கட்டையா, பதில் சொல்லேன்! அண்ணா கேட்கிறாரே?" சீறி எழுந்த நிரஞ்சனைக் கண்டு நடுங்கிப் போன சுமித்திரா, விம்மி அழுதுகொண்டு உள்ளே ஓடிப்போய் விட்டாள்.

"இந்த மாதிரி இன்னொரு தடவை நான் கேள்விப் பட்டால் நமக்குள் நடக்கிற சங்கதியே வேறாக இருக்கும் சொல்லிட்டேன். காதல் கல்யாணம் பண்ணிக் கொண்டியே இப்பப் பார்த்தியா? பெண்டாட்டியை அடக்கி வாழத் தெரியாத கோழை. நல்ல கௌரவமான குடும்பத்துப் பெண்ணாக இருந்தால், அவன் இப்படி வம்பைத் தேடிக் கொண்டு அலைவாளா? இதுக்குத்தான் ஆரம்பத்திலே இருந்து அம்மா மறுப்பு தெரிவிச்சாங்க நல்லா படு அவதி" என்று கோபத்துடன் சாடிவிட்டு விருக்கென்று எழுந்து சுரேந்திரன் வெளியேறி விட்டான்.

சிறிது பொழுதில் சற்று தூரத்தில் கார் ஒன்று உறுமிக் கொண்டு புறப்படும் ஓசை கேட்டது.

கட்டுக் கொள்ளாத சினத்தில் வாயடைத்துப் போய் நிரஞ்சன் நாற்காலியில் தொப் என்று உட்கார்ந்து கொண்டான். அவனிடம் இதைப் பற்றி சுமித்திரா ஏன் முன்னதாகச் சொல்லவில்லை? மனைவி மீது தாங்கொணா ஆத்திரம்.

சிறிது பொழுதில் அழுது சிவந்த முகத்தைக் கழுவித் துடைத்துப் பொட்டு வைத்துத் தன்னைச் சிராக்கிக் கொண்டு முன் அறைக்குள் மெல்ல வந்தாள், சுமித்திரா.

"காபி ஆறிப் போகுதே, சாப்பிடுங்க"

"நீயே சாப்பிட்டுச் சுகமா இரு."



கோபத்துடன் கத்திய நிரஞ்சன், தம்ளரை எடுத்து அவள் காலடியில் வீசி விட்டு வெளியே போய்விட்டான்.

திகில் அடைந்துபோன சுமித்திராவுக்குத் துக்கம் தாளவில்லை. ஓங்கிக் கைகளால் ஆத்திரம் தீர அடித்திருந்தால் கூட கவலைப்பட்டிருக்க மாட்டாள். காலடியில் காபித் தம்ளரை வீசிவிட்டுக் கடுமை தெறிக்க விழித்த கணவனுடைய கோபத்தை அவளால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. அவர்களுடைய திருமண வாழ்க்கையில் இதுதான் முதல் முதலாக ஏற்பட்ட பெரும் பூசல்.

அண்ணி வித்யாவைப் பார்த்துப் பரபரப்புடன் விஷயத்தைக் கொட்டி அளந்தது எத்தனை பெரிய பிசகாய் விட்டது? அது அவள் செய்த முதல் தவறு.

உடனுக்குடன் கணவனிடம் சொல்லாமல் மறைத்து வைத்தது இரண்டாவது தவறு.

அவளுடைய ஆசைக் கணவனது மனதிலே அவள் மேல் வெறுப்பு மூண்டு விட்டதே. ஐயோ அவள் இப்போது என்ன செய்வாள்?

பொறுக்க முடியாமல் ஓவென்று அழுதுவிட்டாள்.

அதற்குப் பின்னர் அந்த வீட்டில் துயரம் குடி கொண்டு விட்டது.

நிரஞ்சன் அவளிடம் பேசுவதை நிறுத்திக்கொண்டான். வீட்டில் சாப்பிடுவதையும் நிறுத்தி விட்டான். மனைவி மீது கொண்டிருந்த கோபத்தில் கொஞ்சிக் கொண்டு அருகில் ஓடி வந்த மகள் மீது எரிந்து விழுந்தான்.

"சுமி, சுமி" என்று வாய்க்கு வாய் அன்புடன் அழைக்கும் ஆசைக் கணவன் மேற்கொண்டுவிட்ட மௌனம் அவள் மனத்தைத் தூளாக உடைத்தது.

தன் தவற்றை நினைத்து அவள் பலமுறை அழுது தீர்த்தாள். ஆனாலும் அவன் அசைந்து கொடுக்க வில்லை.

நாட்கள் நரக வேதனையுடன் நழுவின.

அன்று காலை அவள் எழுந்திருந்தபோது தலை பாரமாகக் கனத்தது. குளித்துவிட்டு வேறு உடுத்திக்கொண்டு தலையைச் சீவி முடிக்கக் கண்ணாடி முன்வந்து நின்றவள் திடுக்கிட்டுப் போனாள். அவளும் இந்தச் சில நாளாகச் சரியாகச் சாப்பிட வில்லை. உறங்கவும் இல்லை, அதன் பயன் முகத்திலே தெரிந்தது. இரவு முழுவதும் அழுது அழுது கண்கள் சிவந்து இமைகள் வீங்கி முகம் உப்பிக் காணப்பட்டது.

வித்யாவின் வாழ்க்கை வீணாகிவிடக் கூடாது என்று பரிதாபப்பட்டதற்கு அவளுக்கு கிடைத்த பரிசு? அவள் வாழ்க்கையே குலைந்துவிடும் போன்ற பயங்கர நிலையல்லவா ஏற்பட்டுவிட்டது? மனைவி விவரமாகச் சொல்வதைக் கூட முகம் கொடுத்து கேட்க மறுக்கிறானே நிரஞ்சன்.

கண்களிலிருந்து பொங்கிக் கன்னங்களில் மாலைவிட்ட கண்ணீரைச் சட்டென்று துடைத்துக் கொண்டாள். இறந்துபோன தன் தந்தையின் படத்தை ஆறுதலுக்காக நிமிர்ந்து பார்த்தாள். மீண்டும் கண்கள் கலங்கின. அப்பா மட்டும் உயிரோடு இருந்திருந்தால்... தக்க சமயத்தில் தக்கபடி புத்தி சொல்லி இந்த விபரீத நிலையைத் தடுத்திருப்பாரே?

வாயிற்படியில் நிழல் ஆடுவதை உணர்ந்து திரும்பினாள்.

நிரஞ்சன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு மெல்ல உள்ளே வந்தான்.

கணவனைக் காண அவளுக்கு அச்சமாக இருந்தது. அவசர மாக முடியை அள்ளிக் கொண்டையாக முடிந்து கொண்டாள்.

"சுமி..."

வியப்புத் தாங்க முடியாமல் அவனை நோக்கினாள்.

"என்னைத் தயவுசெய்து மன்னிச்சுடு. நான் ரொம்ப அவ சரப்பட்டு உன்கிட்ட கடுமையா நடந்துகொண்டு விட்டேன். அழாதே சுமி!" சொல்லிக் கொண்டே அருகில் நெருங்கி அவளை அன்புடன் தழுவிக்கொண்டான்.

பலமாக விம்மி குலுங்கி அழுதாள் அவள்.



மெல்ல முகத்தை நிமிர்த்திக் கண்களைத் துடைத்து விட்ட கணவனிடம் அந்தக் கடுமையைக் காணவில்லை. பரிவுடன் அவளைத் தன் நெஞ்சோடு சேர்த்துக் கொண்டு, நெற்றி மீது கலைந்து புரண்ட கூந்தலைக் கோதிச் சீராக்கினான்.

"இந்த ஒருவார காலமா நான் ஒரு காரியத்தில் இறங்கி யிருந்தேன். யார் சொல்றது உண்மையின்னு தெரிஞ்சுக்கணும், அப்பத்தான் என் வாழ்க்கை நிலைக்கும்னு ஒரே பிடிவாதம். இப்போ தெரிஞ்சு விட்டது. அண்ணா சுரேந்திரன் தான் பொய் பேசினார். அவருக்கும் சித்ரா என்கிற பெண்ணுக்கும் உள்ள கள்ளநட்பு இப்போ பலருக்குத் தெரிஞ்ச கதையா இருக்கு. விரைவில் ஊர் சிரிக்கப் போகிறது. வீட்டை வித்து வந்த காசை இப்படிக் கண்டபடி செலவு செய்றதைக் கண்டிக்காமல் அண்ணி நீ பொய் சொல்றதாகக் கதை கட்டி உன்மேல் பழி சுமத்தியிருக்காங்க. எல்லாம் தெரிஞ்சு போச்சு. முன்பே உன்கிட்ட கேட்டிருக்கலாம்."

அவள் விசும்பினாள்.

"நீ தப்புச் செய்யலே, நான்தான் மடையன், உன்னைப் புரிஞ்சுக்காம, அண்ணன் போட்ட கூச்சலில் கோப்பட்டுக் கொண்டு... அழாதே சுமி! ஒரு விதத்திலே இந்தப் பூசல் நமக்குள் ஏற்பட்டது ஒரு நன்மைக்குத்தான்."

"ஒரு வாரமா உங்கள் கடுமையான முகத்தைப் பார்க்க முடியாம நான்பட்ட வேதனை..." அவள் மறுபடியும் விசும்பினாள்.

"சுமி! ஒருத்தரை ஒருத்தர் எவ்வளவு ஆழமா நேசிக்கிறோங் கிறதை இந்தச் சம்பவம் நமக்கு நல்லா உணர்த்திடுச்சுன்னு சொல்வேன். உன்கிட்ட பேச முடியாமல் குழந்தையைத் தூக்கிக் கொஞ்ச முடியாமல் அண்ணன் சொன்னதை நினைச்சு நான் பட்ட வேதனை...?"

"என்னை மன்னிச்சுடுங்கோ. இனி மேலே நான் உங்ககிட்டக் கேட்காமல் எதுவும் செய்யமாட்டேன்" என்று பச்சிளங் குழந்தையாகத் தேம்பினாள்.

"சே! சே! அழாதே சுமி! இனிமேலே நானும் அவசரப் பட்டு உன்மேலே இப்படிக் கோபப் படமாட்டேன். என்னையும் நீ மன்னிக்கணும்; மன்னிச்சுட்டியா?"

அவள் புன்னகை செய்தாள்.

"நான் உன்னை ரொம்ப நேசிக்கிறேன். அதை நீ இப்போ நம்புகிறாயா, சுமி?"

"உம்" என்று விம்மலுடன் அவள் தன் முகத்தை அழுத்தமாக அவன் நெஞ்சிலே பொருத்திக் கொண்டாள்.

அவன் கைகள் ஆறுதலாக அவளைத் தன்னுள் அணைத்துக் கொண்டன.

## 19

காலம் வேகமாக ஓடியது.

நிரஞ்சன், அவன் வேலை பார்த்த அலுவலகத்தின் விற்பனைப் பகுதியில் தலைமை அதிகாரியாக உயர்த்தப்பட்டான். சம்பளமும் கணிசமாகக் கூடியது. அவனுடைய பொறுப்பிலே நகரத்தில் இருந்த மூன்று கிளை அலுவலகங்கள் விடப்பட்டதால், அவற்றை நேரிடையாகச் சென்று தினசரி பார்வையிட வேண்டி இருந்தது. அதற்காக ஒரு பழைய காரை விலைக்கு வாங்கினான்.

அவனது குடும்பமும் பெருகியது சுமித்திரா இரண்டாவதாக ஒரு பெண் குழந்தைக்குத் தாயானாள். இத்துடன் குழந்தைகள், உங்களுக்குப் போதும் என்று உபதேசித்த டாக்டர் ரேவதி அதற்கு வேண்டிய வைத்திய உதவியும் செய்தாள்.

வேலை உயர்ந்தது போல் நிரஞ்சனுக்கு உழைப்பும் அதிகரித்து விட்டது. முன்னைவிடக் காலையில் சீக்கிரமே அலுவலகத்துக்கு அவன் கிளம்ப நேரிட்டது. கணவனுடைய பொறுப்பை உணர்ந்து கொண்ட சுமித்திரா வீட்டைப் பற்றியும்



ஏற்பட்ட எல்லாக் காரியங்களையும் தானே கவனித்துக் கொள்ளத் தொடங்கினாள்.

கௌரிசங்கருக்கு வயது மூன்று ஆகிக் கொண்டிருந்தது. நர்சரிப் பள்ளியில் சேர்க்க வேண்டிய பருவம். தாங்கள் வசித்த குடியிருப்பு அருகேயிருந்த சிறுவர் பள்ளியொன்றில் சென்று அவன் விசாரித்தான். பள்ளிக்கூடத்தில் அனுமதிக்கும் நாள் அன்று முன்னதாகவே வந்து வரிசையில் நின்றுவிட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. அவன் படித்த காலத்தில் அவன் தந்தை இப்படிக் கஷ்டப்பட்டு இருப்பாரோ? அவனுக்கு வியப்பாகத்தான் இருந்தது.

வேலைக்கார அம்மாவிடம் கைக் குழந்தையைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு சங்கரைச் சுத்தமாக உடுத்திக் கையுடன் அழைத்துக் கொண்டு பள்ளிக்கூடத்தில் இடம் பிடிக்க விரைந்தான். அப்பப்பா! சில தாய்மார்கள் அவனுக்கு முன்னதாகவே வந்து விட்டனர். வேர்க்க விறுவிறுக்க ஓடி வந்து வரிசையில் இடம் பிடித்துக்கொண்டான். நேரம் நீண்டு கொண்டு போயிற்று. முடிவில் அவன் முறை வந்ததும் விண்ணப்பத்தாளைப் பெற்றுக்கொண்டு விரைவாக அதைப் பூர்த்தி செய்து கொடுத்தான். தன் குழந்தைக்கு இடம் கிடைக்குமா என்ற கவலையுடன் வெகுநேரம் காத்துக் கொண்டு நின்றான். இந்த ரீதியில் கல்வியின் நிலை போய்க்கொண்டிருந்தால், சங்கரின் கல்லூரிப் படிப்பின் போது நிரஞ்சன் எத்தனை பாடுபடப் போகிறானோ என்று அவனுக்கு மலைப்பாக இருந்தது.

முடிவில் சங்கரின் பெயரைச் சொல்லி பள்ளிக் கணக்கர் அழைத்த போது, அவன் தன் மகனுக்குக் கல்லூரியில் இடம் பிடித்துவிட்ட மகிழ்ச்சியுடன் ஓடிச் சென்று சம்பளத்தைக் கட்டிவிட்டு வெளியே வந்தான். அப்போது பார்த்தான். பள்ளிக்கூடத்தின் பெரிய வராந்தாவில் வேறு ஒரு மூலையில் நின்று கொண்டிருந்த சில பெண்களுடன் அவனுடைய ஓரகத்தி வித்யாவும் காணப்பட்டாள்.

வித்யா ஏன் இளைத்துக் கறுத்து அடையாளம் தெரியாத அளவுக்கு மாறிவிட்டாள்.

முகத்திலே ஏன் இத்தனை துயரக் களை? உடம்பில் கூட அவள் சாதாரணமாக அணியும் நகைகளைக் காண வில்லையே? காதிலே பளிச்சிட்ட வைரக் கம்மல்களுக்குப் பதில் போலி முத்துத் தோடு அணிந்திருக்கிறாளே ஏன்?

அந்தப் பெண்கள் கூட்டத்தில் நிற்பது உண்மையில் அவள் ஓரகத்தி வித்யாதானா?

சுமித்திரா அவளைப் பார்த்து வியப்பு அடைந்த சமயம் பள்ளிக் கணக்கர் உரத்த குரலில் சன்னல் வழியே கூப்பிட்டார். "திருமதி சுரேந்திரன்! இந்தப் பக்கம் வந்து உங்கள் குழந்தையின் சம்பளத்தைக் கட்டுங்கோ."

சுமித்திராவின் சந்தேகம் விநாடியில் விலகியது. அவள் ஓரகத்தி வித்யாதான். ஆனால் ஏன் இப்படி மாறி விட்டாள்? தாங்க முடியாத திகைப்பு. முந்திய அனுபவத்தின் விளைவுகளை நினைத்த மாத்திரம் அவளுக்கு அச்சம் ஏற்படவே மடமடவென்று படிகளில் இறங்கி, தன் குழந்தையுடன் தோட்டத்தில் நின்ற வேறு ஒரு பெண்கள் கூட்டத்தில் மறைந்து கொண்டு விட்டாள்.

சிறிது நேரம் சென்றதும் அவள் பள்ளியை விட்டு வெளி வந்தாள். நடந்து செல்லும் தூரத்தில்தான் அவர்கள் வீடு இருந்தது. குழந்தையைக் கையில் பிடித்துக் கொண்டு நடை பாதை மீது மெல்ல நடந்தாள். மீண்டும் அவளை அறியாமல் பார்த்துவிட்டாள். வித்யா தன் ஐந்து வயது மகனுடன் முகத்தில் வழிந்த வேர்வையைத் துடைத்துக் கொண்டு, எதிர்ப்பக்கத்தில் இருந்த பஸ் நிலையத்தில் காத்துக் கொண் டிருந்தாள்.

இஞ்சி கொத்தமல்லி வாங்கக்கூட கடைகளுக்குக் காரில் போய் இறங்கும் பழக்கமுடைய வித்யா பஸ்ஸில் போக வேண்டும் என்றால்...? வேகமாக வந்து நின்ற பஸ்ஸில்



கூட்டத்தைத் தள்ளிக் கொண்டு மகனுடன் அவள் ஏறுவதை ஓரக்கண்ணால் கவனித்த சுமித்திராவிற்கு மிக்க வியப்பு.

வீட்டுக்கு வந்ததும், தொலைபேசியில் கணவனுடன் அவள் பேசினாள். ஆனால், ஓரகத்தியைச் சந்தித்த விஷயத்தைப் பற்றித் தெரிவிக்கவே இல்லை. ஒரு தடவை அனுபவம் போதாதா என்று நடுக்கம்.

சில நாளைக்குப் பிறகு, இரவு உணவுக்குப் பின் தொட்டி லில் கிடந்த மகளை எடுத்து மடிமீது வைத்துக் கொண்டு நிரஞ்சன் கொஞ்சிக்கொண்டிருந்தான்.

"தூங்கற குழந்தைய ஏன் சீண்டுறீங்க? இப்படிக் கொடுங்க" என்று மகளை வாங்கித் தன் மார்புடன் அணைத்துக் கொண்டு பால் தம்ளரை குழந்தை வாய் அருகில் வைத்தாள்.

சிந்தனையுடன் அவன் அமைதியாக எங்கேயோ வெறிப்பதைக் கண்டு அவளுக்குச் சிறிது கவலையாகிவிட்டது.

"ஆபீஸிலே ஏதாவது தொந்தரவா? ஒரு மாதிரி இருக்கிறீங் களே! பாலைச் சாப்பிடுங்க. ஆறிப்போகும்" என்று உபசரித்தாள்.

"நீ ரொம்பக் கெட்டிக்காரி-சட்டுனு கண்டுபிடிச்சுட்டே. நான் குழந்தையோடு விளையாடி மனசை மாத்திக்கப் பார்த்தாக் கூட முடியலே. ரொம்ப வேதனையா இருக்கு" தம்ளரைக் கீழே வைத்தான்.

குழந்தையை அணைத்தபடியே அவன் அருகே தரையில் வந்து உட்கார்ந்து கொண்டாள், அவள்.

"என்கிட்டே சொல்றதுக்குத் தடையில்லேன்னா சொல்லுங்க" என்று பரிவுடன் கேட்டபடி அவன் கரங்களைப் பிடித்துக் கொண்டாள்.

"உன்னைத்தவிர வேறு யார் எனக்கு இருக்கா சொல்லு? அதாலே உன்கிட்டே எதையும் மறைக்கிறதிலே அர்த்தம் இல்லை. நாம் இந்த இரண்டு ஆண்டுலே எப்படி முன்னேறி விட்டிருக்கோமோ, அதுக்கு நேர் மாறாக அண்ணன் குடும்பம்

கீழே சரிஞ்சு நாசமாகி விட்டது. கொஞ்ச நாளாதான் எனக்கு எல்லாம் விவரமா தெரியவந்தது."

சுமித்திராவின் நெஞ்சு படபடத்தது. பள்ளிக்கூடத்தில் வித்யாவைப் பார்த்தபோது தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தைச் சொல்லவேண்டும் என்ற துடிப்பு இருந்தது. ஆனாலும் அமைதியாக அவன் முகத்தைக் கவலையுடன் பார்த்தாள்.

"ஏகப்பட்ட கடன். அதைச் சமாளிக்க அண்ணியின் பங்களா-நகை- கார் எல்லாத்தையும் அண்ணன் வித்திட்டாராம். இப்போ ஒரு சின்ன ஃப்ளாட்டிலே குடியிருக்கிறாங்களாம்."

"அட பாவமே! பெருமூச்செறிந்தாள் சுமித்திரா.

"அதைவிட மோசமான ஒரு செய்தியைக் கேட்டு மனசு நொந்துபோயிருக்கிறேன், அண்ணா, வித்யா அண்ணியைத் தனியா ஃப்ளாட்டில் விட்டுவிட்டு, அந்தச் சித்ரா வீடே கதின்னு கிடக்கிறாராம்."

"அப்போ, உங்கம்மா?" சுமித்திரா அனுதாபத்துடன் கேட்டாள்.

"அதைத்தான் சொல்ல வரேன். இன்னிக்குத்தான் சங்கதி தெரிஞ்சுது சுமி! எனக்கு நீ ஒரு காரியம் செய்வியா?" அவன் குரல் தழுதழுத்தது.

"சொல்லுங்க, உங்கள் அண்ணனுக்கு ஏதாவது பண உதவி செய்யணும்னா செய்யலாம்."

"இல்லை. இப்ப என் கவலையெல்லாம் அம்மாவைப் பத்தினது. அவங்களுக்கு மறுபடியும் உடம்புக்குச் சுகம் இல்லையாம். முன்போல் நர்சிங்ஹோமில் இருக்கமுடியாமல் அம்மா அரசாங்க ஆஸ்பத்திரியில் சாதாரண வார்டிலே படுத்திருக்காங்களாம். ஆஸ்பத்திரிக்குப் போய் மூணு நாளாச்சாம். அண்ணி இதுவரை எட்டிப் பார்க்கலையாம்.

"நான் என்ன செய்யணும். சொல்லுங்க உடனடியா செஞ்சி முடிக்கிறேன்" என்று ஆறுதலாக கணவனின் கரத்தை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டாள்.



"என் குடும்பத்தாரிடம் இருந்து நீ தூர விலகியிருக்கணும்னு ஒரு காலத்திலே நான்தான் உனக்கு உத்தரவு போட்டேன். அம்மாவுக்கு என்னைக் கண்டாலே பிடிக்காதுங்கிற காரணத்தாலே. இப்போ நானே அவங்களை நீ போய்ப் பார்க்கணும்னு வேண்டிக்கும்படி ஆகிடுத்து. எனக்காக நீ நாளைக்கு அந்த ஆஸ்பத்திரிக்குப் போய் அம்மாவைப் பார்த்துத் தேவையான உதவிகளைச் செஞ்சிட்டு வரணும். செய்வியா?"

"நல்லா இருக்கு கேள்வி! அவங்க என் மாமியார். அனாதையா ஆஸ்பத்திரியிலே கிடக்க விட்டுட முடியுமா? கவலைப்படாதீங்க. நாளைக்கு முதல் வேலையா இதை நான் செய்து முடிக்கிறேன்."

"சுமி! என்ன சொல்றதுன்னு தெரியலே. உண்மையில் உனக்கு ரொம்பத் தங்கமான மனசு" என்று நெகிழ்ந்து போனான் நிரஞ்சன்.

"அதிகம் புகழாதீங்க. தங்கம் இப்போ ரொம்ப விலை ஏறிக்கிடக்கு." மெல்லச் சிரித்தபடி அன்புடன் அவன் தோள் மீது சாய்ந்து கொண்டாள் சுமி.

## 20

நிரஞ்சன் வேலைக்குப் போகுமுன் மருத்துவமனையில் கமலம் தங்கியிருந்த வார்டின் பெயர்-படுக்கை எண்-பார்வையாளர்களை அனுமதிக்கும் நேரம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டுத்தான் சென்றிருந்தான். இரு குழந்தைகளையும் வேலைக்காரி வசம் கவனித்துக்கொள்ள ஒப்புவித்து விட்டு சுமித்திரா புறப்பட்டாள். வீட்டை விட்டுக் கிளம்பு முன் சூடாக ஆர்லிக்சைத் தயாரித்துப் பிளாஸ்கில் ஊற்றி, ஒரு டம்ளருடன் துணிப் பையில் போட்டு கொண்டாள். அருகில் இருந்த கடையில் சில சாத்துக்குடி, ஆப்பிள் பழங்கள் வாங்கி அத்துடன் சேர்த்துக் கொண்டாள். பின்னர் பஸ் நிலையத்துக்கு விரைந்தாள்.

பார்வையாளர்களை அனுமதிக்கும் நேரம் நெருங்கியதும் மருத்துவமனை கேட்டைத் திறந்து விட்டார் ஊழியர். நெருக்கியடித்துக் கொண்டு ஒரே சமயத்தில் உள்ளே புகமுயன்ற கூட்டத்தைக் கண்டு தயங்கியபடி சற்று ஒதுக்குப்புறமாகச் சிறிதுநேரம் அவள் நின்றாள். ஒருவழியாகக் கூட்டம் கரைந்தது. எதிர்ப்பட்ட ஒரு நர்ஸிடம் வழி கேட்டுத் தெரிந்து கொண்டு மூன்றாவது மாடிக்கு ஏறிக் குறிப்பிட்ட வார்டுக்குள் நுழைந்த போது அவள் நெஞ்சு திக்திக் என்று அடித்துக்கொண்டது.

எப்படி வரவேற்பு இருக்குமோ என்ற அச்சத்தில் மெல்ல நடந்து கட்டில் அருகே வந்தாள்.

படுக்கை மீது ஆஸ்பத்திரி உடையில் உட்கார்ந்திருந்த நலிந்த உருவத்தைக் கண்டு அவள் திடுக்கிட்டுப் போய் விட்டாள்.

கட்டிலின் அருகே வந்து நின்ற சுமித்திராவைப் பரிதாபமாகப் பார்த்து விழித்தாள் கமலம்.

"நான்தான் உங்கள் மருமகள் சுமித்திரா வந்திருக்கேன். தெரியுதா, அத்தை? உங்களுக்கு உடம்புக்கு முடியலே, இங்கு இருக்கீங்கன்னு உங்கள் மகன் கேள்விப்பட்டு என் கிட்டச் சொன்னார். உடனே பார்க்கணும் போல் தோணிச்சு, ஓடி வந்தேன். அத்தை, இப்ப உடம்பு எப்படி இருக்கு?" மெல்ல அன்புடன் விசாரித்தபடி தான் கொண்டு வந்த பழங்களை அங்கு இருந்த மேசை மீது எடுத்து வைத்தாள்.

கமலம்மாள் கண்களில் குபீரென்று நீர் புரண்டது. தன் மெலிந்த கரங்களை நீட்டி மருமகளின் கைகளை ஆவலுடன் பற்றிக் கொண்டாள். "உட்கார். உன்கிட்ட ரொம்பப் பேசணும் போல இருக்கு. குழந்தை சங்கர் சவுக்கியமா" துக்கத்துடன் தினறினாள்.

"இப்போ இவனுக்கு ஒரு தங்கை கூடப் பிறந்திட்டாள். வீட்டிலே ஒரே விளையாட்டும் சிரிப்புமா ஆடிக்கிட்டிருக்கான். அவன் தங்கைக்கு உங்கள் பேரைத்தான் வச்சிருக்கோம்."



"முறுவலித்தாள், சுமித்திரா. திடீரென்று கமலம் விசும்பி அழத் தொடங்கிவிட்டாள்.

"அத்தை! அழுதால் உங்கள் உடம்புக்கு ஆகாது. உங்களுக்கு என்ன வேணும், சொல்லுங்கள். எங்களால் ஆனதைச் செய்து கொடுக்கிறோம்" கட்டிலில் கம்பி மீது கிடந்த மெல்லிய துவாலையை எடுத்து மாமியாரின் கண்களையும் முகத்தையும் துடைத்து விட்டாள். தோள் பட்டை மீது அலங்கிப் புரண்டு கிடந்த நரைத்த கூந்தலைக் கையால் மெல்லக்கோது ஒதுக்கி விட்டுச் சிறிய முடிச்சிட்டுப் பின்னால் படியவிட்டாள். பிளாஸ்கில் இருந்த ஆர்லிக்ஸைத் தம்ளரில் ஊற்றிச் சாப்பிடச் சொல்லி வற்புறுத்தி உபசரித்தாள்.

சாப்பிட்டுவிட்டுத் தம்ளரை மேஜை மீது வைத்த போது அவள் கை வலுவின்றி நடுங்கியது. மறுபடியும் தன் மருமகளை நிமிர்ந்து பார்த்த கமலத்துக்கு அழுகை தாங்க முடியவில்லை. கண்கள் கலங்கிப் போயின.

"ஆரம்பத்திலிருந்து நான் ஒரு பெரிய முட்டாள். பித்தளையைத் தங்கம்னு நினைச்சு ஏமாந்தேன்" விக்கினாள்.

"நடந்ததைப் பத்தி நினைக்கிறதிலே லாபம் இல்லை. அதையெல்லாம் மறந்துடுங்க" ஆறுதலாக கூறியபடி அருகில் கிடந்த பலகையின் மீது சுமித்திரா அமர்ந்து கொண்டாள்.

கமலத்தின் குழி விழுந்த கண்களையும், ஒட்டி உள் அடங்கிய கன்னங்களையும் ஊன்றிப் பார்த்த போது அவளுக்கு மிக்க வேதனையாகத்தான் இருந்தது.

"சங்கரைக் கூட்டிக்கொண்டு வந்திருக்கலாம். பாட்டி பார்க்க ஆசைப்படுகிறேனே! குழந்தை இப்போ பெரியவனா வளர்ந்திருப்பானே" தூரத்தில் இடையே பாட்டியின் முகத்திலே லேசான புன்னகை அரும்பி மலர்ந்தது.

"பள்ளிக்கூடத்திலே சேர்த்திருக்கோம். ரொம்ப விளையாட்டுப் பிள்ளை. உங்கள் மகனை அப்படியே உரிச்சிட்டு வந்திருக்கான். சின்னக் குழந்தைகளை ஆஸ்பத்திரிக்குள்ளே அனுமதிக்க

மாட்டாங்க. அதனால் கூட்டிக்கிட்டு வரலே. உங்கள் உடம்பு குணமானதும் வீட்டுக்கு வரும்போது அழைச்சிட்டு வர்றேன்."

கமலத்தின் கண்களில் மறுபடியும் கண்ணீர்.

"உனக்குத் தெரியாதா? வீடு வாசல்- பணம்- நகை எல்லாம் போய், அநாதையா இப்போ இங்கே தர்ம வைத்தியத்துக்கு கையேந்திட்டு நிற்கிறேனே! எல்லாத்தையும் சுரேந்திரன் அழிச்சிட்டான். பணமும், நகைகளும் இருந்தப்போ வித்யாவுக்கு மாமியார் வேண்டியிருந்தது. ஆஸ்பத்திரிலே கொண்டு தள்ளிட்டு அவள் என்னை எட்டிக்கூடப் பார்க்கலே," விம்மினாள், கமலம்.

சுமித்திராவுக்குக் கேட்கத் துயரமாக இருந்தது. நோய்- தனிமை- வறுமை என்று வயதுக் காலத்தில் கமலத்துக்கு இத்தனை கொடுமைகளா? அத்தையை அப்படித் தவிக்க விடுவது பாவமாச்சே?

"வீடு ஏன் இல்லை? நாங்கள் வசிக்கிற வீடு உங்களுடையது தானே, கொஞ்சம் உடம்பு குணமானதும் சொல்லுங்க. நாங்கள் வந்து அழைச்சிட்டுப் போறோம். எங்களோட வச்சுக் கவனிக்கிறோம். நாங்கள் எல்லாம் இருக்கும்போது நீங்கள் எப்படி அநாதையாவீங்க."

மருமகள் பேசப் பேச கமலத்துக்கு மேலும் அழுகை பொத்துக் கொண்டு வந்தது. "அன்னிக்கு அந்த டாக்டர் அம்மா கிளினிக்கிலே உன்னை ஒருதடவை குழந்தையோட பார்த்தப்பவே புரிஞ்சு போச்சு, நிரஞ்சன் ஒரு நல்ல பெண்ணைத் தான் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கொண்டிருக்கான்னு மனசிலே பட்டது. அப்போ இருந்த நிலையிலே என்னாலே உன்கிட்ட நின்னுகூடப் பேச முடியலே. அப்பப்பா! இந்த இரண்டு வருஷமா நான் என் மூத்த மகன் கிட்டேயும், மருமகள் கிட்டேயும் பட்டபாடு-கழுகு போல ரெண்டு பேரும் என்னைக் கொத்திப் பிடுங்கி விட்டாங்க. அதைவிட இந்த நோய் தேவலாம் போலத் தவிக்கப் போனேன். அப்பவெல்லாம்



நான் உங்கள் ரெண்டு பேரையும் நினைச்சுக்கிறது உண்டு" துயரம் தாங்க முடியாமல் கண்ணீர் உகுத்தாள் கமலம்.

சுமித்திராவின் கண்களும் கலங்கிவிட்டன. மனத்தில் வேதனை சுமையாக அழுத்தியது. "பாவம்" அத்தை. ரொம்பத் தான் அவதிப்பட்டு விட்டாங்க" மனம் நெகிழ்ந்து போனாள்.

"வருத்தப்படாதீங்க, அத்தை இனிமேலே உங்களுக்குக் கஷ்டம் எதும் ஏற்படாது பார்த்துக்கிறோம்." ஆறுதல் பல சொல்லிச் சமாதானப்படுத்தினாள்.

கமலத்திற்குத் திடீரென்று நினைப்பு வந்தது. படுக்கை மீது கிடந்த தலையணையைப் புரட்டி அதன் அடியில் பத்திரமாக வைத்திருந்த ஒரு சிறு துணி முடிப்பைக் கையில் எடுத்தாள்.

"எனக்கு உடம்பு ரொம்ப அதிகமாயிட்டா, தேவைப் படும்னு இதை அவங்க யாருக்கும் தெரியாமல் ஒளிச்சு இத்தனை நாளா வச்சிருந்தேன். இந்தா, இதை என் ஞாபகமா வச்சுக்கோ. நிரஞ்சனை வரச்சொல். எனக்கு அவன் மேலே இப்போ வெறுப்பு எதும் கிடையாது. நான் பிறக்கும்போதே என்னோட துரதிர்ஷ்டமும் பிறந்திருக்க, முட்டாள்தனமா என் குழந்தை மேலே நான் காய்ந்து கொண்டிருந்தேன். அவனுக்கு ஈடு செய்ய முடியாத வருத்தத்தைக் கொடுத்துட்டேன். அவன் கிட்டே மன்னிப்புக் கேக்காட்டா என் மனசு வேகாது. நான் செய்த கொடுமைக்கு இப்போ பலனை அனுபவிக்கிறேன்."

திக்கித் திணறியபடி அந்த முடிப்பில் இருந்த பொருளை அவள் அவிழ்த்து எடுப்பதற்குள் கவனித்து விட்டாள். மூத்த மருமகள் வித்யா வார்டுக்குள் வந்து கொண்டிருந்தாள். சட்டென்று அந்தத் துணி முடிப்பைக் கமலம் தலையணை அடியில் பதுக்கி விட்டு, கைகளை மடிமீது வைத்துக் கொண்டு மருமகளை வேதனையுடன் வெறித்தாள்.

நேர வேகமாகக் கட்டில் அருகே வந்த வித்யாவின் முகத்திலே ஒரே கோபம். தன்னைக் கண்டு எழுந்து நின்ற ஓரகத்தியை ஆத்திரத்துடன் உற்றுப் பார்த்தாள். அவளுக்கு மூக்கு முட்டியது.

"உங்கள் சம்பந்தமே வேண்டாம்னு தானே அத்தை இங்கே வந்து கிடக்காங்க, என்னத்துக்கு அவங்களை இங்கே தேடிக் கொண்டு வந்திருக்கே? என்ன சொன்னாலும் புத்தி கிடையாது. சோற்றிலே உப்புப் போட்டுத் திங்காத பிறவிகள்" கடுகடுத்தான்.

"வித்யா அந்தப் பெண்ணை ஏன் திட்டறே? என்னவோ ஆசை, பார்க்க வந்தாள்." கமலம் குறுக்கிட்டுக் குழறினாள். பெரிய மருமகளிடம் அவளுக்கு அத்தனை பயம்.

"எதுக்குப் பார்க்க வந்திருப்பாள்னு தெரியாதா? மீதி ஏதாவது இருந்தா பிடுங்கிக்கொண்டு போகலாம்னு தான் வந்திருக்கா" சீறினாள் வித்தியா.

"மீதி இப்போ என்கிட்ட என்ன இருக்கு. இந்த நோயைத் தவிர?" கிழவி மெல்ல அலுப்புடன் முணுமுணுத்தாள்.

"என் மாமனார் போட்டுக் கொண்டிருந்த வைரமோதிரம் உங்க கிட்டத்தான் இருக்குன்னு உங்கள் மகன் சொல்கிறார். வீடு முழுவதும் தேடினப்போ கிடைக்கலே. எங்கே வச்சிருக் கீங்க?" கண்களில் நெருப்புப் பறக்க மாமியாரை மருமகள் அதட்டினாள்.

நோயோட போராடிக்கிடக்கிற என்கிட்ட கேட்கிறியே, நியாயமா? கிழவி பதிலுக்கு அரற்றினாள்.

வித்யா கோபத்துடன் உதட்டைக்கடித்துக் கொண்டாள். சுமித்திராவைக் குரோதத்துடன் பார்த்தாள்.

"மறுபடியும் எச்சரிக்கிறேன். சாப்பாடு, பழம் இதெல்லாம் எடுத்திட்டு அத்தையைப் பார்க்க வராப்பல ஜாலம் பண்ண வேண்டாம். புறப்படு" உங்கள் சங்காத்தியமே வேண்டாம்னு ஒதுங்கியிருக்கிறச்சே, வந்து உறவா கொண்டாடறே? சே! ஒருவாட்டி சொன்னா போதாது!

உரத்த குரலில் வித்தியா கத்தியபோது பக்கத்துப் படுக்கையில் இருந்த நோயாளிகளின் உறவினர்கள் பலர் திரும்பி வேடிக்கை பார்ப்பதைக் கண்டு உடல் கூசிப் போனாள், சுமித்திரா.



"அத்தை, நான் வர்றேன்!" பொங்கி வந்த துயரத்தை அடக்கிக் கொண்டாள். தன் பையைத் தூக்கிக்கொண்டு கோபமும் துக்கமும் அவள் விரைவாக வெளியே நடந்தாள்.

## 21

நடந்ததைக் கேள்விப்பட்ட நிரஞ்சனுக்கு வருத்தமும் கோபமும் கட்டுக் கொள்ளவில்லை.

"தன்னாலும் பார்த்துக்கொள்ள முடியாது. அம்மாவைக் கவனித்து வைத்திய உதவி செய்யப் பொறுப்பு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கும் அவர்களும் அருகில் நெருங்கக் கூடாது என்றால், இது என்ன நியாயம்? வித்யா அண்ணிக்கு ஏன் இந்த விபரீதபுத்தி?" கோபத்துடன் பற்களைக் கடித்துக்கொண்டு முன் அறையில் வேகமாக உலாவினான்.

"வைக்கோல் போர் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு தான் தின்ன முடியாத வைக்கோலை பசிக்கு வரும் மாடு தின்னக் கூடாதுன்னு குலைத்துத் துரத்தியதாம் ஒரு நாய். அந்தக் கதையாத்தான் இருக்கு" என்று சிரித்துக்கொண்டு உள்ளேயிருந்து வந்த சுமித்திரா பால் தம்ளரை முக்காலி மீது வைத்தாள்.

எதிர்ப்பக்கத்து படுக்கையறை திறந்து கிடந்தது. உள்ளே விடிவிளக்கு மெல்லியதாக எரிந்து கொண்டிருந்தது படுக்கை மீது குழந்தை கௌசிகன் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தான். வேகமாகச் சுழன்றுகொண்டிருந்த மின் விசிறியின் காற்று அவனது சுருண்ட முடியுடன் விளையாடிக் கொண்டிருந்தது.

அருகில் கிடந்த தொட்டிலில் கழுத்துவரை மூடியிருந்த வெள்ளைப் போர்வைக்கு மேல் குழந்தை கமலியின் பட்டு முகம் மட்டும் தெரிந்தது. பளபளத்த திராட்சை கண்கள் மீது பட்டாம்பூச்சி இறகுகளை மடித்துக்கொண்டு உட்கார்ந்து விட்டது போன்று இமைகள் மூடிக் கொண்டிருந்தன. உறக்கத்

இதழும் சிரிப்பில் நெளிந்த சிறிய உதடுகளைச் சுழித்துக்கொண்டு குழந்தை அழகாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். அதிசயமாக உற்றுப் பார்த்தான், நிரஞ்சன்.

"பாலைச் சாப்பிட்டுட்டு போய்ப் படுங்க, நேரமாகிறது." நினைவு படுத்தினாள் சுமித்திரா.

"அழகான குழந்தைகள், அன்பான மனைவி, வசதியான வீடுன்னு எல்லாம் நிறைஞ்சுதான் இருக்கு. ஆனால், மனசில் தான் உற்சாகம் இல்லை" துயரப் பெருமூச்செறிந்தான் நிரஞ்சன்.

கவலையுடன் அவனைப் பார்த்தாள், சுமித்திரா.

"எப்படியிருக்கும்? நாம இங்கே மகிழ்ச்சியா இருக்கிறோம். இதே சமயம் என்னைப் பெத்தவங்க அனாதையைப் போல ஆஸ்பத்திரியிலே கிடக்கிறாங்களேன்னு நினைச்சுக் கொண்டாலே எனக்கு உணவு விஷமா இருக்கு. அம்மாவுக்கு உபசரித்து ஒருவாய் தண்ணி கொடுக்க பக்கத்திலே யாரும் இல்லே. நினைச்சாலே என் மனசு படும் வேதனை? வர்றுறுத் தாதே. இந்தப் பாலை என்னால் சாப்பிட முடியாது. எடுத்திட்டுப் போ!" துயரத்துடன் தடுமாறினான் அவன்.

"உங்கள் அண்ணிக்கு நமது உறவு வேணும்னு எப்போ தோணுகிறதோ அதுவரை நாம் கொஞ்சம் விலகியிருப்பது தானே நல்லது? பால் சாப்பிட வேண்டாம்; தயவு செய்து சீக்கிரம் போய்ப் படுங்க. விடியக்காலை எழுந்து மணலி வரை ஆபீஸ் காரியமாய் போய் வரணும்னு சொல்லிக்கொண்டு இருந்தீங்களே?" அனுதாபத்துடன் நினைவுபடுத்தினாள் அவள்.

ஆனாலும், அவள் மனமும் துயரவசப்பட்டது. "உதவி செய்ய முடிந்தும், ஒதுங்கி நிற்க வேண்டியிருக்கிறதே?" என்று மௌனமாக மருகினாள்.

மறுநாள் காலையில், வீட்டுக்கு நிறைய சாமான்கள் வாங்க வேண்டியிருந்தது. சுமித்திரா பேரங்காடிக்குப் புறப்பட்டாள்.

அந்த அங்காடிக்குள் நுழைந்ததுமே அவளுக்கு ஒரு சிறு அதிர்ச்சி. விற்பனைப் பிரிவில் பணியாற்றும் பெண்கள் இடையே அவளுடைய ஓரகத்தி வித்யா காணப்பட்டாள்.



நல்லவேளை, அவள் சுமித்திராவைப் பார்க்கவில்லை. வாங்க வந்தவற்றை மறந்து சுமித்திரா வேகமாகக் கடையை விட்டு வெளியேறினாள். வேதனையில் அவள் மனம் கனத்தது. மூச்சுத் தடுமாறும் அளவுக்கு ஒரு திகைப்பு மனத்தைக் கவ்விக் கொண்டது. அப்படியென்றால் வித்யா அந்தக் கடையில் வேலை பார்க்கிறாளா? வீட்டின் பொருளாதாரநிலை தலைகுப்புற விழுந்து விட்டது என்றுதான் அர்த்தமா? அடபாவமே! சுரேந்திரன் தம் குடும்பத்தைப் பற்றி ஒரேயடியாய் மறந்து போய் விட்டாரா?

மனக்கசப்பில் பிரிந்து வாழ்கின்ற அந்த தம்பதியர் இடையே பெற்றவளின் கதி?

பலவும் எண்ணி சுமித்திரா தவித்துப் போனாள். தான் கண்டதைக் கணவனிடம் சொன்னால் அவன் வேறு மனச் சங்கடப்படுவானே என்று எண்ணிக் கவலைப் பட்டாள்.

வேண்டாம் என்று ஒதுங்கி வாழ முயன்றாலும் உறவுச் சங்கிலி தொடர்ந்து வந்து பிணைத்திழுக்கிறதே! என்ன செய்வது? வியப்பும் வேதனையுமாக அவள் மௌனமாக தானே அந்த வேதனையை அனுபவித்தாள்.

அன்று மாலை பக்கத்து வீட்டுப் பாட்டிக்குக் கால் முட்டியில் தாள முடியாத வேதனை. டாக்டர் அம்மாளைப் பார்க்கத் தன்னுடன் கூடத் துணைக்கு வரும்படி சுமித்திராவை அழைத்தாள் அந்தக்கிழவி. வயதானவர்களுக்கு உதவி செய்ய அவள் ஒரு பொழுதும் தயங்கியது இல்லை.

டாக்டர் ரேவதி அவளைக் கண்டதும் புன்னகை செய்தாள். "உன்னைத் தொலைபேசியில் அழைத்துப் பேச வேண்டும் என்று விரும்பினேன். நீயே வந்துவிட்டாய்" என்றாள். அவள் காட்டிய இருக்கையில் அமர்ந்து கொண்டாள் சுமித்திரா. அந்த அறையில் அவர்கள் இருவர் மட்டுமே இருந்தனர். கதவு சாத்தப்பட்டிருந்தது. "என்ன விஷயம், டாக்டர்?" என்று சுமித்திரா கேட்டாள்.

"உன் மைத்துனரும் அந்தப் பெண் சித்ராவும் பிரிந்து விட்டார்களாம்"

"அப்படியா, டாக்டர்! ரொம்பச் சந்தோஷம். இனியாவது என் ஓரகத்தியும் அவள் கணவரும் நடந்ததையெல்லாம் மறந்து ஒன்றாக வாழட்டும். அது போதும் எங்களுக்கு" என்று மகிழ்ச்சியுடன் சொன்னாள்.

"அப்படிச் செய்தால் நல்லது. ஆனால் இரண்டு பேரும் ஒன்றாகச் சேர மறுத்து இன்னமும் பிரிந்து தனியே வசிக்கிறாங்க. வீரேந்திரனைக் குடியும், குதிரைப்பந்தய வெறியும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கின்றன. அவற்றை விட்டால்தான் அவன் வீட்டுக்குள் காலை வைக்கலாம் என்று கண்டிப்பாக இருக்கிறாள் வித்யா. அவளைச் சொல்லிக் குற்றம் இல்லை. அவள் நிலை சமீபத்தில் ரொம்ப மோசமாகி விட்டது. நான்தான் எனக்குத் தெரிந்த ஓரிடத்தில் சிபாரிசு செய்து வேலை வாங்கித் தந்தேன்."

"டாக்டர், என் மாமியார் இப்போ எப்படியிருக்காங்கன்னு தெரியுமா?"

"அவங்களை மருத்துவமனையிலிருந்து வீட்டுக்கு அனுப்பிச் சுட்டாங்க."

"நோய் குணமாயிடுச்சா. டாக்டர்? சில நாள் முன் அவங்களைப் பார்த்தபோது ரொம்பப் பலவீனமாக இருந்தாங்க."

"அவளுக்கு வந்திருக்கிற நோயை அதுக்குன்னு இருக்கிற தனிப்பட்ட ஆஸ்பத்திரியில் வச்சு பார்க்கிறது தான் முறை யின்னு அனுப்பிச்சுட்டாங்க."

திடுக்கிட்டுப் போனாள், சுமித்திரா, "அப்படி அவங்களுக்கு என்ன நோய் டாக்டர்?" பதற்றமாக வினவினாள்.

சுமித்திரா படித்தவள், புத்திசாலி. டாக்டர் ரேவதி என்ன சொல்லப் போகிறார் என்பதை முன் கூட்டியே ஊகிக்க முடிந்ததால் ஏற்பட்ட பயங்கரப் பரபரப்பிலே அவள் நெஞ்சு படபடத்தது. வாயும் நாக்கும் உலர்ந்து விட்டன போன்ற பிரமை அவளுள்.



"நெருங்கிய உறவினரிடம் உண்மையைச் சொல்வதில் தப்பு இல்லை. ஒரு வழியில்" என் கடமை கூட; அதைச் சொல்லத் தான் உன்னைத் தொலைபேசியில் கூப்பிட நினைத்தேன்; நீயே வந்துவிட்டாய்."

"டாக்டர், அவங்களுக்கு... சுமித்திரா பயத்துடன் வார்த்தைகளை விழுங்கிக் கொண்டாள்.

"ஆமாம். நீ நினைப்பது சரி. அவங்களுக்கு முன்பு ஒரு முறை அறுவைச் சிகிச்சை நடந்தது ஞாபகம் இருக்கா? அடிக்கடி உடம்பை வைத்தியரிடம் காட்டிக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியிருந்தோம். அவங்க செய்யலே. இப்போது அவங்களுக்கு வந்திருக்கிறதைச் சாதாரணமாகக் குணப்படுத்தி விட முடியாது" புற்றுநோய் ஆஸ்பத்திரியில் அனுமதித்து, ராஜவைத்தியம் செய்ய வேண்டும் அப்பொழுது கூட வெற்றி ஏற்படும் என்று சொல்வதற்கு இல்லை. நோய் எத்தனை வேகமாகப் பரவப் போகிறது என்பதைப் பற்றிச் சட்டென்று சொல்வதற்கு இல்லை. பாவம், அவங்க ரொம்ப நல்லவங்க. அவங்களுக்கு..." அனுதாபத்துடன் டாக்டர் முடித்தாள்.

சுமித்திராவின் கண்களில் நீர் புரண்டு கன்னங்களில் தாரையிட்டது.

## 22

சுமித்திரா ஒரு தீர்மானத்துடன் ரேவதியின் மருத்துவமனை யிலிருந்து வெளிவந்தாள்.

மாமியாரின் காலில், விழுந்து கெஞ்சி, எப்படியாவது அவளைத் தங்களுடன் கூடத் தங்கியிருக்கும்படி ஒப்புக் கொள்ளச் செய்ய வேண்டியது என்பதுதான் முடிவு.

கணவன் அலுவலகத்திலிருந்து திரும்புமுன் அதைச் செய்து முடித்துவிட விரும்பினாள்.

பொழுது அமிழ்ந்து இருட்டுப் பரவுமுன், தேடி வந்த வீட்டை அவள் கண்டு பிடித்துவிட்டாள்.

கதவை மெல்லத் தட்டினாள்.

"யாரது? என்று ஒரு பெண்ணின் அதிகாரக் குரல் உள்ளிருந்து ஓங்கி ஒலித்தது.

கதவைத்திறந்த பருமனான நடுத்தர வயது அம்மாள் அவளை வெட்டிவிடுகிறவள் போல் வெறித்தாள்.

"வித்யா சுரேந்திரன் என்கிறவங்க இங்கே தானே குடியிருக்காங்க? சுமித்திரா கேட்டாள்.

அந்த அம்மாளின் முகம் முன்னிலும் கடுமையாகியது. "போன வாரம் காலி பண்ணிக் கிட்டுப் போயிட்டா. இரண்டு மாச வாடகை பாக்கி" என்று எரிச்சலுடன் பதில் அளித்தாள்.

"எங்கே போயிருக்காங்கன்னு தெரியுமா?" சுமித்திரா முடிக்கு முன் அந்த அம்மாள் வெடித்தாள்.

"வாடகைப் பாக்கியைக் கொண்டுவந்து கொடுப்பதாகப் போனவள், எங்கே போனாளோ? சூப்பர்மார்க்கெட்டில் வேலை பார்க்கிறாளாம். அவ்வளவுதான் தெரியும். எனக்கு அடுப்புக் காரியம் பாதியிலே கிடக்கு" படார் என்று கதவை மூடிக் கொண்டு விட்டாள்.

மறுநாள் விடியும் வரை சுமித்திரா பொறுமையாக இருக்க வேண்டியிருந்தது. நிரஞ்சன் அலுவலகம் சென்றதும், சங்கரை பள்ளிக்கு அனுப்பிவிட்டு குழந்தை கமலியைத் தூக்கிக் கொண்டு வீட்டைப் பூட்டிவிட்டுக் கிளம்பினாள்.

சரக்குகளை அடுக்கிக் கொண்டிருந்த வித்யா தன் அருகில் கேட்ட மெல்லிய காலடியை உணர்ந்து நிமிர்ந்தபோது திடுக்கிட்டுப் போனாள். குழந்தையை அணைத்துக் கொண்டு நின்ற தன் ஓரகத்தியைக் காண அவளுக்கு எரிச்சலாக இருந்தது.

முன்னைவிட இன்னமும் அழகாகப் பளிச்சென்று காணப் பட்ட சுமித்திராவை ஓரக்கண்களால் பார்த்தாள்.



மடமட என்று உயர்மட்டத்துக்கு தாவிவிட்ட அவள் முன், தான் இப்படித் தாழ்ந்து விட்டிருக்கிறோமே என்ற ஆற்றாமை உணர்வில் அவளால் பேச முடியவில்லை. நெஞ்சு நெருப்பாகக் கொதிக்கிறது. "என்ன வேணும்" என்ற பாவனையில் புருவங்களைச் சுருக்கினாள். இன்னமும் அவள் ஆணவம் பூரணமாக அடங்கி விடவில்லை.

"அத்தைக்கு இப்போ உடம்பு எப்படி இருக்குன்னு கேட்டுக்கிட்டு, அவங்களுக்குப் பிரியம் இருந்தால், எங்கனோட கொஞ்சநாள் தங்கியிருக்க கூப்பிட விரும்புகிறோம். வீடு மாத்திட்டாங்கன்னு கேள்விப்பட்டு இங்கே வந்தேன்" என்று சுமித்திரா நிதானமாகப் பேசினாள்.

வித்யா வெட்கத்தில் முகம் சிவந்து போனாள். அந்த வம்புக்கார வீட்டுக்காரி வாடகை பாக்கி என்று விஷயத்தைக் கொட்டியிருப்பாளோ? சுமித்திரா மீது எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது.

"போன வாரம் வந்திருந்தால், தாராளமா அழைச்சிட்டுப் போகச் சொல்லியிருப்பேன். இப்போ அவங்க என்னோட இல்லையே, என்ன செய்ய" வெறுப்பாகப் பதில் அளித்துவிட்டு வேறு வேலை இருப்பது போல நடிக்கத் தொடங்கினாள்.

"எங்கே போயிருக்காங்கன்னு சொன்னால், நாங்கள் போய்ப் பார்த்துக் கேட்டுக்கிறோம், தயவு செய்து சொல்லுங்கள். உங்கள் நேரத்தை வீணாக்க மாட்டேன். உடனே போயிடறேன்" என்று சுமித்திரா பணிவாகக் கேட்டாள்.

"உடம்புக்கு முடியாமல் இருக்கும் இந்தச் சமயத்தில் அவங்களுக்குக் காசிக்குப் போகணும்னு ஆசை வந்திட்டது. தஞ்சாவூரில் யாரோ தெரிஞ்சவங்க காசிக்குப் போகப் போறாங்களாம். அவங்க துணையோட போகணும்னு பிடிவாதமாகப் புறப்பட்டு போயிட்டாங்க."

"ஐயோ! இந்த உடம்போட எப்படி பயணம் செய்வாங்க" பதறிப் போனாள் சுமித்திரா.

"ஓரே பிடிவாதமாகக் கிளம்பினால் நான் என்ன செய்வேன். போங்கோன்னு அனுப்பிச்சுட்டேன். சீக்குக்காரங்களை வச்சுச் சமாளிக்கிறதே பெரிய காரியம். அதோட அடம் பிடிக்க ஆரம்பிச்சால் யாரால் ஆகும். தஞ்சாவூர்ல யார் வீட்டுக்குப் போனாங்கன்னு அடுத்த கேள்வி என்கிட்ட கேட்காதே. எனக்குத் தெரியாது." மேலே பேசப் பிடிக்காதவள் போல முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

செய்தி அறிந்த நிரஞ்சன் துயர வசப்பட்டுப் போனான். தஞ்சாவூருக்குப் போயிருக்கும் அம்மாவை அவன் எங்கே போய்த் தேடுவான்? பயங்கரமான நோயுடன் சிகிச்சையின்றிப் பலவீன நிலையில் தன்னந்தனியே வயதான காலத்தில் எங்கெல்லாம் அலைகிறாங்களோ? இரண்டு பிள்ளைகளைப் பெற்றும் ஒரு தாய்க்கு முடிவில் இப்படி ஒரு கதியா? நினைத்து நினைத்து வேதனையில் துடித்துப் போனான்.

"காசும் பணமும் இருந்தபோது யாரையும் அண்ட விடாமல் கட்டிக் காத்த வித்யா, நோயும் வறுமையும் வந்த காலத்தில் தெருவில் விரட்டி விட்டிருக்கிறாளே. எத்தனை அரக்கபாவம்" எண்ணிக் குமைந்தான். அவன்.

அம்மாவை எப்படியாவது கண்டுபிடித்து விடவேண்டும். அவர்கள் வயது, பெயர் முதலியவற்றைக் குறிப்பிட்டு பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்துப் பார்த்தால் பற்பல எண்ணி வருந்தினான்.

அந்தப் பள்ளிக்கூடத்தின் அருகே ஒருசிறு பூங்கா. பகல் வேளைகளில் அங்கு ஆள் நடமாட்டம் அதிகம் இருப்பது இல்லை. நல்ல வெயில் வேளை. புல்தரை மீது மர நிழலில் ஒரு கிழவன் சுருண்டு படுத்துக்கிடந்தான்.

வெயிலைப் பாராட்டாமல் ஆடும் பலகையில் இரண்டு சிறு குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். வீட்டுக்குப் போகும் வழியில் சோற்றுப் பாத்திரத்தைத் திறந்து பார்த்த ஒரு வேலைக்காரப் பெண்ணுக்கு ஓரே பசி. ஒருவாய் சோற்றை



அள்ளிப் போட்டுக்கொள்ள ஒருசெடி மறைவில் ஒதுங்கி உட்கார்ந்தாள்.

பெரிய மர நிழலில் கிடந்த சிமெண்டுப் பலகை மீது மெல்ல தள்ளாடிக் கொண்டு வந்து உட்கார்ந்தாள் கமலம். உலகில் அவளுக்குச் சொந்தம் என்று இருந்த சிறு மூட்டையைப் பக்கத்தில் வைத்துக் கொண்டாள். இரண்டு நாள் முன்னர்தான் அவள் வீட்டை விட்டுக் கிளம்பி இருந்தாள்.

"பாலுக்கும் மருந்துக்கும் கொடுக்க காசுக்கு எங்கே போவேன்? இருக்கிறதையெல்லாம் உங்க மகனிடம் கொட்டிக் கொடுத்துட்டு இப்போ என் கழுத்தை அறுக்கிறீங்க. அந்த வைர மோதிரத்தையாவது பத்திரமா வச்சிருந்தால் வித்து இப்போ உங்களுக்கு ஏதாவது செய்ய முடியும். இப்ப என்ன செய்யமுடியும்?" வேலையிலிருந்து வந்ததும் வராததுமாகக் கத்தினாள் வித்யா.

சுபாவத்தில் மானியான கமலம் கூசிக் குறுகிப் போனாள். இடி சொற்களைக் கேட்டுக்கொண்டு அவள் இந்தப் பயங்கர நோயுடன் இன்னமும் வாழவேண்டுமா? பேசாமல் கடலில் இறங்கி உயிரை மாய்த்துக் கொண்டு விட்டால்?

தாங்க முடியாத துக்கத்தின் போதுதான் அந்தக் கற்பனை மனத்தில் தோன்றியது. காலம் முடியுமுன் காசிக்குப் போகணும் ஆசை. மெல்ல ஆரம்பித்தாள்.

வித்யா படபடவென்று வார்த்தைகளைக் கொட்டினாள். "போங்கோ, இங்கே உங்களை யாரும் பிடிச்சு வச்சுக்கலை" என்று சீறி விழுந்தாள்.

மாமியார் வெளியே கிளம்பத் தயாராவதை கண்டு அவள் மிரண்டுவிடவில்லை. "எப்படிப் போவீங்க? துணைக்கு வரட்டுமா, பஸ்ஸில் ஏற்றிவிடவா?" ஒன்றும் கேட்கவில்லை. ஒழியட்டும் என்று நிம்மதியாக இருந்து விட்டாள்.

மெல்லத் தட்டுத் தடுமாறிக்கொண்டு கடற்கரைக்கு வந்து விட்டாள். கமலம். பொழுது வேகமா மறைந்து கொண்டிருந்தது. அவளுக்கு மேலே நடக்க முடியாமல் தலை சுற்றியது.

கண்கள் இருண்டன. மணல்மீது தொப்பென்று விழுந்து விட்டாள்.

அனுபவிக்க வேண்டியவை ஏராளம் இருக்கும்போது மரணம் அத்தனை சுலபமாக வந்துவிடுமா?

கடற்கரைக்குக் காற்று வாங்க வந்த யாரோ இளம் தம்பதியர் பரிதாபப்பட்டு மெல்லப் பிடித்துத் தூக்கி ஒரு டாக்சியில் ஏற்றித் தங்கள் வீட்டில் கொண்டு வந்து வைத்துக் கொண்டனர்.

சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தாம். ஆனால், அன்பு மிக்கவர்கள். நோயாளியான அவளிடம் மிகவும் பரிவுடன் நடந்து கொண்டனர். பாலும் சோறும் கொடுத்து அன்போடு கவனித்துக் கொண்டனர். ஆழ் கடலுக்குள் எங்கேயோ ஒளிந்து கிடக்கும் முத்துக்கள் போல அன்பும் பண்பும் யார் யாரிடமோ அடக்கமாக அடங்கிக் கிடக்கின்றன. கமலம் மனம் நெகிழ்ந்து போனாள்.

அவர்களுக்குத் தொடர்ந்து தொல்லை கொடுக்க விரும்பாமல் அன்று மாலை மாம்பலத்தில் இருக்கும் தன் மகனிடம் போவதாகச் சொல்லிவிட்டுக் கிளம்பினாள். அப்படியும் அந்தப் பெண் அவளை ரிக்ஷாவில் வைத்து, பத்திரமாக பஸ் நிலையம் வரை அழைத்துச் செல்லும்படி ஓட்டுநரிடம் பலமுறை சொல்லிப் பணமும் கொடுத்து அனுப்பினாள்.

பாதி வழியிலேயே இறங்கிக் கொண்டாள், கமலம். நல்ல வெயிலில் நடக்கத் தொடங்கினாள். இத்தனை நாளும் இல்லாத ஒரு பசி காதை அடைத்தது. சேலைத் தலைப்பில் முடிந்திருந்த சில்லறையை எடுத்து அருகில் இருந்த மடக்கடை ஒன்றில் பன் வாங்கிக் கொண்டாள். வெகுதூரம் நடக்க முடியவில்லை. அருகில் தென்பட்ட அந்தப் பூங்காவுக்குள் வந்து சிமெண்டு பலகை மீது உட்கார்ந்து விட்டாள்.

சோற்றையும் குழம்பையும் கலந்து அள்ளிச் சுவைத்துத் தின்னும் அந்த வேலைக்காரப் பெண்ணைப் பார்த்ததும் அவளுக்கும் பசி முற்றியது. கையில் இருந்த பொட்டலத்தை அவிழ்த்து ஒரு வாய் பன்னைக் கடித்து விழுங்கினாள்.



காய்ந்துபோன பன், தொண்டையை அடைத்துக் கொள்ளவே பலமான விக்கல் ஏற்பட்டது. நிற்காமல் தொடர்ந்து வேதனை செய்யவே ஒருவாய் தண்ணீர் குடிக்க விரும்பி சுற்றிலும் பார்த்தாள். வெகு தூரத்தில் பூங்காவுக்கு நீர் பாய்ச்சும் குழாய் தென்பட்டது. ஆனால் இந்த வேளையில் தண்ணீர் அதில் வராதே? கிலியுடன் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

பூங்காவின் நடுவே வட்டவடிவில் இருந்த சிறு தொட்டிக்குள் அல்லி படர்ந்திருந்தது. அதிலிருந்து ஒரு வாய் தண்ணீரை அள்ளிக் குடித்தால்?

வேறு வழியில்லை. விக்கலும் திணறலுமாக மெல்ல அதன் அருகே சென்று குனிந்து நீரை இரு கையால் அள்ளி எடுத்தபோது, "பாட்டி" என்ற குரல் திகைக்கச் செய்தது.

நெடுந்தூரம் நடந்து களைத்துவிட்ட அம்மையை அழைத்த முருகன் போல் ஒரு சிறுவனின் கனிவு நிறைந்த குரல். திரும்பி பார்த்தாள். பளிச்சிட்ட பள்ளிச் சீருடையில் பக்கத்திலே வந்து நின்ற அந்தச் சிறுவனை எங்கேயோ பார்த்தநினைவு. உடம்பு புல்லரித்தது. நெஞ்சு சிலிர்த்தது.

"அது அழுக்குத் தண்ணி பாட்டி. குடிச்சாக் காய்ச்சல் வந்துவிடும், நான் நல்ல தண்ணி வச்சிருக்கேன். இந்தாங்க, குடியுங்க" என்று புத்தகப் பையைக் கீழே வைத்து விட்டு, தோளில் மாட்டியிருந்த பிளாஸ்டிக் பாட்டிலை எடுத்து அவளிடம் நீட்டினான் சிறுவன்.

"ரொம்ப விக்கல் எடுக்குது. சீக்கிரம் குடியுங்க" என்று சொல்லிக்கொண்டே அவன் தன் சின்னஞ்சிறு கையால் அவள் தலையை மெல்ல தட்டினான்.

கமலத்தின் உடம்பு சிலிர்த்தது. ஒரு வாய் தண்ணீரை விழுங்கிய அவள் கண்களில் பொங்கி வழிந்த கண்ணீர், கன்னங்களை நனைத்தது. இத்தனை சின்ன வயதில் எத்தனை கருணை இந்தக் குழந்தைக்கு? யார் பெற்ற செல்வமோ, இவன்?" வியப்புடன் அவனைப் பார்த்தாள். குழந்தை! ரொம்ப புத்திசாலியாக இருக்கே. எங்கே படிக்கிறே?"

"அதோ தெரியுதே, அந்தப் பள்ளிக்கூடத்திலே படிக்கிறேன். விக்கல் நின்னு போச்சா பாட்டி?" சிரித்துக் கொண்டே தண்ணீர் பாட்டிலை அவன் திரும்பி வாங்கிக் கொண்டான்.

"நல்லாப் படி. தீர்க்காயுசா இரு. பேர் என்ன சொன்னே?"

"கௌரிசங்கர்னு பேர். ஆனால், அம்மா சங்கர்னு தான் கூப்பிடுவாங்க. ஏன்னா, இது என் தாத்தாவின் பெயர். பெரியவங்க பெயரைச் சொல்லக் கூடாதாம்." அரிசிப் பற்கள் தெரிய அவன் மீண்டும் சிரித்தபோது அந்தக் களையான, கபடமற்ற முகத்தைக் கண்டு அவள் பரவசம் அடைந்தாள்.

"இட்டா வா, இப்படி. உன் அப்பா பேர் என்ன?" அவள் குரல் தழுதழுத்தது. உணர்ச்சி வசத்தில் உடம்பு ஆடியது.

"என் பேர் கௌரிசங்கர். என் அப்பா பேர் நிரஞ்சன். அம்மா பேர் சுமித்திரா. எங்கள் வீடு இங்கே கிட்டத்தான் இருக்கு."

சிரேல் என்று தன்னை இழுத்து மார்போடு அணைத்துக் கொண்டு ஏன் இந்தப் பாட்டி இப்படி அழுகிறாங்க? சங்கருக்கு ஒரே திகைப்பு!

## 23

"குழந்தைப் பள்ளிக்கூடம் போயிருக்கிறான். தொந்தரவு விட்டது" என்று சுமித்திரா அசட்டையாக இருப்பது இல்லை. தன் கணவன், தன் குழந்தை, தன் வீடு என்று பொறுப்புக்கள் நிறைந்த சுபாவம், அவளுக்கு. பள்ளிக்கூடம் முடிந்ததும் விளையாட்டுப் போக்கில் நெரிசலான சாலைக்குள் ஓடிவிடப் போகிறானோ என்று அவள் தினமும் சில நிமிடம் முன்பே வந்து பள்ளிக்கூட வாசலில் காத்துநிற்பது வழக்கம்.

கைக்குழந்தை கமலி அப்பொழுதுதான் தூக்கத்தில் இருந்து விழித்துக் கொண்டாள். பசியுடன் அழுதாள். அவளுக்கு உணவு ஊட்டிச் சமாதானப்படுத்தித் தூக்கிக் கொண்டு



வீட்டைப் பூட்டி விட்டுக் கிளம்புமுன் அன்று பள்ளிக் கூடத்தில் மணி அடித்து விட்டார்கள். குழந்தைகள் நாலா பக்கமும் சிதறி ஓடினர்.

சீருடையில் எல்லாச் சிறுவர்களும் தூரத்துப் பார்வைக்கு ஒன்றே போல்தான் தோன்றினார்கள். அவசரமாகக் கண்களால் தன் மகனைத் தேடியபடி இங்கும் அங்கும் நகர்ந்தாள். அவள் சாலையைத் தாண்டி பள்ளிக்கு எதிர்ப்பக்கத்தில் இருந்த பூங்காவில் ஒரு பலகை மீது தன் மகனை அணைத்துக் கொண்டு யாரோ ஒரு கிழவி உட்கார்ந்திருப்பதைக் கண்டு பரபரப்பு அடைந்தாள்.

"சங்கர்!"

உரத்த குரலில் கூவியபடி சாலையைக் கடந்து பூங்காவுக்குள் வந்தபோது திகைத்தே போய் விட்டாள். அவளுடைய மதிப்புக்கு உரிய மாமியாரை கந்தல் உடையில், கூந்தல் புரள, பிச்சைக்காரி போல...?

அவளுக்கு ஏற்பட்ட பெருத்த அதிர்ச்சியில் வாய் இழந்து நின்று விட்டாள்.

"என்னைத் தெரிகிறதா அம்மா, சுமித்திரா? நான் செய்த கொடுமை எல்லாத்துக்கும் இப்ப அனுபவிக்கிறேன். நிற்க நிழலில்லாமல், ஒதுங்க இடம் இல்லாமல்..." மேலே தொடர்ந்து பேச முடியாமல் சுமலம் விக்கி விக்கி அழுதாள்.

"அப்படிச் சொல்லாதீங்க, அத்தை. உங்கள் மகன் வீடு உங்களுடையதுதானே? உங்களை நாங்களே வந்து அழைச்சிட்டுப் போக இருந்தோம். அதுக்குள்ளே இப்படி ஆயிடுச்சு, அழாதீங்க" என்று ஆறுதல் கூறியபடி அருகில் வந்து தன் முந்தானையால் மாமியாரின் கண்களைத் துடைத்து விட்டாள்.

"அம்மா! இவங்க யாரு?" வியப்புடன் கேட்டான், சங்கர்.

"உன் பாட்டி- அப்பாவின் அம்மா, இவங்களோட கொஞ்சம் இங்கே இரு. நான் போய் ஒரு ரிக்ஷாவை அழைச்சிட்டு வர்றேன்" என்று கூறிவிட்டு விரைந்தாள்.

வீட்டுக்கு வந்ததும் குளியல் அறைக்கு அழைத்துச் சென்று சூடான வெந்நீரில் குளிக்க உதவி செய்தாள். பீரோவைத் திறந்து தன் பிறந்த நாளுக்கு உடுத்த வாங்கி வைத்திருந்த புதிய நூல் சேலையை எடுத்து மாமியாருக்கு உடுத்தக் கொடுத்தாள்.

"ஏதாவது ஒரு பழைய சேலை இருந்தால் கொடு, போதும்" கமலம் மறுத்ததை அவள் ஏற்கவில்லை.

"வீட்டுக்கு பெரியவங்க, நீங்கள் கட்டிக் கிழிச்ச பழைய சேலையை எனக்குக் கொடுத்தால், நான் ஏத்துக்கிறது முறை. நான் கட்டினதை... சே! சே! ரொம்பத் தப்பு, அத்தை!" சொல்லிக் கொண்டே அவசரமாகச் சமையல் அறைக்குள் ஓடி ஆர்லிக்ஸ் தயார் செய்து கொண்டு தந்தாள்.

"முதலில் இதைச் சாப்பிடுங்க. நான் டாக்டர் ரேவதியைக் கூப்பிட்டு உங்களை வந்து பார்க்கச் சொல்றேன். உங்கள் மகன் வந்ததும் உங்களுக்கு வேண்டிய வைத்தியத்துக்கு ஏற்பாடு செய்வார்."

கமலத்தினால் கட்டுக் கொள்ள இயலவில்லை. மருமகளை அருகில் அழைத்தாள். சுமித்திராவின் கன்னங்களை மெல்ல விரல்களால் தடவினாள். உள்ளத்திலே பொங்கிப் புரண்ட உணர்ச்சிகள் கண்ணீராகக் கொப்பளித்தன.

"அம்மா சுமித்திரா நீ தான் ரொம்ப உசந்த சாதிப் பெண். நான் உன் முன்னாலே ரொம்பத் தாழ்ந்து போயிருக்கிறேன். உன் தங்க மனசுக்குக் கடவுள் உன்னை நல்லா வச்சிருப்பார்!" பேச முடியாமல் விம்மி விட்டாள்.

"நடந்ததையெல்லாம் மறந்து விடுவோம் அத்தை. இப்போ நாம் நினைச்சிப் பார்க்க வேண்டியது உங்க உடம்பைப் பத்திதான்" என்று கூறி மாமியாரை சுமித்திரா வெகுவாகத் தேற்றினாள்.

அன்று வீடு திரும்பிய நிரஞ்சனுக்குப் பெருத்த வியப்பு. நிறைந்த மகிழ்ச்சி. படுக்கை மீது உட்கார்ந்திருந்த தாயிடம் வந்து மெல்லத் தயக்கமாக நின்றான்.



இதுவரை தாயும் மகனும் பாசத்துடன் நெருக்கமாக பேசிக் கொண்டதே இல்லை. அவனுக்கு மிரட்சியாக இருந்தது. மகனின் முகத்தை நிமிர்ந்து பார்த்த கமலத்துக்குத் தாங்க முடியவில்லை. உணர்வுகள் எல்லாம் உருண்டையாகத் தொண்டையை அடைத்தது. கண்கள் கலங்கின.

"முடிவில் நீங்கள் இங்கே எங்களுடன் வந்து சேர்ந்தது நல்லதாகப் போச்சு. இனி அண்ணன் அண்ணி இருவரின் குறுக்கீடு இல்லாமல், உங்களுக்குத் தக்க வைத்தியம் செய்து கவனிக்க எங்களுக்குச் சுலபமாயிடுச்சு" என்று கூறிப் புன்னகை செய்தான் நிரஞ்சன்.

"நிரஞ்சன்! உனக்கு செய்த கொடுமையையெல்லாம் மறந்து என்கிட்ட உன்னால் எப்படியப்பா அன்பாகப் பேச முடியறது? என்னைத் தாயார்ன்னு உன்னால் எப்படி மதிக்க முடியறது?" தழுதழுத்தாள்.

சட்டென்று அருகில் வந்து உட்கார்ந்து கொண்டான், நிரஞ்சன். நடுங்கிய தாயின் கரங்களை மெல்ல தன் கைக்குள் எடுத்துக் கொண்டான். "நான் பிறந்த போது உங்களுக்கு ஏற்பட்ட மாபெரும் இழப்பில் மனம் அதிர்ந்து போயிருந்தீங்க. என் மேலே ஏதோ ஒரு கசப்பு ஏற்பட்டிருந்தது. அது நடந்து போன சம்பவம். அதைப் பத்தி நாம் எல்லோரும் மறந்துடுவோம், அம்மா."

சிறகு முளைக்க பறக்கத் தெரியுமுன் சாதாரண பறவைகூடத் தன் குஞ்சுகளைக் கூண்டுக்குள் வெளியே பிடித்துத் தள்ளாது. ஆனால், நீ பச்சைக் குழந்தையாக இருந்த போதே உன்னை வெறுத்துத் தள்ளினேன். எத்தனை பெரிய பாதகம்? என் மனத்தில் உனக்கு இடம் கொடுக்க மறுத்தேன். மகா கொடுமை!" துயரத்துடன் விம்மினாள் அவள்.

"இல்லேம்மா! பத்து மாசம் எனக்கு உங்கள் வயிற்றிலே இடம் கொடுத்தீங்களே, உலகில் நான் வாழ இந்த உடம்பை உங்கள் இரத்தத்தைக் கொடுத்து உருவாக்கித் தந்தீங்களே. இதற்கு நான் காலம் முழுவதும் நன்றியாக இருக்கணுமே."

"நிரஞ்சன்! என் குழந்தை! உன்னைப் புரிஞ்சுக்காமல் என் மனசைக் கல்லாக வைத்துக் கொண்டு விட்டேன். என் மனச்சாட்சி என்னை ரொம்ப உறுத்துது. அப்பா, இப்படி வா" என்று நினைறிய தாய், தன் மகனை அருகில் இழுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டு குமுறினாள்.

"அம்மா!" என்று அழைத்த நிரஞ்சனின் குரல் தடைபட்டது.

தாயின் கழுத்தை கட்டி கொண்டு பச்சைப் பிள்ளை போல அழுதான்.

அனைத்தையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்ற சிறுவன் சங்கர், "பாட்டி, அழுவாதீங்க. எனக்கும் அழுகை வருது" என்று விசிக்கத் தொடங்கினான்.

கலங்கிவிட்ட தன் கண்களை மெல்லத் துடைத்துக் கொண்டு சுமித்திரா குழந்தை கமலியை அணைத்தபடி மாமியாரின் அருகே வந்தாள்.

"அத்தை! இங்கே பாருங்க, அம்மாவும் பிள்ளையும் இப்படிச் சின்னக் குழந்தை போல அழுகிறதைப் பார்த்து உங்கள் பேத்தி சிரிக்கிறா. திரும்பிப் பாருங்க, அத்தை என்றாள்.

தாயும் மகனும் பிடியைத் தளர்த்திக் கொண்டு திரும்பிய போது கமலி தன் எலிப் பற்களைக் காட்டிக் கொண்டு தாயின் இடையிலே உட்கார்ந்தபடி சிரித்துக் கொண்டிருந்தாள்.

"அடி, என் தங்கம்! பாட்டியைப் பார்த்துப் பரிகாசம் பண்றியா? போக்கிரி! இப்படிக் கொடு அவளை" கமலம் கைகளை நீட்டிக் குழந்தையை வாங்கி அணைத்துக் கொண்டே மெல்லச் சிரித்தாள்.

தாயின் சிரிப்பு- மகனை-பேரனை மருமகளை எல்லாரையும் தொத்திக் கொள்ளவே யாவரும் சிரித்தனர்.

அப்பாடா! நிரஞ்சன் மனத்திலே பெரும் நிம்மதி ஏற்பட்டது.

அது சமயம் தொலைபேசியின் மணி அடித்தது.

ஓடிச் சென்று எடுத்த சுமித்திரா, மலர்ந்த முகத்துடன் திரும்பி வந்தாள், "டாக்டர் ரேவதிதான் பேசினாங்க. அத்தையை



ஆஸ்பத்திரிக்கு அழைச்சிட்டு போக எல்லா ஏற்பாடுகளும் செய்திருக்காங்களாம். அந்த ஆஸ்பத்திரியிலே பல புதுவிதமான சிகிச்சை முறைகள் பழக்கத்துக்கு வந்திருக்காம். அதனாலே அத்தையைத் தெம்பாக இருக்கச் சொன்னாங்க." என்று கூறி முறுவலித்தாள்.

இதுநாளும் இல்லாத ஒரு துணிவுடன் கமலம் தன் மருமகளை மிக்க நன்றியுடன் பார்த்தாள்.

"இந்தப் பெண், நோயாளியான என்னிடம் எத்தனை கருணை காட்டுகிறாள்? பூவும் பொட்டுமாக இவள் நீடுழிகாலம் வாழட்டும் இறைவா! இந்த வரம் ஒன்றுமட்டும் எனக்குப் போதும் அப்பா!" அவளது உள்ளம் வாழ்த்தியது.

## 24

கமலம் விழித்துக்கொண்டு எழுந்து படுக்கை மீது உட்கார்ந்தாள்.

ஜன்னல் ஓரமாகப் போடப்பட்டிருந்த அந்தக் கட்டிலின் மேல்கிடந்த மெத்தை உடம்புக்குச் சுகமாகத்தான் இருந்தது.

அதன் மீது விரிக்கப்பட்டு இருந்த சுத்தமான விரிப்பில் படுத்துக் கொண்டு பழைய நாட்களின் நினைப்பில் ஆழ்ந்து அப்படியே உறங்கிப் போய் விட்டாள் கமலம்.

மேலே லேசாகச் சுழன்ற மின்விசிறியால் அறை மிகவும் குளுமையாக இருந்தது. அதில் வெளிச்சம் கண்களை கூசாமல் இருக்க ஜன்னலில் தொங்கிய நீலவண்ணத் திரைகளைச் சுமித்திரா இழுத்து மூடியிருந்தாள்.

கமலம் அங்கு வந்து தங்கத் தொடங்கி மூன்றுநாள் ஆகியிருந்தது. அதற்குள்ளாகத் தன் உடலிலும் உள்ளத்திலும் ஏற்பட்ட மாறுதல்களை உணர்ந்த கமலம் வியப்பு அடைந்தாள். பல ஆண்டாக கூடவே வாழ்ந்தும் அவளுடைய உணர்வுகளுக்கு அடைக்கலம் கொடுக்காத மூத்த மகன் மருமகள் இருவரையும்,

நினைத்துக்கொண்டாள். பெற்றவளின் மனசு வேதனையுடன் சிரித்தது.

சுரேந்திரனுக்கும், நிரஞ்சனுக்கும் உள்ள வேற்றுமை தான் எத்தனை?

அவளது தயவிலே வந்து வாழ நேர்ந்துவிட்ட போதிலும் நிரஞ்சன் அவளிடம் எத்தனை அன்பாக, பணிவாக நடந்து கொள்கிறான்! தாயின் அன்புக்கு ஏங்கித் தவித்து கொண்டிருந்த இளையவனைப் புரிந்துகொள்ள மறுத்து, எத்தனை நல்ல வாய்ப்பை அவள் இழந்திருக்கிறாள்?

உயர்ந்த சாதி என்ற அகம்பாவத்தினால் சுமித்திராவைச் சந்திக்கவோ பேசவோ விரும்பாததால் ஏற்பட்ட விளைவுகள்? தாய் என்று சிறிதும் மரியாதை இன்றி மூத்த மகன் அடிமை போல அவளை அதிகாரத்தில் ஆட்டிப் படைத்தான். அவளது சொத்து முழுவதையும் உதறி விட்டான்.

மருமகளோ, மாமியாரிடம் இருந்து உடைமைகளைப் பறித்துக் கொண்டு முடிவில் தெருவுக்கே அனுப்பி விட்டாள்.

இருக்கப் போகும் கொஞ்ச காலமாவது பணத்தினால் செய்ய முடியாததை மனத்தினால் செய்து இளைய மகனுக்கு அவள் ஈடு செய்தாக வேண்டும்.

பலவாறு எண்ணியபடி அவள் எழுந்திருந்து வெளியே வந்தாள்.

அப்பொழுதுதான் நிரஞ்சன் வீட்டுக்குத் திரும்பியிருந்தான். கணவனுக்குக் காபி பலகாரம் கொடுத்து உபசரித்துக் கொண்டிருந்தாள், சுமித்திரா.

மெல்லிய குரலில் அவர்கள் பேசினார்கள். ஆனாலும் தெளிவாக அவள் காதுகளில் படவே கமலம் நடையைத் தாண்டி சாப்பாட்டு அறைக்குள் செல்லாமல் நின்று விட்டாள்.

"அம்மாவைப் பரிசோதித்துப் பார்த்த அந்தப் புற்று நோய் வைத்தியரிடம் நேரில் பேசிவிட்டு வந்தேன்" என்றான் நிரஞ்சன்.



"என்ன சொன்னாங்க?" சுமித்திராவின் குரலில் ஆவல் தொனித்தது.

"முன்பு அம்மாவுக்கு வயிற்றிலே கட்டி வந்து அறுவைச் சிகிச்சை செய்தாங்களே- அதுக்கும் இப்போ வந்திருக்கிறதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லையாம். நல்ல சாப்பாடும் கவனிப்பும் இல்லாததினால் அவங்களுக்கு ரத்த சோகை அதிகமாகி, பலவீனப்பட்டு மார்ச்சளி வந்து ஆஸ்பத்திரியில் அனுமதித்து இருந்தாங்களாம். அப்போதான் அவங்களுக்கு இடது மார்பில் புற்றுநோய் தொடங்கியிருப்பதாகச் சந்தேகம் ஏற்பட்டதாம். உடனே அதற்கு வேண்டிய சிகிச்சையைப் புற்றுநோய் ஆஸ்பத்திரியில் எடுத்துக்கொள்ளச் சொல்லி அனுப்பிவிட்டாங்களாம். முன்பு இருந்த ஆஸ்பத்திரியில் இருந்து எல்லா விவரங்களையும் இந்த வைத்தியர் வரவழைத்துப் புரிஞ்சு கொண்டு விட்டார்."

"சரி, அதுக்கு இப்போ என்ன செய்யணுமாம்."

"ஆஸ்பத்திரியில் அனுமதிக்கணுமாம். சில தனிப்பட்ட பரிசோதனைகள் செய்யணுமாம். பிறகு அறுவைச் சிகிச்சையும்- ஒளிக்கதிர் சிகிச்சையும் கொடுப்பாங்களாம். நோய் ஆரம்ப நிலையில் இருப்பதால் இந்தச் சிகிச்சைகள் மூலம் குணப்படுத்த முடியுமாம். பலவிதப் புது சிகிச்சை முறைகள் வந்திருப்பதால் நாம் கொஞ்சமும் பயப்படத் தேவையில்லை என்றும் தைரியம் சொன்னார்."

"அப்போ சீக்கிரமா அத்தையை ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டியது தானே?"

"இரண்டு நாளைக்குள் ஆஸ்பத்திரியில் அம்மாவைச் சேர்த்துவிட வேண்டும் என்று சொன்னார். ஆனால், அதற்குள் பணம் கொஞ்சம் சேகரிக்கணும். அறுவைச் சிகிச்சை- ஒளிக்கதிர் வைத்தியம் எல்லாத்துக்கும் பணம் பிடிக்குமே? ஏற்கெனவே வீட்டின் மேலே கம்பெனியில் கடன் வாங்கியிருக்கிறேன். இன்சூரன்சிலும் கடன் எடுத்துச் சில செலவுகளைச் சமாளிச்சோம். இப்போ..." அவனது குரல் மெல்லியதாக மங்கியது.

"இதுக்கு என்ன கவலை? என் கழுத்திலே கிடக்கிற ரெண்டு கொத்திச் சங்கிலியையும், கை வளையல்களையும் கழற்றிக் கொடுக்கிறேன். தங்கம் விக்கிற விலைக்குப் பத்தாயிரத்துக்கு மேலே தேறும். அத்தைக்கு ஒரு குறையும் வைக்காமல் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்திடுங்க."

"உன் நகைகளையா விக்கச் சொல்றே?" தயக்கமாகக் கேட்டான் நிரஞ்சன்.

"இத்தனை காலம் அம்மாவைப் பிரிஞ்சு, அந்தத் துயரத்திலே ரொம்பச் சங்கடப்பட்டீங்க. இனியாவது நீங்கள் நிம்மதியா இருக்க வேண்டாமா? பணம் வரும் போது நகைகளை மறுபடி வாங்கிக்க முடியும். ஆனால் அம்மாவின் உயிரை எந்த விலைக்கும் திரும்ப வாங்க முடியாதே?"

"இந்த நகையெல்லாம் நான் உனக்குச் செய்துபோட்ட இல்லை. உன் அப்பா கொடுத்தவை. அதுதான் யோசிக்கிறேன்."

"ஏன் இப்படிப் பிரிச்சுப் பேசறீங்க? அவங்க எனக்கு மாமியார் மட்டும் அல்ல, புகுந்த வீட்டில் ஒரு பெண்ணுக்கு மாமியார்தான் தாயார்."

மனம் கரைந்து போன நிரஞ்சன் அவளைத் தன் அருகே இழுத்து மார்புடன் அணைத்துக் கொண்டான்.

"சுமி! நான் ரொம்பக் கொடுத்து வச்சவன்."

"விடுங்க. மூச்சுத் திணறுகிறது. இப்போ வீட்டிலே அம்மா கூட இருக்காங்க. நினைப்பு இருக்கட்டும், திமிறிக்கொண்டு அவள் உள்ளே சென்று விட்டாள்.

கன்னத்திலே கோடிட்ட கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கமலம் அறைக்குள் மெல்லச்சென்றாள். அலமாரியைத் திறந்து புத்தகங்களின் இடுக்கிலே வைத்திருந்த அந்தப் பிளாஸ்டிக் பெட்டியை எடுத்தாள். அதில் இருந்து துணி முடிப்பை அவிழ்த்து அந்த வைர மோதிரத்தைக் கையில் எடுத்துக் கொண்டாள்.



"நிரஞ்சன்! ஓங்கி எழும்பிய அவள் குரலைக் கேட்டுப் பதற்றமாக மகன் ஓடிவந்தான். மருமகள் பின் தொடர்ந்தாள்.

"என்ன? என்ன வேணும்?" இருவரும் பதறினார்கள்.

"உன் மாமனார் போட்டுக் கொண்டிருந்த மோதிரம் ஓகோன்னு வாழ்ந்த காலத்திலே வாங்கினது. ஒன்னரை காரட் நீல ஒளி வைரம். ரொம்ப விலையானது. இதை உனக்குப் பரிசாகக் கொடுக்க வச்சிருந்தேன்."

"என்ன அத்தை சொல்றீங்க" குழப்பத்துடன் கேட்டாள் சுமித்திரா.

"உன் கழுத்திலும் கைகளிலும் கிடக்கும் நகைகள் அப்படியே இருக்கட்டும். இந்த மோதிரத்தை வித்து எனக்கு வைத்தியம் செய்ய ஏற்பாடு செய்தால் போதும்.

"அத்தை! இது என் மாமனார் மோதிரமாச்சே? அவர் நினைவாக நீங்கள்..." தடுமாறினாள், சுமித்திரா.

"அவர் நினைவு என் நெஞ்சிலே இருக்கு. அது போதும் இதை எடுத்துப் போய் வித்து, அந்தப் பணத்தை எனக்குச் செலவு செய்யுங்கள். மறுத்தால் நானும் சிகிச்சை செய்து கொள்ள மறுத்துவிடுவேன்" தானும் பிடிவாதமாகப் பேசிய படி மோதிரத்தை மருமகளின் கையில் வைத்து அழுத்தி மூடினாள்.

குழப்பத்துடன் கணவனும், மனைவியும் விழித்தனர்.

நாட்கள் விரைந்தன.

தீவிரச் சிகிச்சைக்கு பின் கமலம் ஆஸ்பத்திரியில் இருந்து வீட்டுக்குத் திரும்பினாள்.

முன் போல் கட்டிலில் படுத்துக்கொண்டு காலத்தை ஓட்ட அவள் விரும்பவில்லை. ஊட்டமான ஆகாரம், சிகிச்சை, அன்பான கவனிப்பு இவற்றால் அவள் விரைவில் எழுந்து நடமாடவும், வீட்டில் இருந்த சில்லறை வேலைகளில் பங்கு எடுத்துக் கொள்ளவும் முடிந்தது. கைக்குழந்தையைப் பார்த்துக் கொள்வது, வீட்டைக் கவனிப்பது, தேவைப்பட்ட போது

சமையலில் மருமகளுக்கு உதவுவது என்று தானும் வேலை களைப் பகிர்ந்துகொண்டு வாழ விரும்பினாள்.

வயதான பெரியவர்கள் குடும்பத்துடன் ஒட்டி வாழ விரும்பி உதவியாக இருக்கத் தலைப்பட்டால், யாரும் அவர் களைப் பாரம் என்று கருதமாட்டார்களே!

அன்புடன் ஒட்டிக்கொண்டு உதவிய மாமியார் மீது சுமித்திராவுக்குப் பரிவு பெருகியது.

நிரஞ்சனுக்கு மனத்திலே பெரும் நிம்மதி. கடைசிக் காலத்தில் தாயார் தன்னுடன் வாழ வந்து சேர்ந்து விட்டார்களே என்ற திருப்தி.

பாட்டிக்கும் பேரனுக்கும் இடையே நெருக்கம் அதிகமாகி யது. கமலம் எங்கே வெளியே சென்றாலும் கூடத் துணைக்குப் பேரன் சங்கர் புறப்பட்டான். பேரனின் பிஞ்சு விரலைப் பிடித்துக் கொண்டு வெளியே சுற்றிவரப் பாட்டியும் பெரிதும் விரும்பினாள்.

அன்றுமாலை பாட்டியும் பேரனும் கோவிலுக்குச் சென்றிருந் தனர். கடவுள் தரிசனம் முடிந்ததும் கால் ஆற வெளிப் பிராகாரத்திலே ஒருகல் படிமீது கமலம் உட்கார்ந்து கொண் டாள். குழந்தை சங்கர் பிரகாரத்தைச் சுற்றித் தன் தோழன் ஒருத்தனுடன் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தான். காற்று சுகமாக வீசிக்கொண்டிருந்தது. பேரன் மீது ஒரு கண்ணும், கோவிலுக்குள் வருகிறவர்கள் மீது ஒரு கண்ணுமாக உட்கார்ந்திருந்தாள் அவள்.

உள்ளே வந்த ஒரு தாடி மீசை ஆசாமியைக் கண்டு நெஞ்சு துணுக்குற்றாள்.

அவளைத் தாண்டிக் கொண்டு சென்ற அவனும் சட்டென்று திரும்பினான்.

"அம்மாவா?" கேட்டபடி அருகில் வந்து நின்றான் சுரேந் திரன். அவன் முகத்தையும், அழுக்குச் சட்டை வேட்டியையும் உற்றுப் பார்த்தாள், தாய்.



எப்படி இருந்தவன்? எப்படி வீணாகி விட்டான்? வேதனை மனத்தை ஊசியாகக் குத்தியது.

சட்டென்று அருகில் வந்து தரையில் உட்கார்ந்து கொண் டான் மகன்.

"இந்த இடத்திலே நான் சொல்றது உண்மையில் நீங்கள் நம்பணும் அம்மா. எல்லாம் கேள்விப்பட்டேன். நேரே நிரஞ்சன் வீட்டுக்கு வந்து உங்களைப் பார்க்க எனக்குத் துணிச்சல் இல்லை. இங்கேயாவது சந்திக்க முடிஞ்சுதே!" கரகரத்தது அவன் குரல்.

பெற்றவள் துயரப் பெருமூச்செறிந்தாள். "கெட்ட பழக்கங் களாலே வீடு- மனைவி- குழந்தை எல்லாத்தையும் இழந்து விட்டு நிக்கிறியே? என் வயிறு பத்தி எரிகிறது என்று துயரத்தோடு வெடித்தாள்.

"இப்போ நான் திருந்திட்டேன், அம்மா"

"உன்னை இந்தக் கோலத்திலே பார்க்க எனக்கு வெட்கமாக இருக்கு. போய் முதலில் இந்த மீசை தாடியை மழிச்சுண்டு சுத்தமான உடை உடுத்திண்டு நாளைக்கே, நேரே உன் தம்பியை அவன் ஆபிசிலே போய்ப் பார். நிரஞ்சன் ரொம்பத் தங்கமான வன். தன்னை வெறுத்து ஒதுக்கின என்னை வச்சுக் காப்பாத் துறான். கூடப் பிறந்து விட்டோம் என்ற ஒரு காரணத்துக் காகவே உனக்குக் கட்டாயம் உதவுவான்."

"அம்மா! எனக்காக ஒரு வார்த்தை தம்பியிடம் சொல்லுங்கள். கண்கள் கலங்கக் கேட்டுக் கொண்ட மகன் எழுந்து கோவிலுக்குள் சென்றான்.

கமலத்தின் அடிவயிற்றில் குடல் புரண்டது போன்ற வேதனை. தன் ஆசை மகனைக் கண்டு பாசத்திலே ஒரு கணம் தடுமாறிப் போனாள்.

வாழ்க்கை என்பது ஒரு பள்ளிக்கூடம். அநுபவம் என்பது அங்கே கிடைக்கும் பாடங்கள். சுரேந்திரன் நன்றாகக் கற்றுக் கொண்டு விட்டான். மருமகள் வித்யா? பேரனைப் பிடித்துக் கொண்டு நடந்தாள் கமலம்.

## 25

பகல் உணவின் போது சுமித்திரா மிகவும் உபசரித்துப் பரிமாறினாள்.

"உங்களுக்கு பிடித்த வாழைப்பூ வடைகறி, இன்னும் கொஞ்சம் போடட்டுமா?" அன்போடு மருமகள் குழைந்து கொண்டு கேட்டபோது, அவள் தலையாட்டி விட்டாள். ஒரு வாய் கூடுதலாகச் சாப்பிட்டு விட்ட களைப்பு, அன்று காலை நிரஞ்சன் வேலைக்குப் போகுமுன் வந்து சொன்ன நல்ல செய்தியைக் கேட்டபின் ஏற்பட்ட மன நிறைவின் அயற்சி, இரண்டு சேர்ந்து கொண்டதும் கமலம் அன்று பகல் தன்னையும் மறந்து உறங்கி விட்டாள்.

வேலைக்குப் போகும்முன் நிரஞ்சன் முதலில் தாயிடம் வந்து சொல்லிக் கொண்டு, பின்னர் தாரத்திடம் புன்னகை செய்து விடை பெற்றுக்கொண்டு கிளம்புவது வழக்கம். அது போல கைப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு முன்னறையில் இருந்த தாயிடம் வந்தான்.

"அம்மா! ராத்திரியே உங்ககிட்ட ஒரு நல்ல செய்தியைச் சொல்லணும்னு நினைச்சேன். நீங்கள் களைப்பாப் படுத்திருந்தீங்க.

"ரொம்ப முக்கியமா நிரஞ்சன்?" என்று பரபரப்புடன் வினவினாள் தாயார்.

"போன வாரம் அண்ணா ஒருநாள் காலை என்னைப் பார்க்க அலுவலகத்துக்கு வந்திருந்தார்.

கமலத்தின் நெஞ்சிலே ஒரு படபடப்பு. ஆனாலும் நிதானமாக மகனுடைய முகத்தை மெல்ல பார்த்தாள்.

"அப்படியா, என்னவாம்?"

"என் நண்பன் தொடங்கியிருக்கிற கம்பெனியில் அண்ணன் படிப்புக்கு ஏற்ற ஒரு வேலை காலியாக இருந்தது. அதுக்கு என்னை சிபாரிசு பண்ணச் சொன்னார்."



"அதுக்கு உன் அண்ணன் சரிப்பட்டு வருவானோ? சுரேந்திரனைவிடப் படிப்பில் மிஞ்சிய இளைஞர்கள் ஏராளமா இருக்காங்களோ?"

"இருக்காங்க. ஆனால் அண்ணனுடைய அனுபவம் அவங்களுக்கு இல்லை. அதனாலே அண்ணனுக்கு இந்த வேலையை என் பிரெண்டு கொடுத்துவிட்டார். நல்ல சம்பளம். நேத்துக் காலையிலே அண்ணன் வேலையிலே சேர்ந்துவிட்டார்.

"உம்..." என்றாள் கமலம். செய்தியைக் கேட்டதும் அவளுக்கு உண்மையில் நிம்மதி தான் ஏற்பட்டது.

"நிரந்தரமான வாழ்க்கை இனி அண்ணனுக்கு. அதனாலே அம்மா நீங்கள் கவலையை விடுங்கள்."

"இந்த அலங்கோல வாழ்க்கையை அவனாகத் தேடிக் கொண்டான். இப்ப சிறக்கிறது அவன் பொறுப்பு. எனக்கு இதிலே கவலை துளியும் கிடையாது." தாயார் மகனைப் பார்த்து மென்மையாகச் சிரித்தாள். ஆனால் அவள் கண்களில் நன்றி பனித்தது.

இருந்த தொழிலை இழந்து விட்டு வேலைக்கு அலைந்து கொண்டிருந்த மகனை கோயிலில் சந்தித்த நாளிலிருந்து அவள் மனம் அலை பாய்ந்து கொண்டிருந்தது. "மனைவி-குழந்தை, கார்-பங்களா என்று கண்ணியமாக வாழ்ந்த வாழ்க்கையை அழித்துவிட்டுப் பரதேசி போல் அலைகிறானே?" என்று சஞ்சலப் பட்டவள், இளைய மகன் சொன்ன நல்ல செய்தியைக் கேட்டு அவள் மனம் மகிழ்ச்சியில் நிறைந்து விட்டது. அந்த நிறைவுடன் சாப்பிட்டதும் தூக்கம் கண்களைச் சுழற்றியது.

"பாட்டி! ஒரு கதை சொல்லுங்கோ." கொஞ்சிக் கொண்டு படுக்கையில் தன் அருகே வந்து சுருண்டு கொண்டு உறங்க வந்த பேரனைக் கட்டியணைத்துக் கொண்டாள்.

"ஒரே ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தான்" கதையை உற்சாகத்தோடு தொடங்கிய பாட்டி பாதியிலே உறங்கிப் போனாள்! பேரனும் உறங்கி விட்டான்.

திடீரென்று வாசலில் அழைப்புமணி ஓங்கி ஒலித்தது. அவளுக்கு விழிப்பு ஏற்பட்டது. அருகில் தூங்கி கொண்டிருந்த குழந்தை மீது படாமல் மெல்ல எழுந்து உட்கார்ந்தாள்.

சுமித்திரா கதவைத் திறப்பது கேட்டது.

"அத்தையைப் பார்த்துட்டுப் போக வந்தேன்."

கமலம் அந்தக் குரலைக் கேட்டு பரபரத்துப் போனாள். அவிழ்ந்து தோளில் புரண்ட கூந்தலை அள்ளி முடித்துக் கொண்டு, அலங்கவிட்டிருந்த சேலையைச் சீராக்கிக் கொண்டு, சடுதியில் வெளியே வந்தாள்.

முன் அறையில் வந்து நின்ற வித்யாவை ஏற இறங்க எரிச்சலுடன் பார்த்தாள்.

"உட்கார்ந்து பேசுங்கோ. ரெண்டு பேருக்கும் தாகத்துக்குச் சாப்பிட ஏதாவது கொண்டுவரேன்" திரும்பிய சுமித்திராவைக் கையமர்த்தித் தடுத்தாள் கமலம்.

"இந்த வீட்டில் என்னை நீ பெரியவங்கன்னு மதிக்கிறாய், இல்லையா? அதட்டிக் கேட்டாள்.

சுமித்திரா ஒரு கணம் அரண்டு போனாள்.

"அப்படி ஏன் கேக்கறீங்க. அத்தை நீங்கள் வீட்டுக்குப் பெரியவங்கன்னு. நானும் உங்கள் மகனும் நிச்சயமாக மதிக்கிறோம்."

"அப்படின்னா நீ அப்பால் நகர்ந்துக்கோ. நான் இவள் கிட்டப் பேசிக்கிறேன்."

இதுவரை கமலத்துக்கு ஏற்படாத ஓர் ஆத்திரம் பூத உருவிலே பொங்கிக் கொண்டு வந்தது. முகமும் கண்களும் சிவக்க மூத்த மருமகளை எரித்து விடுகிறவள் போல் வெறித்தாள். "இங்கே எங்கே வந்தே?"

அச்சத்திலே வித்யா முகம் இறுகிப் போனாள், "உங்களைப் பார்த்து ஓர் உதவி கேட்க... திக்கினாள்.

"உதவியா? பதைபதைக்கிற வெயிலில் ஈவு இரக்கம் இல்லாமல் என்னைத் தெருவில் அனுப்பிச்சிட்டு இப்போ



இருக்காளா செத்தாளான்னு பார்க்க வந்தியா? சே, நீயும் ஒரு பெண் போல வெளியே வந்துட்டியே, வெக்கம்! இரைந்து கூச்சல் போட்டாள்.

சுமித்திரா இடை புகுந்து மாமியாரின் தோளைப் பிடித்துத் தழுவிக் கொண்டு, "அத்தை, விடுங்கள். வாசல் படியேறி வந்துவிட்டிருக்காங்க, அக்காவைத் திட்டாதீங்க, என்று பரிந்து பேசினாள்.

"அத்தை! நான் செஞ்சதெல்லாம் தப்பு, ஒத்துக்கிறேன். உங்கள் உதவியைத் தேடிக்கொண்டு இங்கே ஓடி வந்திருக்கிறேன். இரண்டு மாசமா வாடகை பாக்கி. இந்த வாரத்துக்குள்ளே கொடுக்காட்டிச் சாமான்களைத் தூக்கி வெளியிலே எறிஞ்சுடுவேன்னு வீட்டுச் சொந்தக்காரர் கத்துறார், பயமா இருக்கு."

"நேத்திக்கு ஒரு ஃப்ளாட்டு, இன்னிக்கு ஒரு வீடு, நாளைக்கு ஒண்டி குடித்தனம்னு நீயும் இந்த சில மாசங்களிலே வீடு விடா மாத்திட்டே. ஒரு குடும்பப் பெண்ணுக்கு இதெல்லாம் நல்லாவா இருக்கு? இப்ப இங்கு வந்து நிக்கிறே. எங்கிட்ட ஏது பணம்? இருந்ததையெல்லாம் இரண்டு பேரும் சுரண்டிக் கொண்டு விட்டீங்களே" சீறினாள் மாமியார்.

"நீங்கள் சொன்னால் சுமித்திரா கொடுத்து உதவுவாள்."

"அவளைக் கேட்க உனக்கு முகம் இருக்கா? எனக்கு உன் துணிச்சலை நினைச்சா, ரொம்ப வேதனையா இருக்கு. வேடிக்கையாகவும் இருக்கு. மனம் மாறி என் சின்ன மகனோட நான் சேர்ந்துடக் கூடாதுன்னு நீ எத்தனை பெரிய வேலி போட்டே? இப்போ அதைத் தாண்டிக் கொண்டு உள்ளே வர நீயே ஆசைப்படறே? பேஷ், உன் அண்ணன் இரண்டு பேர் இருக்காங்களே, அவங்களை உதவி கேட்கிறது தானே?" படபடத்தாள் கமலம்.

கண்களில் பொங்கிய நீரை மெல்லத் துடைத்து கொண்டாள், வித்யா.

"கல்யாணமான பின்பு வாழ்வுக்கும் தாழ்வுக்கும் புக்கந்தானே ஒரு பெண்ணுக்கு அடைக்கலம்?"

"அதை அடைய உனக்குத் தகுதியில்லையே?" கமலம் வெடித்தாள், கோபத்துடன்.

"அத்தை!" விம்மினாள் பேச முடியாத வித்யா.

"நடந்ததையெல்லாம் மறந்துவிட நாங்கள் தயார். ஆனால், அதுக்கு உண்டான தகுதியோட நீ உள்ளே வந்தால், வரலாம். நாங்களும் உதவி செய்ய முடியும். இல்லாவிட்டால்..." என்று கூறிவிட்டு முடிக்காமல் திரும்பினாள் கமலம்.

ஓடிவந்து, "அத்தை!" என்று அவள் கைகளைப்பற்றிக் கொண்டு குமுறி அழுது விட்டாள் வித்யா.

சுமித்திராவுக்குப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அதே சமயம் குறுக்கே பேச அச்சமாகவும் இருந்தது.

"வீரேந்திரன் இப்போ ஒரு நல்ல வேலையில் இருக்கிறான். எல்லாத்தையும் ஒழிச்சிட்டு, நல்லவனாக முயலுகிறான். நடந்ததை ரெண்டு பேரும் மறந்துட்டு கணவன் மனைவின்னு ஒன்றுபட்டால் தாராளமாக இந்த வீட்டுக்குள்ளே வரலாம். இல்லாவிட்டால், இந்த வீட்டு வாசல்படிகளைக்கூட நீ மிதிக்கக்கூடாது. அந்த அருகதை இல்லைன்னு நானே கதவை உன் முகத்தெதிரே சாத்திடுவேன் வித்யா, தெரிஞ்சுக்கோ."

உள்ளே விரைந்து விட்டாள் கமலம்.

ஓரகத்தி இருவரும் ஒருவரை ஒருவர் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டனர்.

சில நாளைக்குப் பின்னர், ஞாயிற்றுக்கிழமை.

வீட்டு முன் அறையில் இருந்த தாயிடம் நிரஞ்சன் தயக்கமாக வந்தான். அவனைத் தொடர்ந்து அருகில் வந்து நின்றாள், சுமித்திரா.

"எங்கள் நிறுவனத்திலேயே எனக்குக் கடன் உதவி கிடைச்சதினாலே உங்களுக்குச் செய்ய வேண்டிய சிகிச்சைக்கு அப்பாவின் மோதிரத்தை விற்கலே நீங்கள் அவர் நினைவாக



வச்சுக்கோங்க" அந்த பிளாஸ்டிக் பேழையை அவள் எதிரே முக்காலி மீது வைத்தான்.

வியப்புடன் நிமிர்ந்தாள் அன்னை.

"இன்னிக்கு அண்ணனுக்கும், அண்ணிக்கும் நம்ம வீட்டிலே ஒரு சின்ன விருந்து. அழைச்சிருக்கோம். அவங்க ரெண்டு பேரும் ஒண்ணாச் சேர்ந்துட்டாங்க. வாடகை பாக்கியைக் கொடுத்துட்டு, அதே வீட்டிலே குடித்தனம் செய்றாங்க."

கணவன் சொல்ல மெல்லியதாகச் சிரித்தாள் சுமித்திரா. அவள் இடுப்பில் குழந்தை இருந்தான்.

நம்பிப் பெருக்கில் கமலத்தின் கண்கள் கலங்கிப் போயின. உணர்வுகள் தொண்டையை இறுக்கின. மௌனமாகத் தலையை மகிழ்ச்சியுடன் அசைத்தாள்.

சிறிது பொழுதில் பேச்சும் சிரிப்புமாக அந்த வீடு அமர்க்களப்பட்டது. உணவுக்குப் பின் எல்லோரும் முன் அறையில் அமர்ந்தனர்.

"நிரஞ்சன், இப்படி வா" என்று அழைத்தாள், கமலம். அந்தப் பிளாஸ்டிக் பேழையில் இருந்து மோதிரத்தை எடுத்தாள். உங்கப்பா முகத்தை நீ பார்த்தது இல்லை. அவர் நினைவாவது உன்னோட இருக்கட்டும். இந்த மோதிரத்தை நீ வச்சுக்கோ. என் பரிசு" என்று அவன் கையில் அதைக் கொடுத்தாள்.

"வித்யா? என்ன, அப்படிப் பார்க்கிறே? உங்களுக்கும் ஒரு பரிசு தரப்போகிறேன். அந்த மோதிரத்தைவிட மிக உயர்ந்த பரிசு. என் அறிவுரையைக் கேட்டுக்கோ" மெல்லச் சிரித்தாள்.

வித்யா வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள்.

"கணவன்- மனைவி, குழந்தைகள் எல்லோரும் எந்த நிலையிலும் பிரியாமல் ஒண்ணாக வசிக்க மனத்தைப் பக்குவப் படுத்திக் கொண்டு, ஒருத்தருக்கு ஒருத்தர் ஆதரவாக இருக்கும் போதுதான், அதை வீடு என்கிறோம். ஆளுக்கு ஒரு மூலையாகத் தன்னலத்துடன் பிரிந்து சிதறி விட்டால் அது வெறும் கூடு.

கூட்டுக்கு வெளியே திரியும் பறவையாக இல்லாமல், நீங்கள் மூணுபேரும் ஒரு வீட்டுக்குள்ளே வசிக்கிற மகிழ்ச்சியான நிறைவான குடும்பமாக இருக்கணும். இதுதான் என் புத்திமதி வாழ்த்துக்கள்." உணர்ச்சி வசப்பட்டு சொன்னாள் கமலம்.

"இனி அப்படியே இருப்போம்." என்று சுரேந்திரனும் வித்யாவும் சொன்னார்கள்.

அருகில் வந்து நின்ற இரு மருமகள்களையும் இரு கரங்களால் தழுவிக் கொண்டு அவள் சிரித்தபோது, பேரன் சங்கரன் தன் விளையாட்டுக் காமிராவுடன் ஓடி வந்தான்.

"எங்கே, பாட்டி, பெரியம்மா, அம்மா, தங்கச்சி, எல்லாரும் கொஞ்சம் சிரியுங்கோ! கிளிக்... கிளிக்..." என்றான் வேடிக்கையாக.

அந்த மூவரும் சிரித்து விட்டனர். அவர்களுடன் மற்றவர்களும் கலந்துகொண்டு சிரித்த சிரிப்பில் வீடு கலகலப்பாகி நிறைவுற்றது.

P. 152
7/2/66

முற்றும்